சௌந்தர பத்திரிகை

8

[illegible], 1934

TL
4592 m211, N27 5m
N34.8.1
208441

# மித்திரன் வாழ்த்து

ழைப்பந்தல், கு. தில்லைநாயக முதலியாரவர்கள் இயற்றியது

நிலைமண்டில வாசிரியப்பா

அஞ்சிறைக் கிளிகாள்! அஞ்சிறைக் கிளிகாள்!
செஞ்சொற் பேசும் அஞ்சிறைக் கிளிகாள்!
கானக் குறவர் கன்னியை வேட்ட
ஞானக் குழகன் நாண்மல ரடியை
மறவா தென்று மனத்திற் கொள்ளும்
உறவோ ராகிய வுயர்செங் குந்தர்
மித்திர னாகி மிளிருங் குழவி
இத்துட னேழாண் டினிது முடித்து
எட்டா மகவை யெய்துகின் றனனால்
கிட்டி நீங்கள் கிளர்பல் லாண்டு
புலத்தின் மிக்கோர் போற்றச் சிறந்து
நலத்தைப் பெருக்கி ஞாலத் திருந்து
வாழ்க நம்மித்திரன் வாழ்க வாசிரியர்
வாழ்க கட்டுரைகள் வழங்கு பேரறிஞர்
வாழ்க வாதரிப்போர் வாழ்க செங்குந்தர்
வாழ்க சங்கமென வாழ்த்துவீர் நின்றே.

12 APR 1934
MADRAS

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை | ... | 3 |
| நினைவுக் குறிப்புகள் | .... | 9 |
| பனித்தாய் அல்லது ஹிமகிரீ அம்மாள் | ... | 17 |
| உலகத்தின் 17 குபேரர்கள் | ... | 23 |
| சமூக சீர்திருத்தமும் தொழில் தேர்ச்சியும் | ... | 24 |
| செங்குந்த யாத்திரைவாசி | .... | 28 |
| எனது ஜென்ம விரோதிகள் | ... | 32 |
| நமது அதிர்வெடி | .... | 36 |
| ஆன்றோர் அமுத மொழி | .... | 38 |
| ஆடுகளம் | ... | 39 |
| விகடத் துணுக்குகள் | ... | 41 |
| மானவஸீக தபால் | .... | 42 |
| தமிழர் மாண்பு | ... | 45 |
| சகோதரனும் சகோதரியும் திருமண தம்பதிகள் | ... | 48 |
| நமது தபால் பெட்டி | ... | 49 |
| ஸமர்ப்பயாமி | .... | 52 |
| ஒரு வேண்டுகோள் | ... | 56 |
| அதிசயம்! ஆற்புதம்! ஆச்சரியம்! | ... | 57 |
| வர்த்தமானம் | ... | 58 |



# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாத வெளியீடு

தொகுதி—அ] ஸ்ரீமுக௵ தை௴ [பகுதி


### கடவுள் வணக்கம்

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே

(கந்தரலங்கார

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### வணக்கமும், வாழ்த்தும்

செல்வச் சிரஞ்சீவி—நமது திருமகன்—செங்குந்த மித்திரனுக்கு இத்தைத் திங்களில் எட்டாம் ஆண்டு துவக்குகின்றது. பல இன்னல்களிடையே ஏழாண்டுகள் கழிந்து விட்டன. துவக்கும் ஆண்டு அவனுக்கு வெற்றியும், மங்களகரமும் நல்கவேண்டுமென்பது எமது உள்ளம் கனிந்த அவா. எம்மைப் போன்றே நீங்களும் அளப்பரும் ஆர்வத்தில் முழுகியிருப்பீர்களென்பது நிச்சயம். நமது அவாவினை—சுயநலமற்ற ஆர்வத்தினை நிறைவேற்ற வேண்டுவது முழு முதற் செழுஞ்சுடரின் கடனாகும்.

'தன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே

என்பது திருமறை. பணி செய்வது அடியவர் கடமை; பாதுகாப்பது ஆண்டவன் கடமை.

கடமை இருவருக்கும் பொது. ஆண்டவன் ஓயாது பணியாற்றிய வண்ணம் இருக்கிறான். நமது மித்திரனும் தனது கடனாற்றுதலில் பின்னடைய வில்லை. நாமும் நமது கடமையைத் தளராது புரிதல் வேண்டும்.

கடந்த ஏழு ஆண்டுகளில் நமது செல்வன் ஆற்றிய கடமைகள் பல. அவற்றை ஒழுங்குபடுத்திக் கூறுவதும் இயலாததாகும்.

நம்மை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வைத்தவன் யார்? நமது குலப்பிரமுகர்கள்—செல்வந்தர்கள்—அறிஞர்கள்—அபிமானிகள் அனைவரையும் ஒருங்கு சேர்த்து அளவளாவிக் குதூகலிக்கச் செய்தவன் யார்? நமது உள்ளத்தில் ஒற்றுமை உணர்ச்சியைத் தோற்றுவித்தவன் யார்? காலச் சக்கரத்தின் அதிவேகமான சுழற்சியில் சிக்கி நம்மவர்கள் நிலைதடுமாறிப் போகாதவாறு அவசியமான சீர்திருத்தங்களை ஆய்ந்து விளக்கி வைத்தவன் யார்? மக்களனைவரும் திகைப்புறுமாறு நான்கு மகாநாடுகள் கூடுதற்குக் காரணமாயிருந்தவன் யார்? நூற்றுக் கணக்கான கிளைச்சங்கங்கள் தோன்ற மூலபுருடனாயிருந்தவன் யார்? குடவிளக்கங்களாய் அரங்கத்திலேயே மங்கிக் கிடந்த அறிஞர்களையும் — செல்வவான்களையும் அம்பலத்திற் கொணர்ந்து சமூகத்திற்குப் பெரும்புகழ் தந்தவன் யார்? உலகத்தின் பல கண்டங்களிலும் நம்மவர்கள் வசிக்கிறார்களென்பதை நமக்கு அறிவுறுத்தியவன் யார்? அவர்களோடு மாறாத் தொடர்பு கற்பித்தவன் யார்? இவ்வளவும் நமது திருமகனது திருவிளையாடல்களன்றோ?

இவ்வளவு உபகாரங்களைச் சில ஆண்டுகளுள் புரிந்த மித்திரனுக்கு நாம் என்ன கைம்மாறு ஆற்றினும் ஈடாகாது. இதனை உணர்ந்தவர்கள் எத்தனை பேர்? உணர்ந்தும் உடனே மறந்தவர்கள் எத்தனை பேர்? இவர்களனைவரையும் நீக்கிப் பார்க்கின் அவனது நன்றியை மறவாது கடனாற்றுவோர் வெகு சொற்பமேயாகும். ஏழு இலட்சம் செங்குந்தர்களில் மூவாயிரத்துக்கும் கீழ்ப்பட்டவர்களே யாவர்.

இம்மூவாயிரம் பேர்களாவது மித்திரனுக்குச் சிறிது முனைந்து உபகாரம் புரிவதெனக் கங்கணம் கட்டிக்கொள்வரா



ரின் சில மாதங்களுக்குள் அவனது நிலை பெரிதும் மாற்றமடையலாம். பல அழகிய படங்கள் அவனை அலங்கரித்து நிற்கும்; அரிய கட்டுரைகள் அவனை சோபிக்கச் செய்யும்.

தாங்கள் ஆற்ற வேண்டிய உபகாரமெல்லாம் ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாதாரைச் சேர்த்துத் [illegible]ருதல், இப்பொழுதுள்ளவர்களிடம் சந்தாவை வசூலித்து அனுப்புதல், பரம்பரைச் சந்தாதாரராகச் சேரக்கூடியவரனைவரையும் தாமதமின்றிச் சேர்த்து விடுதல், சிறிய கிராமங்களாயிருப்பின் ஊர்ப் பொதுவிலேனும் ஒரு பரம்பரைச் சந்தா சேர்க்க முயலுதல், தங்கள் சந்தாவை உடனே பாக்கியின்றி அனுப்பிவைத்தல் ஆகியனவே யாகும். இவ்வுதவிகளைத் தயக்கமின்றிச் செய்வீர்களென்ற மு[illegible] நம்பிக்கை எமக்கு உண்டு. இந்த நம்பிக்கையோடுதான் நாம் உழைத்து வருகிறோம்.

இம்மாத முதல் மித்திரனை பல வகையிலும் சிறப்புற அழகுபடுத்தி அனுப்பத் தீர்மானித்திருக்கிறோம். அவனது பருத்த உருவம் இம் மாதத்தில் மாறிவிட்டது. அழகிய யௌவன உருவம் பெற்றிருக்கிறான். அவன் சரீரத்தில் நல்ல தேஜஸ் பிரகாசிக்கிறது. ஏழாண்டுகளுக்குள் சரீரம் மெலிந்து, முகம் வாடி கிழத்தன்மை பட்டிருந்த மித்திரன் சபாபதி வள்ளலார் வழங்கிய உயரிய டானிக் மாத்திரைகளால் இளமையும், தேஜஸும் பெற்று புதியவனே போல் வெளிவருகின்றான். அவன் பக்கத்தில் பலர் வெற்றிச் சின்னங்களை ஊதி வருகின்றனர்.

எதிரில் அவனுக்குக் கைலாகு கொடுக்கப் பலர் காத்திருக்கிறார்கள். தம் ஆயுள் பரியந்தம் அவனுக்கு உதவி புரிவதென அவர்கள் தீர்மானித்து விட்டனர். நீங்களும் அவர்களோடு கலந்து மித்திரன் உயர் நிலை எய்தத் துணை புரியுங்கள். இவ்வாண்டில் அவன் சிறப்புகள் பல பெறுவானாக.

நாமனைவருமாக, மித்திரனுக்குப் பல இடையூறுகளைத் தந்த சென்ற ஆண்டிற்கு வணக்கம் செய்து, நலம் பல புரியுமாறு வரும் ஆண்டிற்கு வாழ்த்து கூறுவோமாக.

## தமிழன்பர்களா? தமிழர்களா?

பன்னெடு நாட்களுக்கு முன் தமிழன்னை இழந்து விட்ட அரியாசனத்தை மீண்டும் பெறப்போகிறாளென எண்ணிச் சில தினங்களுக்கு முன் அனைவரும் குதூகலித்தனர். அதனைப் பெறுதற்குத் தமிழ்ப் புதல்வரனைவரும் தோள் கொட்டிப் [illegible]பட்டுவிட்டனரென நினைத்து மனங் குளிர்ந்தனர். எங்

அதைப் பற்றிய எழுத்து. இவ்வாறாயின் உண்மையில் தாய்ப் பற்றுடையார் எவரே மகிழா திருக்க முடியும்?

டிஸம்பர் மாதம் 22-ந் தேதி வரை மகிழ்ச்சியும், குதூகலமும், கொண்டாட்டமுமா யிருந்தது. சிற்சில இடங்களில் மட்டும் 'இது வீண் ஆரவாரம். இதில் தமிழர்கள் கலந்து கொள்வது கூடாது. தமிழர்களுக்குத் தக்க கௌரவம் இதில் அளிக்கப்பட வில்லை' எனக் கூறப்பட்டது. இதனால் அநேகருடைய உள்ளத்தில் குழப்பம் ஏற்பட்டது.

23-ந் தேதி பிறந்தது. பச்சையப்பன் கல்லூரி மண்டபம் குறித்த நேரத்திற்கு முன்பே நிறைந்து விட்டது. தமிழன்பர்கள் யாரைப் புறக்கணித்து ஒதுக்க எண்ணினார்களோ அவர்களே அங்கு அதிகமாய் வந்திருந்தனர். உண்மைத் தமிழர்கள் கூட்டத்தைக் கண்டதும் பெரிதும் ஏமாற்ற மடைந்தனர். தமிழர்களில் சிறந்த அறிவாளிகள் பலர் அங்கு காணப்பட வில்லை. அவர்களில் அநேகருக்கு அழைப்புத்தாளே அனுப்பப் படவில்லை என்பது பின்னால் தெரியவந்தது. தமிழன்பர்களுக்கு ஆரம்பத்திலேயே இத்தகைய குறுகிய புத்தி ஏற்பட்டதின் காரணம் தெரியவில்லை. இதனால் பலரது உள்ளத்தில் சந்தேகமும், வெறுப்பும் உதிக்கலாயின.

அதனால் மகாநாட்டின் பிள்ளையார் குட்டிலேயே தடைகள் ஏற்படத் தொடங்கின. தலைவர் தேர்தலில் பலத்த ஆட்சேபங்கள் கிளம்பின. சமதர்மிகள், தொழிலாளர்கள், சுயமரியாதைக்காரர்கள் பலரும் தங்கள் சந்தேகங்களை மகாநாட்டு ஆரம்ப முதலாகவே சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் அறிவித்துக் கொண்டு வந்தனர். இவர்களனைவரும் அன்று மகாநாட்டில் கலந்து கொண்டிராவிட்டால் மகாநாடு அவ்வளவாக ருசித்திருக்காதென்பதே எல்லாருடைய அபிப்பிராயமு மாகும். அல்லாமலும் அன்று இவர்கள் நேர்மையும், ஒழுங்கும், அமைதியும், அறிவும் காட்டி நடந்து கொண்டதை எவரும் புகழா திருக்க முடியாது.

எவ்வளவு நேர்மையாக நடந்து கொண்டாலும் தமிழன்பர்கள் இவர்கள் மீது பூரணமாய்ச் சந்தேகம் கொண்டு விட்டதாகவே தெரிகிறது.

மகாநாட்டில் உருவாக்கப்பெறும் தீர்மானங்களைச் செயலில் புகுத்த ஓர் சங்கம் அமைப்பதென்று நிச்சயித்து, அதற்கான விதிகளும் விஷயாலோசனை சபையில் அமைக்கப்பட்டது. அத்தீர்மானம் பகிரங்க மகாநாட்டில் கொண்டுவரப்பட வில்லை.



அதன் ரகசியமென்ன? தமிழன்பர்களுக்கு விரோதமாகத் தமிழர் எவரேனும் வந்து புகுந்துகொள்ளப் போகிறாரென்ற பயத்தினால் செய்யப்பட்ட சூழ்ச்சி என்று கூறுவதைத் தவிர வேறு என்ன சொல்லக்கூடும். இவ்வளவு சந்தேகங்களுடன் தொடங்கப் பெறும் காரியம் நிறைவேறுமா என வாசகர்களே முடிவு கட்டிக் கொள்ளுங்கள்.

இரண்டு தினங்களும் மகாநாடு ஒருவாறு நடந்துவிட்டது. அநேக தீர்மானங்கள் உருவாக்கப் பெற்றுள்ளன. மகாநாட்டு நிர்வாகிகள் இழைத்த பல தவறுகளால் அவை ஒன்றும் தமிழன்னைக்குப் பயன்படப் போவதில்லை. சில தனிப்பட்ட மனிதர்களுக்குமட்டும் பெரும் பயன்தரக் கூடும்.

அநேகரின் அதிருப்தியோடு தமிழன்பர் மகாநாடு நடந்ததாயினும், அதை ஈடுசெய்ய, பொங்கற் புதுநாளன்று தமிழ்த் திருநாள், மகாநாட்டுத் தலைவரின் தலைமையின்கீழ் தமிழர்களால் கொண்டாடப்பெற்றது பெரிதும் மகிழ்ச்சிக் குரியதாகும். இதில் ஒரு விசேடம் யாதெனில் அநேகமாதங்களாக விளம்பரப் படுத்தப்பட்ட தமிழன்பர் மகாநாட்டுக்கு வந்த அன்பர்களைக் காட்டிலும் விளம்பரமே இல்லாத இத்தமிழ்த் திருநாளுக்கு வந்தவர்களின் தொகை மிக அதிகமாயிருந்ததேயாகும்.

தமிழர்களே! விழித்தெழுங்கள். உங்கள் வேற்றுமைகளைக் களைந்தெறிந்து தமிழன்னையின் பொருட்டு ஒற்றுமைப்பட வேண்டிய காலம் நெருங்கி யிருக்கிறது.

தமிழன்னையின் பொருட்டு ஒற்றுமைப்படுங்கள். தமிழ்த் தேவிக்கும், தமிழர்களுக்கும் தொண்டுபுரிய ஓர் சங்கம் காண முயற்சி செய்யுங்கள். அச்சங்கத்தில் தமிழரனைவரும் திரண்டு வந்து அங்கத்தினர்களாகச் சேருங்கள்.

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழர்கள்!

## ஸ்ரீ வேலாயுத முதலியார் உருவப்படத் திறப்பு

திருவாரூரில் நடைபெற்ற நமது நான்காவது மகாநாட்டின் கொடியினை உயர்த்திய பெரியாரும், ஐந்தாவது மகாநாடு தமது ஊரில் மிகச் சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற ஆவல் நிறைந்த உள்ளத்தினருமாகிய குடியாத்தம் தாலூக்கா போர்டு தலைவர் உயர்திரு. மா. ஆ. வேலாயுத முதலியாரவர்கள் உருவப் படங்கள் முனிசிபல் ஆபீசிலும், தாலுக்கா போர்டு கட்டடத்

திலும் இம்மாதம் 7-ம் தேதி, முறையே தமிழ்நாடு ஆசிரியர் டாக்டர் வரதராஜுலு நாயுடுகாருவினுலும், இந்தியா சட்ட சபைத் தலைவர் சர். சண்முகம் செட்டியார் அவர்களாலும் திறந்து வைக்கப் பெற்றன என்பதைக் கேட்டு அளவு கடந்த மகிழ்ச்சி யுறுகின்ேறாம். இதைப் பற்றிய முழு விவரமும் அடுத்த மித்திரனில் குறிக்கப் பெறும். ஸ்ரீ முதலியா ரவர்கள் சமூக முன்னேற்றத்தில் எவ்வளவு ஆர்வம் நிரம்பியவர்களோ அவ்வளவு பொது நல சேவையிலும் நிரம்பியவர்கள். தூய்மையான ஒழுக்கமும், பெருந்தன்மையான குணமும், சாத்வீகத் தன்மையும், இரக்க உள்ளமும் உடையவர்கள். தமது மிகுந்த வியாபார வேலைகளி னிடையே பல பொது ஸ்தாபனங்களிலும் தொண்டாற்றி வருபவர்கள். தமது சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவர்களில் ஸ்ரீ முதலியார் ஒருவர் என டாக்டர் நாயுடு தமது உரையில் குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

இவரது படங்கள் இரு பெருந்தலைவர்களால் திறந்து வைக்கப்பட்டது பெரும் பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். ஸ்ரீ முதலியா ரவர்கள் முனிசிபல் சேரமனாக இருந்து ஆற்றிய தொண்டிற்காகவும், தாலுக்கா போர்டு தலைவராக இருந்து ஆற்றும் தொண்டுக்காகவும் அவரது படங்கள் இரண்டுகட்டடங்களிலும் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

பொதுஜன சேவையிலும், சமூக முன்னேற்றக் கிளர்ச்சியிலும் இளைஞர்கட்கு வழிகாட்டியாக இருந்து பல சிறப்புகளுடன் அவர் நெடுநாள் வாழ இறைவன் அருள் சுரப்பானாக.

## அதே கவலை எமக்கும் உண்டு

மகாநாட்டை இந்தத் தை மாதத்திலேயே நடத்த வேண்டுமெனவும், இதுதான் நம்மவர்கள் திரண்டுவருதற்கு ஏற்ற சமயம் என்றும் பல அன்பர்கள் நமக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவற்றில் ஒன்று மற்றொரு பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நாமும் இதை நன்கு அறிவோம். இதனாலேதான் இயன்றவரை தை மாதத்திலேயே ஒவ்வொரு மகாநாட்டையும் நடத்த முயன்றிருக்கிறோம். ஆனால், எதிர்பாராத தடைகள் சில சமயம் குறுக்கிடுகின்றன. அவற்றை நீந்திச் செல்லும் ஆற்றல் நமக்கு இல்லை. எனவே குறித்தபடி நடத்த முடியாமல் சில சமயங்களில் தடைப்படுகின்றன.

நமது ஐந்தாவது மகாநாட்டை எப்படியேனும் தை மாதத்தில் நடத்திவிட வேண்டுமென சில மாதங்கட்கு முன்பே



வடாற்காடு ஜில்லா வாசிகளோடு கடிதப் போக்குவரத்து நடத்தினோம். அவர்களும் மிக விருப்பத்துடன் சம்மதித்தார்கள். ஆனால், தடுக்கமுடியாத காரணத்தால் முக்கியஸ்தர்களில் சிலர் இதில் முனைந்து வேலை செய்தற்கு இயலாமற் போயிற்று. எனினும், இனி சற்றும் தாமதிக்காமல் மகாநாட்டு வேலைகள் தீவிரமாய் துவக்கப்படுமென்பதையும், மாசி கடைசியில் அல்லது பங்குனி ஆரம்பத்தில் மகாநாடு நிச்சயமாய் நடத்தப்படுமென்பதையும் வடாற்காடு ஜில்லா அன்பர்கள் சார்பாகவும் தலைச் சங்கத்தின் சார்பாகவும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கூடிய விரைவில் வரவேற்புக் கழகம் அமைக்கப்பட்டு வடாற்காடு ஜில்லா முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருவதால், அந்த ஜில்லாவின் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள குலாபிமானிகள் அவர்களுக்கு ஊக்கங்காட்டி உதவிபுரிய வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

---

# நினைவுக் குறிப்புகள்

### உஸ்மான் யோகம்

சுக்கிரதிசை என ஒன்று இருக்கிறதென்பதை சென்னை அரசாங்க உள்நாட்டு மந்திரி கான்பகதூர் சர். முகமது உஸ்மான் சாகிப்பகதூர் கே. எஸ். ஐ. ஈ. அவர்களைப் பார்த்து நாம் நிச்சயித்துக்கொள்ளலாம். அவருடைய உத்தியோக காலமானது ஒவ்வொரு ஆண்டாக நீடிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளில் முடியவேண்டிய பதவி எட்டு ஆண்டுகளுக்கு மேலும் வளர்ந்து வந்தது. சமீபத்தில் சென்னை அரசாங்கம் சர். உஸ்மான், சர். கிருஷ்ணன் நாயர் இவர்கள் பதவியை நீட்டித்ததும், அவ்வாறு நீட்டித்ததற்குக் காரணம் அடுத்த ஆண்டில் சீர்திருத்தம் வழங்கப்படுமெனக் கருதுவதால் அச்சமயம் புதிய உம்மெனா மூஞ்சிகள் இருப்பதைக் காட்டிலும் பழம் பெருச்சாளிகள் பதவி வகிப்பது நல்லதெனக் கருதியதனாலாகுமென்று கூறப்பட்டதும் நேயர்களுக்குத் தெரியும். சர். உஸ்மான் யோகம் அதோடு நிற்கவில்லை.

சென்னை கவர்னர் சர். ஜார்ஜ் ஸ்டான்லி வைசிராயாக வேலை பார்க்கும் காலத்தில், சர். உஸ்மான், சென்னை ஆக்டிங் கவர்னராக வேலைபார்க்க நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுகண்டு நமது மாகாண வாசிகள் பெருமகிழ்ச்சி யடைவார்களென்று நினைக்கிறோம்.

ராஜீயக் கொள்கைகளில் மாறுபட்ட அபிப்பிராயமுடைய சிலருக்கு இந்நியமனத்தைக் கேட்டதும் தலை சுழலுமாயினும் சென்னை மாகாணத்தைச் சார்ந்த இந்தியரொருவர் அதே மாகாணத்தின் கவர்னராய் நியமிக்கப் பெற்றிருப்பதைப் பார்த்து நியாய புத்தியுடைய எவரும் மகிழ்ச்சி யடையாதிருக்க முடியாது.

சர். உஸ்மான் 1884-ம் ஆண்டு பிறந்தவர். கிருஸ்துவக் கல்லூரியில் பயின்று பி. ஏ. பட்டம் பெற்றார். பல வருடங்கள் கார்பொரேஷன் அங்கத்தினராயும், மாகாண கௌரவ மாஜிஸ்டிரேட்டாயு மிருந்தார். 1921-ல் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1924-ல் சென்னை ஷெரீபாக நியமிக்கப்பட்டார். 1924-25-ல் கார்பொரேஷன் தலைவராக இருந்தார். இவருக்கு 1920-ல் கான்சாகிப் பட்டமும், 21-ல் கான் பகதூர் பட்டமும், 23-ல் கெய்ஸரி ஹிந்த் பதக்கமும், சர். பட்டமும் கிடைத்தன. 26-ல் சென்னை அரசாங்க நிர்வாக சபை மெம்பரானார்.

இவர், சென்னை நகர நிர்மாண டிரஸ்டு மெம்பராகவும் இந்திய வைத்திய முறைகளின் கமிட்டித் தலைவராகவும், முஸ்லீம் அஞ்சுமன் தலைவராகவும், கலால் லைசென்ஸ் போர்டு அங்கத்தவராயும், சென்னை சிசு சம்ரட்சண சங்கத் தலைவராயும், விடுதலை பெற்ற கைதிகள் சங்கத் துணைத்தலைவராயும், குஷ்டரோகிகள் கஷ்ட நிவாரண சங்கத் தலைவராயும், தென்னிந்திய முஸ்லீம் கல்வி சங்கத் தலைவராயும் இருந்து பொது ஜனத்தொண்டு ஆற்றியுள்ளார். இளமை முதலாகவே உள்ளத்தில் பொதுநல சேவைக்கு உழைக்கும் ஆர்வம் நிறைந்து ததும்பிய இவருக்கு, இன்று கவர்னர் பதவி வழங்கப்பட்டிருப்பது அதன் பலன் எனவே நினைக்கிறோம். சர். உஸ்மான் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து சென்னை மாகாணத்திற்கு நல்ல கீர்த்தியைத் தருமாறு இறைவன் அருள்புரிவானாக. அகில உலக செங்குந்த மகாஜனங்களின் ஸ்தாபனமாய் விளங்கும் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வாழ்த்துதலையும், நன்றி யறிதலையும் சர். உஸ்மானுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## பிரம்மஹத்தி தோஷம்

'ஹூம், உன்னைச் சும்மா விடமாட்டேன். இதோ கொலை செய்து விடுகிறேன்' என்று, கொலையாளிகளை விடாது பின்பற்றிச் செல்லுமாம் பிரம்மஹத்திகள்.



சில வெறிபிடித்த இளைஞர்கள் அவ்வப்போது நிகழ்த்தும் கொலைகள் இந்தப் பிரம்மஹத்தி தோஷத்திற்கு நம்மை ஆளாக்குகின்றன. அதனால் தேச முற்போக்கு தடைப்படுவதோடு, நிறைந்த பொருட் செலவும் இந்தியாவின் தலை மீது சுமத்தப் படுகிறதென்பதை ஒவ்வொரு கொலையினாலும் நாம் நன்கு அறிந்து வருகிறோம். கொலை செய்வதை கண்டிக்காத அறிஞர் எவரும் இலர். காந்தி யடிகள் முதல் பலரும் அதனை வெறுக்கின்றனர். வெள்ளையரைக் கொலை செய்யவேண்டுமென்ற எண்ணம் இளைஞர்கள் உள்ளத்தில் தோற்றியது இந்தியாவின் சாபக்கேட்டின் குறியெனவே நினைக்கிறோம்.

சில மாதங்கட்கு முன், மிதுனபுரி மாஜிஸ்ரேட் ஸ்ரீ பர்ஜ என்னும் ஆங்கிலேயர் கொலை செய்யப்பட்டது நாம் அறிந்ததே. அந்த கொலைத் தோஷம் நம்மை இப்போது தலைமீதேறி அமுக்குகின்றது. பர்ஜ கொலையினால் அவரது குடும்பத்திற்கு நேர்ந்த நஷ்டத்தை ஈடுசெய்ய பெருந்தொகை உதவி செய்வதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

பர்ஜ மனைவிக்கு பரிகார நிதியாக 450 பவுனும் இதுவன்றி வருடந்தோறும் 558 பவுனும் உதவுவதென்றும், அவரது மகனுக்கு 12 வயது வரை 99 பவுன் வீதமும், அதற்குமேல் கல்யாணம் ஆகும் வரை 174 பவுன் வீதமும் ஆண்டுதோறும் உதவி செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. பர்ஜ கொலையின் பயன் லட்சக் கணக்கான பொருட் செலவை ஆண்டுதோறும் நமது தலைமீது சுமத்தி யிருக்கிறது. இதைப் பார்த்த பிறகேனும் வெள்ளையரைக் கொலை செய்யவேண்டுமென்ற தீய எண்ணம் இளைஞர் உள்ளத்திலிருந்து அறவே விரட்டி யடிக்கப்படுமென எண்ணுகிறோம்.

## கொழுக்கட்டை தானம் உண்டா?

'பகிஷ்காரமா? மூச்சு விடாதே. இதோபார்.....தடி' என்று இந்தியாவில் மிரட்டப்படுகிறது. இதே பகிஷ்காரம் இன்று சீமையில் காப்பி அடிக்கப்பட்டு வருகிறது. அந்த பகிஷ்கார மண்டலத்திற்குத் தலைவி ஸ்ரீமதி பிலிப் கியூடாலா. 'பிரிட்டிஷ் சாமான்களையே வாங்கவேண்டும்; ஜெர்மன் சாமான்களை வாங்கக் கூடாது; ஜெர்மன் கப்பலில் ஏறக்கூடாது; ஜெர்மனை பரிஷ்கரியுங்கள்' என லண்டன் தெருக்களில் பகிஷ்கார முழக்கம் நடைபெறுகிறதாம்.

சுதேசாபிமானம் இருக்கவேண்டியது மனிதர்களின் பிறப்புரிமை என்பதை எவரும் மறுக்கவில்லை. அதே சமயத்தில் பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரித்து சுதேச சாமான்களை

வாங்கவேண்டு மெனக் கூறும் தொண்டர்களுக்கு இந்திய அரசாங்கம் கொழுக்கட்டை வழங்குவது ஏன்? பகிஷ்காரம் செய்யக் காப்பியடித்த இங்கிலாந்து இந்தக் கொழுக்கட்டை தானத்தையும் காப்பி யடித்திருக்கிறதா?

ஒன்றுக்குப் பத்து

'நீ ஒன்று கொடுப்பதற்குள் நான் திருப்பிப் பத்து தருவேன், ஜாக்கிரதை' என்று வீராப்பு பேசுபவர் ஹிந்துக்கள். ஆனால், இதற்குச் சோதனைகாலம் நேரும்போது அவர்கள் இந்த உலகத்தில் இருப்பதை எவரும் கண்டுபிடித்துவிட முடியாது. ஹிந்துக்களின் வாய்வீச்சை ஆப்கனிஸ்தானம் செயலில் காட்டியிருக்கிறது. ஆப்கன அரசர் நாதர்ஷா கொலை செய்யப் பட்டாரல்லவா? அந்த ஒரு உயிருக்குப் பதிலாக எத்தனை உயிர்கள் பட்டாக்கத்தியின் திருவருளுக்கு இலக்காயின தெரியுமா? பதினைந்து உயிர்கள்! ஒரு உயிரைக் கொன்றது குற்றமாயின் இத்தனை உயிர்களைக்.........இல்லை, இல்லை. மருமகள் உடைத்தால் தானே பொன் பானை. மாமியார் உடைத்தால்......

ஜேபி நிறையுமா?

தினம் 20 ரூபாய், ஓட்டை உடைச்சல் இல்லாமல் சில மேதாவிகள் வாங்கி வந்தனர். இந்தியா சட்டசபை என்றால் அவர்களுக்கு ஓர் அரிய உபந்யாச மேடையாகத் தோன்றியது. அற்ப விஷயத்தையும் ஐந்து நாளைக்கு விடாது மூச்சுப் பிடித்துப் பேசி 100 ரூபாயை ஜேபியில் போட்டுக்கொள்வார்கள். வாயைச் சற்றும் அசைக்காமலே தலையையும், கையையும் அசைத்து ஜேபியை நிரப்பிக்கொண்டு போகின்றவர்களும் உண்டு. இப்படி தினந்தோறும் படிச்செலவாக 20 ரூபாய் கொடுக்கப்படுவதால் ஒரு மணி நேரத்தில் முடியக்கூடிய விவாதங்கள் ஒரு வாரத்திற்கு மேலும் வீணாக நீட்டிக்கப்படுவதாக நெடுநாளாய்ப் புகார் இருந்து வந்தது. இதை ஒழிக்க பார்லிமெண்டைப்போல் குறிப்பிட்ட ஒரு தொகையை வருடந்தோறும் சம்பளமாக இந்திய சட்ட சபை மெம்பர்களுக்குக் கொடுத்து விடுவதென யோசனை செய்யப்படுகிறதாம். நல்ல யோசனைதான். முழு நோட்டாக ஒரே நாளில் ஜேபி நிறைவதற்கான வழி இந்தக் கஷ்ட காலத்தில் வேறு என்ன இருக்கிறது!

அங்கத்தினர்களுக்கு நாம் ஒன்று எச்சரிக்க விரும்புகிறோம். ஒரு மாதத்திற்கோ அல்லது ஒரு கூட்டத்திற்கோ தொடர்ச்சியாக வந்தவர்களுக்கு அல்லது வருடத்தில் மொத்தம் இத்தனை நாட்களுக்கு வந்தவர்களுக்குமட்டும் சம்பளம் கொடுப்பது என்ற விதி ஏதேனும் ஆலோசனைக்கு வருமானால்



அதை ஒரு முகமாக எதிர்த்துத் தோற்கடிக்க முடிவு கட்டிக் கொள்ளுங்கள்.

அதிக ஆசை, அதிக நஷ்டம்

டாக்டர் சுப்பராயனுடைய ஸ்தல ஸ்தாபன சட்டத்திருத்தத்திற்கு முன் ஒரு ஜில்லாவிற்கு இரண்டு மூன்று தாலூக்கா போர்டுகளே இருந்தன. மொத்தத்தில் இந்த மாகாணத்தில் 130 தாலூக்கா போர்டுகள் இருந்தன. இன்னும் தாலூக்கா போர்டுகள் அதிகரிக்கப்படுமாயின் தத்தமக்கு வேண்டியவர்கள் தலைவராகவோ, அங்கத்தினராகவோ வரக்கூடுமென்றும், அதனால் தங்கள் செல்வாக்கு அதிகரிக்குமென்றும் கருதிய சிலர் முயன்றதன் பயனாய், ஒவ்வொரு ரெவின்யூ தாலூக்காவுக்கும் ஒரு தாலூக்கா போர்டு ஏற்படுத்தப்பட்டது. அதன்படி இப்போது 208 போர்டுகள் உள்ளன.

இவற்றுள் 90 போர்டுகள் சாதாரணச் செலவிற்கே பணமின்றித் தவிக்கின்றன. மற்றும் 40 போர்டுகள் தன்னைத்தான் சரிக்கட்டிக்கொண்டு ஏதோ ஒருவாறு காலட்சேபம் செய்கின்றன. அநேக போர்டுகள் ஆசிரியர்களின் சம்பளத்தைக் கொடுக்க முடியாமல் திணறிக்கொண் டிருக்கின்றன. மொத்தத்தில் 36 போர்டுகள் வரையில் சுமாராக பணமுட்டு இன்றி வேலை செய்வதாகத் தெரிகின்றது.

இந்த நிலைமையைக் கருதி, சென்னை அரசாங்கம் தாலூக்கா போர்டுகளனைத்தையும் கலைத்துவிட்டு ஜில்லா போர்டுகளை அதிகப்படுத்தியும், பஞ்சாயத்து போர்டுகளை விரிவு படுத்தியும் சிக்கனத்தைக் கையாள விரும்புகிறது. ஆனால், இப்படிச் செய்வதால் சிக்கனம் ஏற்படுமா என்பது சந்தேகந்தான்.

பல தாலூக்கா போர்டுகளின் செலவைச் சேர்த்து ஒரு ஜில்லா போர்டின் நிர்வாகச் செலவு விழுங்கி வருவதை நாம் பார்க்கிறோம். எனவே, தாலூக்கா போர்டுகளை அடியோடு ஒழித்துவிட்டு புதிய ஜில்லா போர்டுகளை அமைப்பதால் இப்போதுள்ள நிலை ஒரு சிறிதும் மாறாதென்பது நமது அபிப்பிராயம். பேராசையினால் அதிக தாலூக்கா போர்டுகள் ஏற்படுத்தியதே இந்தத் தொல்லைகளுக்கெல்லாம் காரணமெனத் தெரிவதால், அவற்றைக் குறைத்து, பழையபடியே ரிவின்யூ டிவிஷன் வாரியாக போர்டுகளை அமைப்பது பணக்கஷ்டத்தை சமாளிப்பதற்கும், நிர்வாகத்தை ஒழுங்காய் நடத்துவதற்கும் வசதியாயிருக்கலாம். பொது ஜனங்களை பாதிக்கத் தக்க இத்தகைய

விஷயங்களை சில சமஸ்தானாதிபதிகளும், செல்வந்தர்களும், ஜில்லா போர்டு தலைவர்களும் சேர்ந்து கொண்டு முடிவுசெய்து விடுவது பெரிதும் பாதகம் விளைப்பதாகும். ஆகவே, பொது மக்களின் அபிப்பிராயத்தைத் திரட்டிப் பார்த்த பின் இந்த விஷயம் முடிவு செய்யப்படுவது மிகவும் நேர்மையாகும். அல்லாமலும், இடைக்காலத்தில் போர்டுகளைக் கலைப்பதனால் அநேகருக்கு மனக்கசப்பும், பல சங்கடங்களும் ஏற்படக் கூடும்.

இந்த விஷயத்தில், இப்போது போர்டுகளில் அங்கம் வகிப் போரது பதவியின் காலம் முடியும் வரை சற்று நிதானித்துப் பார்ப்பதால் ஒன்றும் குடிமுழுகிப் போகாதென அறிவுறுத்துகிறோம்.

## மலையை விழுங்கும் மகாதேவனுக்கு

'உங்களுக்கு அவசரந்தான். மூட்டை சுமப்பவனுக்கன்றோ வருத்தம் தெரியும். சும்மா கை வீசிக்கொண்டு போகின்றவன், தலையில் மிக்க பளுவான சுமையுடன் வருகின்ற கூலியைப் பார்த்து 'என்னடா அசங்குகிறாய், வேகமாய் நடந்து வா' என அதிகாரம் செய்வது போன்று இந்த விவசாயிகளின் செய்கை இருக்கிறது. சென்னை அரசாங்கம் என்ன சாதாரணமானதா? ஒரு கவர்னர், 3 மந்திரிகள், 4 நிர்வாக உறுப்பினர்கள், சட்டசபைத் தலைவர், 127 எம். எல். ஸிக்கள், பல காரியதரிசிகள், இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி தலை, கால் போன்ற உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் சேர்ந்ததல்லவா நமது சென்னை அரசாங்கம். அவ்வளவு பெரிய அரசாங்கத்தின்மீது நீதி, நிர்வாகம், பொக்கிஷம், போலீஸ், கல்வி, கலால் முதலிய எத்தனையோ பெரிய சுமைகளையெல்லாம் ஏற்றி வைத்துவிட்டு அரசாங்கம் மெதுவாய் நகர்கிறதே என்றால் அது யாருடைய குற்றம்.

'மூச்சுத் திணறுகிறது, சிறிது தாமதித்தாலும் பிராணன் போகும்' என்று விவசாயிகள் கதறுகிறார்கள். வடாற்காடு, தென்னாற்காடு, சேலம், கோயமுத்தூர், மதுரை, தஞ்சாவூர் முதலிய ஜில்லா போர்டுகள் அவர்களோடு ஒத்து ஊதுகின்றன. திருவாரூரில் மகாநாடு, திருக்கோபுரவாசலில் மகாநாடு என வரிசையாக மகாநாட்டைக் கூட்டி ஒரே சத்தம்போடுகிறார்கள். 26-11-33-ந் தேதியை விவசாயிகள் தினமாகக் கொண்டாடிக் கண்ணீர் வடித்தார்கள். அவர்கள் கதறுதலும் கண்ணீரும் அடியோடு பயனற்றுப் போகவில்லை. அரசாங்கம் இப்போதுதான் அசைந்து கொடுக்கிறது. மெதுவாக நகரவும் தொடங்கிவிட்டது



1918-19-ம், ஆண்டுக்குப் பின் மறுபைசல் செய்யப்பட்ட பிரதேசங்களில் நஞ்சைக்கு ரூபாய்க்கு இரண்டணாவும், மற்றவைகளுக்கு ஒரு அணாவும், மறுபைசல் செய்யப்படாத பிரதேசங்களில் நஞ்சைக்கு 1½ அணாவும் புஞ்சைக்கு 1 அணாவுமாக அரசாங்கம் வசூல் செய்யாமல் நிறுத்தி வைத்திருக்கிறது. 'தம்பி, நிறுத்தி வைத்தது போதும். எனக்கு இப்போது கொஞ்சம் பணமுடையா ி ருக்கிறது. நிறுத்திவைத்த பணத்தை இப்படி எண்ணி வைத்துவிடு' என்று அடுத்த பசலியில் கேட்டாலும் கேட்கக்கூடும். ஆகவே, விவசாயிகளே! மிராசுதாரர்களே! ஏமாந்து விடாதீர்கள். அரசாங்கம் நகர்ந்து விட்டது, மனம் இரங்கி விட்டது எனச் சும்மாயிராதீர்கள். சற்று பலமாய்க் கிளர்ச்சி செய்யுங்கள். இதுவரை செய்த கிளர்ச்சிகள் சென்னை அரசாங்கத்திற்கு எம்மாத்திரம்! மலையை விழுங்கிய மகாதேவனுக்கு சுண்டைக்காய் போன்றதாகும்.

## ஜப்பான் இந்திர ஜாலம்

இந்திர ஜாலம் செய்து காரியத்தை சாதித்துக்கொள்வதில் ஜப்பானுக்கு இணையாக உலகத்தில் எவரும் இருப்பதாக நினைப்பதற்கில்லை. சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக்கொண்டு மாயாஜாலங்கள் புரிந்து தன் செல்வாக்கை அபிவிருத்தி செய்து வருதலும், சீனாவுடன் வீண்வம்பு செய்து மஞ்சுகூ சர்க்காரை நியமித்து விட்டதும் இதற்குத் தக்க உதாரணங்களாகும். இது மட்டுமன்று. இந்தியப் பருத்தியை பகிஷ்கரித்துப் பின் சமாதானம் பேசுவதாக இந்தியாவிற்கு வந்து, ஜெயத்துடன் திரும்பிப் போகும் பலே வித்தை வேறு எங்காவது காண முடியுமா? மூன்று மாதங்களாக இந்திய சர்க்கார் ஜப்பான் கோஷ்டியினருடன் வாதித்துச் செய்து கொண்ட ஒப்பந்தம் இந்தியாவுக்கு நஷ்டமும், ஜப்பானுக்கு லாபமுமாக முடிந்திருக்கிறது. இவ்வொப்பந்தப்படி,

(1) ஜப்பான் ஜவுளிகளுக்கு 100-க்கு 50 வீதம் அல்லது ராத்தலுக்கு $5\frac{1}{4}$ அணா வீதம் வரி வசூலிக்கப்படும்.

(2) ஒரு வருடத்தில் ஜப்பான் 10 லட்சம் பஞ்சு மூட்டைகளை (ரூ. 12 கோடி) வாங்கிக் கொண்டால் அதற்குப் பதிலாக $32\frac{1}{2}$ கோடி கஜம் துணிகள் இந்தியாவில் இறக்குமதி செய்யலாம் இந்தியாவிலிருந்து பஞ்சு வாங்குவதில் குறைவதற்கும் அதிகப் படியாவதற்கும் ஏற்றபடி துணி இறக்குமதியும் கணக்கிடப்படும். ஆனால் 15 லட்சம் பஞ்சு மூட்டைகளுக்குமேல் எந்தவருடத்திலேனும் ஜப்பான் வாங்கி இருக்குமானால் 15 லட்

சத்திற்குள்ள விகிதப்படி துணியை இறக்குமதி செய்து விட்டு, அதிகப்படியான பஞ்சு மூட்டைகளை அடுத்த வருட கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(3) இந்தியப் பஞ்சு பகிஷ்காரத்தை ஜப்பானும், இந்தியா ஜப்பான் ஜவுளிகளுக்கு அதிக வரி விதித்திருந்ததையும் 8-ந் தேதி ஏககாலத்தில் நீக்கிவிட வேண்டும்.

(4) இவ்வொப்பந்தம் 1937-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ந் தேதி வரை பர்மாவையும் சேர்த்து அமுலில் இருக்கும்.

இவ்வொப்பந்தத்தை நன்கு கவனித்தால் இந்தியாவின் நஷ்டம் தெளிவாய் விளங்கும் 1931-32-ல் ஜப்பான் 12 கோடி ரூபாய் பஞ்சு வாங்கிக் கொண்டு 34 கோடி கஜம் துணியை இறக்குமதி செய்தது. இந்த ஒப்பந்தப்படி பார்த்தால் 12 கோடிக்கு பஞ்சு வாங்கிக்கொண்டு 40 கோடி கெஜம் இறக்குமதி செய்ய முடியும். எனவே இருவரில் யார் சமர்த்தரென நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். ஜப்பானுடைய மாயா ஜாலத்தில் இந்திய வர்த்தகத்தலைவர் சொக்கிப் போய்விட்டாரெனவே தீர்மானிக்கவேண்டி யிருக்கிறது.

---

## மிட்டா கிராம பட்டணப் பிரவேசம்


திருவாரூரில் நடந்த வர்த்தக மகாநாட்டைத் திறந்து வைத்தவரும், திருப்பத்தூர் தாலூக்கா போர்டு தலைவரும், பிரபல வர்த்தகருமான பெருந்திருவினர் கா. அ. சண்முக முதலியாரவர்கள் புதிதாய் வாங்கியுள்ள அண்ணாண்டப்பட்டி மிட்டா, அண்ணாண்டப்பட்டி கிராமத்தில் ஊர்புகல் விழா நிகழும் தைமாதம் 13-ம் நாள் இரவு 12-30 மணிக்குமேல் மிக்க சிறப்பாக நடைபெற்றது. மறுநாள் பெருமாள் திருவாராதனமும், பட்டாதார் குழுவும் நடைபெற்றது.

---

### அநுதாபம்

மதுரை பிரபல வர்த்தகர் திரு. எ. கந்தசாமி முதலியார் அவர்கள் 25-11-33ல் இவ்வுலகம் நீத்தமை கேட்டு மிக்கத் துன்பப்படுகிறோம். இவர் நல்லொழுக்கமும் தெய்வ பக்தியும் நிறைந்தவர், வேதாந்த ஞானம் நிறைந்தவர். அவருடைய ஆன்மா சாந்தியுற பிரார்த்திக்கின்றோம்.

(ப-ர்.)



........கிணற்றின் அடித்தளம் பச்சைப் பசேலென—

## பனித்தாய் அல்லது ஹிமகிரி அம்மாள்.

(ஈ. வே. சோ. கோவை)

ஓரூரில் ஒரு தாயும் இருபெண்களும் இருந்தார்கள். ஒரு பெண் நல்ல அழகும் குணமும் சுறுசுறுப்பும் உள்ளவள். மற்றவள் விகாரமாயும் சோம்பேறியாயும் இருந்தாள். ஆனாலும் தாய்க்கு அந்தக் குரூபியிடந்தான் பிரியம் அதிகம். ஏனென்றால் அவள்தான் தன் வயிற்றில் பிறந்தவள். மற்றவளாகிய குணவதி, அவளுடைய சக்களத்தியின் மகள். ஆதலால் குணவதியே எல்லாவித வீட்டு வேலையும் செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டாள். அதோடு வேலைக்காரப் பெண்போல் வீட்டுக்கு வெளியில் ரஸ்தா ஓரத்தில் உட்கார்ந்து கைசிவக்க இராட்டைக்கோலால் நூல் நூற்கவேண்டியிருந்தது.

ஒரு நாள் வெகு நேரம் வரை நூற்றதால் கை கொப்புளித்து ரத்தம் வந்து இராட்டைக்கோலெல்லாம் ரத்தமாகி விட்டது. குணவதி கை காலெல்லாம் சோர்ந்து கை ரத்தக் கறையைக் கழுவிக் கொள்ள கிணற்றண்டை சென்றாள். கீழே குனிந்து கை கழுவும்போது இராட்டைக்கோல் நீரில் விழுந்து கிணற்றுக்குள் போய் விட்டது. சிறு பெண் பாவம்! என்ன செய்வாள்? வீட்டிற்குப்போய் நடந்ததைச் சொல்லி விடுவது நலம் என்று ஓடி உண்மையை மாற்றாந்தாயிடம் கூறினாள்.

அந்தக் கொடியவள் சிறு பெண் என்றாவது, அதிக கஷ்டப்பட்டு வேலை செய்திருக்கிறாள் என்றாவது சிறிதும் இரக்கம் காட்டவில்லை. ஆனால் இராட்டைக் கோலைக்கிணற்றில் போட்டுவிட்டதற்காக மிகவும் கோபித்து குணவதியை கண்டபடி எல்லாம் ஏசி அதட்டி 'நீ அந்தக் கோலில்லாமல் என் வீட்டிற்குள் நுழையக்கூடாது', என்று துரத்திவிட்டாள்.

சின்னஞ்சிறு பெண். இன்னது செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டே கிணற்றடியில் வந்து சேர்ந்தாள். இராட்டைக்கோல் கிணற்றுக்குள் கிடக்கிறது; எப்படி எடுப்பது என்று தெரியவில்லை. அதை எடுத்துக் கொண்டு போகா விட்டால் மாற்றாந்தாய் வீட்டிற்குள் விடமாட்டாள். மறுபடியும் ஏச்சுக்கேட்கப் பயந்து இராட்டைக் கோலை எடுக்கலாம் என்று நீரில் குதித்துவிட்டாள். நீந்தத் தெரியாமையால் உள்ளே மூழ்கினாள். ஆனால் உடனே நினைவில்லாமல் மூர்ச்சையாய்விட்டாள்.

மூர்ச்சை தெளிந்து அவள் எழுந்தபோது தான் இருக்கும் இடம் கிணற்றின் அடித்தளமாயில்லாமல் ஒரு அழகிய புல் வயலாயிருந்ததைக் கண்டாள். அதில் அவளைச் சுற்றி அநேகாயிரம் பூச்செடிகள் பூக்களோடு அழகாய் வளர்ந்திருந்தன. எங்கே பார்த்தாலும் பச்சைப்பசேல் என்று கண்ணுக்கு இனிமையாய் இருந்தது. குணவதி சந்தோஷத்தோடு எழுந்திருந்து ஒரு பக்கமாக நடந்தாள்.

சிறிது தூரம் சென்றதும் ஒரு அடுப்பைக் கண்டாள். அதன்மேல் நீண்ட தோசைக்கல் வைக்கப்பட்டு தோசைகள் வெந்துகொண்டிருந்தன. அதனருகே குணவதி போனதும் ஒவ்வொரு தோசையும்,

'வெந்து தீயும் என்னைத் தங்காய்
வந்து நீயும் அடுக்கு ஒழுங்காய்' என்றது.

குணவதி உடனே சட்டுவத்தைக்கொண்டு ஒவ்வொரு தோசையாய் அடுப்பிலிருந்து எடுத்து ஒரு புறமாக அடுக்கிவிட்டு பின்னும் அப்பால் நடந்தாள்.

சற்று நேரத்தில் ஒரு மாமரத்தடியில் வந்து சேர்ந்தாள். அம்மரக்கிளைகளில் கணக்கற்ற பழங்கள் பழுத்துத் தொங்கின. அவைகள் குணவதி வந்து நின்றதும்,

'மரத்தில் பழுத்து கனத்திருக்கும் எம்மையே,
காத்தில் இழுத்து உலுக்கினால் நன்மையே,

என்றன. அவள் அவ்வாறே மரத்தைக் குலுக்கினாள். ஏராளமான பழங்கள் கீழே வீழ்ந்தன. அவள் அவைகளை எல்லாம் பொறுக்கிக் குவித்து விட்டு மேலும் நடந்தாள்.

குணவதி எதிரில் ஓர் வீடிருக்கக் கண்டாள். அவ்வீட்டின் ஜன்னல் வழியாய் ஓர் கிழவி எட்டிப் பார்த்தாள். அவளுக்குப் பெரிய பற்கள் இருந்தன. அவற்றைக் கண்டதும்



குணவதி பயந்து திரும்பி ஓட ஆரம்பித்தாள். அம்மூதாட்டி, 'அம்மா, குழந்தாய் பயப்படாதே. நீ என்னோடு சுகமாய் வசிக்கலாம். என் படுக்கையை உதரி அதன் ஓரத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் இறகுகள் உதிரும்படி நன்றாய் அடித்து விரித்துப்போடவேண்டும். இவ்வீட்டைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். இவ்வளவுதான் உன்வேலை. நீ நன்றாய்ச் சாப்பிட்டு விட்டு இருக்கலாமம்மா; என் படுக்கையை நீ உதரினால் பூலோகத்தில் பனி பெய்யும். ஏனென்றால், நான் தான் பனித்தாய். என்னை ஹிமகிரி அம்மாள் என்பார்கள்', என்று அன்பாய்ச் சொன்னாள்.

சிறுமி கிழவியின் பெரும் பற்களைக் கண்டதும் பயந்துவிட்டாளாயினும், அவள் அன்பான வார்த்தையைக் கேட்டு ஒருவாறு மனம் தேறினாள். அவளுக்குப் பணிவிடை செய்ய ஒப்புக்கொண்டாள். அவள் அக்கிழவியின் படுக்கையை உதரிப்போட்டாள். அதன் இறகுகள் சிதறும் போது உலகத்தில் பனிபெய்தது. ஹிமகிரி அம்மாளுக்கு சகலவிதத்திலும் திருப்தியாய் குணவதி நடந்தாள். அதனால் ஒவ்வொரு நாளும் பலகாரத்தோடு சாப்பாடும், தின்பண்டங்களும் கிடைத்து வந்தது.

சில நாட்கள் வரை வெகு சந்தோஷமாய் இருந்தாள் ஏனென்றால், கையில் இரத்தம் வருமாறு இப்போது நூல் நூற்க வேண்டியதில்லையல்லவா? எல்லா வேலைகளையும் அவள் தலைமேலே போடுவாருமில்லை. சதா அவளை மாற்றாந்தாய் போல் அதட்டி ஏசிக்கொண்டிருப்பாரும் இல்லை.

ஆனாலும், குணவதி நல்ல பெண்; ஆகையால் சில நாட்களுக்குப் பிறகு ஏதோ மனக்கலக்கம் ஏற்பட்டது. முதலில் ஏன் என்று அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை. கொடியவளாய் இருந்தாலும் தனக்குச் சோறு போட்டு வளர்த்த மாற்றாந்தாயின் நினைவும், தன்னோடு விளையாடின தங்கையின் நினைவும் மனத்திலெழுந்தன என்பதைக் கண்டாள். தன் மனக்கலக்கம் வீட்டிற்குப் போகவேண்டும் என்ற ஆசையினால் உண்டானதென்பதைத் தெளிவாக உணர்ந்தாள். ஹிமகிரிக் கிழவியிடம் எவ்வளவோ சௌகரியமாய் இருந்தும் சொந்த ஜனங்களிடம் எவ்வளவோ துன்பத்திற்காளாகவேண்டி இருப்பதையும் பொருட்படுத்தாமல், அங்கு போக ஆசைப்பட்டாள். இதைத் தயங்கித் தயங்கிக் கிழவியிடம் சொன்னாள்.

பனித்தாய் குணவதியின் விருப்பத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, 'நீ நல்ல பெண், தீயோராயினும் சுற்றம் பாராட்டுகி

ருய். நானே உன்னைக் கொண்டு போய் விடுகிறேன்,' என்று புறப்பட்டாள்.

வரும் வழியில் சிறுமி குவித்து வைத்த மாம்பழங்கள் அப்படியே கெடாமல் இருந்தன. அப்பழங்கள் அநேக வருஷங்கள் வரை கெடாமலிருப்பன என்று சொல்லி மாமரம் அவளை வேண்டுமளவு எடுத்துக்கொண்டு போகும்படி கூறிற்று. பிறகு தோசை அடுக்கியிருந்த இடத்தில் வந்தபோது 'இத் தோசை எத்தனை நாள் கடித்துக் கடித்துத் தின்றாலும் குறையாமலிருக்கும், நீ எடுத்துக்கொள்' என்ற வார்த்தைகள் சிறுமிக்குக் கேட்டன. கிழவி தோசைகளை எடுத்துக்கொடுத்தாள். சிறுமி அவைகளை வாங்கிக்கொண்டு மேலும் நடந்தாள்.

ஒரு வாசற்படிக் கெதிரில் இருவரும் வந்தனர். பாட்டி அன்புடன் கதவைத் திறந்து குணவதியை உள்ளே போகச் சொன்னாள். உள்ளேயிருந்த தங்க நாணயங்கள் அவள் மேல் கொட்டின. அவை அவளுடைய உடையில் ஒட்டிக் கொண்டன. உடனே கதவு பின்னால் மூடிக்கொண்டது.

அவள் ஆச்சரியத்துடன் விழித்துப் பார்க்கவே தான் தன் வீட்டிற்கு எதிரில் நிற்பதாகக் கண்டாள். உடனே வெகு குதூகலமாக வீட்டிற்குள் ஓடினாள். தான் போய் வந்த விவரங்களையெல்லாம் சொன்னாள். தங்கமும் பழங்களும் கொண்டு வந்ததால் தாயும் மகளும் அவளை சந்தோஷமாகச் சேர்த்துக் கொண்டார்கள்.

அவளுக்கு நேர்ந்த அதிசயங்களைக் கேட்டதும், அவள் மேல் பொன்மாரி பெய்ததை அறிந்ததும் அவர்கள் பேராசை கொண்டார்கள். தன் சோம்பேறியும் குரூபியுமான மகளையும் கீழுலகக் கிழவியிடம் அனுப்பி ஏராளமாகத் தங்கத்தை வழித்து வர விரும்பினாள் அந்த மாற்றாந்தாய்.

குரூபியும் தங்கம் கிடைக்குமென்று நினைத்துப் போக இசைந்தாள். ஆனால், குணவதியைப்போல் கஷ்டப்படவேண்டுமென்பதைக் கேட்டுச் சிறிது தயங்கினாள்.

அவளும் கிணற்றடியில் இராட்டையோடு போய் உட்கார்ந்தாள். அவளுக்கு ஓர் யோசனை பிறந்தது. கஷ்டப்பட்டு வேலை செய்வது என்றால் கையில் இரத்தம் வரவேண்டும். கையில் இரத்தம் வந்தால் அதிக வேலை செய்தவளாகக் கருதப் படுவோம் என்று நினைத்து, கையில் இராட்டைக் கோலால் ஒரு குத்து குத்தி முட்புதரில் கையை விட்டு வெளியே இழுத்து கையெல்லாம் கீறி, இரத்தம் வருமாறு செய்துகொண்டாள்.



பிறகு, இராட்டைக் கோலை கிணற்றிற்குள் தானாகவே விட்டெறிந்தாள். தானும் அதன் பின்பு தண்ணீரில் குதித்தாள். குணவதியைப்போல் மூர்ச்சையுற்று பின்னர் குணவதி எழுந்த இடத்திலேயே தானுமிருக்கக் கண்டாள்.

எழுந்து குணவதி சொல்லக்கேட்டபடி நடந்து சென்றாள். அவள் முன் தோசைகள் அடுப்பின்மேல் வெந்து கொண்டிருப்பது தோன்றி, 'நாங்கள் தீய்ந்து போகிறோம், எங்களை அடுப்பை விட்டு எடு,' என்று அவளைக் கேட்டன. அக்குரூபி சோம்பலுடன், 'உங்களைத் தொட்டு என் கையை அசுத்தி செய்து கொள்ளமாட்டேன்,' என்று கூறி மேலே சென்றாள். முன் போலவே மாம்பழங்கள் மிகுந்த மாமரம், பழங்களைக் கீழே குலுக்கும்படி அவளைக் கேட்டுக்கொண்டது. அவள் தன் தலைமேல் பழங்கள் விழுந்து விடுமே, அதுவும் திரும்பிப் போகும் போது குலுக்கினால் விழுவனவற்றை எல்லாம் எடுத்துப் போகலாம், என்று நினைத்துப் பேசாமல் நடந்தாள். சிறிது தூரம் நடந்ததும் பெரும்பல் கிழவி ஜன்னலின் வழியாய் ஒரு வீட்டிலிருந்து பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டாள். குணவதியிடம் முன்பே கேள்விப்பட்டதால் அவளைப் பார்த்து பயப்படவில்லை. நேராக சமீபத்தில் சென்றாள். கிழவியும் குணவதிக்குக் கொடுத்த வேலையையே கொடுத்தாள். சோம்பேறிப் பெண் வேலை செய்வதற்கு வெறுப்படைந்தாலும் தன்மேல் தங்கமழை பெய்தலை எதிர் பார்த்து மிக ஆசைப்பட்டு வெகு பிரயாசையுடன் கிழவியின் பிரியப்படி ஒரு நாள் நடந்தாள். இரண்டாம் நாள் அவளுடைய சோம்பேறிக்குணம் தலைகாட்டியது. மூன்றாம் நாள் படுக்கையை விட்டு அவளை எழுப்ப ஒரு ஆள் வேண்டியிருந்தது. நாலாம் நாள் எழுந்திருக்க மறுத்து விட்டாள்.

பார்த்தாள் கிழவி. சிறுமியின்மீது வெறுப்புற்றாள். இவ்விடம் விட்டு 'உடனே ஓடிவிடு' என்று சொல்லிவிட்டாள். 'எப்படியும் குணவதி போன வழியே தானே போவோம். இனி என் மேல் பொன் மாரி பெய்வதுதான் பாக்கி. நிறைய எடுத்துக் கொண்டு வீடு சேர்வோம்,' என்று நினைத்தாள். ஹிமகிரி அம்மாள் வழியே கூட்டி வந்தாள். குணவதி சென்றவழியிலிருந்த மாமரம் தன் கிளைகளால் அவள் தலைமேல் அடித்து தலையை மொட்டையாக்கிவிட்டது. தோசைகள், அவள் தொட்டதெல்லாம் தீய்ந்து போகும்படி சாபங்கொடுத்தன.

பின்னர் ஹிமகிரியம்மை கதவைத் திறந்தாள். குரூபி உடையை விரித்து நின்றாள். தங்கத்திற்குப் பதிலாகக் காய்ந்த

தார் அவள் மேல் விழுந்தது. 'உன் வேலைக்கு இதுதான் கூலி,' என்று கூறி, படீர் எனக் கதவைச் சாத்திவிட்டாள் கிழவி.

குரூபி, வீட்டண்டை தான் நிற்பதைக் கண்டாள். வெட்கத்தோடு உள்ளே சென்றாள். அவள்மேலிருந்த தார் சாகும் வரை விடவில்லை. அவள் தன் கையால் தொட்டு சமைத்து ஒன்றும் சாப்பிட முடியாதவளானாள். ஏனென்றால், தொட்டதெல்லாம் தீய்ந்து விட்டன. மொட்டையாய் குரூபியாய் இருந்தாள்.

ஆனால், குணவதியோ ஆரோக்யமான, சுறு சுறுப்பும் சந்தோஷமும் நிறைந்த வாழ்க்கை நடத்தினாள்.

குறிப்பு:—

குணவதி: சுறுசுறுப்பும் பொறுமையும் உள்ளோரைக் குறிப்பது.

குரூபி: அதற்கு நேர் மாறான குணமுடையவர்கள்.

மாற்றாந்தாய்: நீதியற்ற சமூக அமைப்பு.

குணவதிக்குக் கிடைத்த நற்பயனும் குரூபிக்குக் கிடைத்த தண்டனையும் 'தினைவிதைத்தவன் தினையும, வினை விதைத்தவன் வினையும் அறுப்பான்' என்பதைக் குறிப்பிடுவன.

---

## பத்திரிகா நிருபர்களுக்கு ஸ்ரீ முசோலினியின் எச்சரிக்கை

சமீபத்தில் இத்தாலி சர்வாதிகாரி ஸ்ரீ முசோலினியை பத்திரிகைகளின் சங்கப் பிரதிநிதி பேட்டி கண்டபோது முசோலினி தெரிவித்ததாவது:—

பத்திரிகைக்காரர்களைக் காண்பதில் எனக்கு அதிக மகிழ்ச்சி ஏற்படுவதில்லை. நான் இவ்வாறு சொல்வதற்கு மன்னிக்கவும். அநேக பத்திரிகைக்காரர்கள் சமயோசிதமாக நடந்து கொள்கின்றனர். இது அறவே கூடாது. நானும் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன்; இந்த விஷயத்தில் என்மீதே எனக்கு வெறுப்பு உண்டு. பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்கள், எவரையும் எச்சமயத்தும் அதிகமாகப் புகழக்கூடாது. பத்திரிகையில் ஆரம்பமுதல் கடைசிவரை தேசமுற்போக்கான விஷயங்களைத் தவிர வேறு ஒன்றும் இருத்தல் கூடாது. விளம்பரங்கள் பிரசுரிப்பதிலுங்கூட அவை தேச அபிவிருத்திக்கான விளம்பரங்களாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். விஷயங்களை மிகைபடுத்தாமலும், சிறிதும் உண்மைக்கு மாறுபடாமலும் உள்ளவாறே சுருக்கமாய் வெளியிட முயல்வது தேச முற்போக்கிற்குப் பத்திரிகைகள் புரியும் பேருபகாரமாகும்.

# உலகத்தின் 17 குபேரர்கள்

அளகாபுரிக்கு அரசனாக 'குபேரன்' என்ற ஒருவன் இருப்பதாகவும், அவனே மூவேழு உலகங்களிலும் அதிக பொருள் படைத்தவன் என்றும் புராணங்களில் படித்திருக்கிறோம். காலம் இது கலிகால மல்லவா? இப்போது 17 குபேரர்கள் இருப்பதாகச் சில பொருளாதார நிபுணர்கள் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

உலகத்திலுள்ள அரசாங்கம் அனைத்தும் கடன்பட்டதாகவே இருக்கின்றன. உலக மக்கள் ஒவ்வொருவரும் 'விரலுக்கேற்ற வீக்கம்' என்பதுபோல் தத்தமக்கேற்ற அளவு கடன்பட்டிருக்கிறார்கள். கடன் படாதவர் நமது கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆனால் பொருளாதார நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 17 குபேரர்களும் ஒன்றாகச் சேர்ந்தால் உலக கடன் முழுதையும் தீர்த்துவிடக்கூடுமாம். தனிப்பட்ட ஆட்களின் கடனையும், எல்லா அரசாங்கங்களின் கடனையும் ஒன்றாய்ச் சேர்த்துப் பார்த்தால் இத்தனை கோடி என்று கூறுவதற்கும் சாத்தியமிராது. இவ்வளவு கடனையும் இந்தப் 17 குபேரர்களும் தீர்த்துவிடக் கூடுமென்றால் புராணத்தில் கூறப்படும் குபேரனும் இவர்களிடம் கடன் வாங்கியவனாகத்தான் இருக்கவேண்டுமென நினைக்க இடந்தருகிறது. அவர்களின் செல்வ நிலைக்கேற்ப கீழ்க்கண்ட வரிசைப்படி அவர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

(1) எட்சல் போர்ட் (அமெரிக்கா),
(2) ஹென்றி போர்ட் ஷை
(3) எட்வர்ட் ராட்ஸ்சைல்ட் (ப்ரான்ஸ்).
(4) வெஸ்ட் மினிஸ்டர் ட்யூக் (இங்கிலாந்து).
(5) கெய்ஸர் வில்லியம் (ஜெர்மனி).
(6) பரோடா மகாராஜா (இந்தியா).
(7) ஹர் பேஸில் ஸஹராப் (க்ரீஸ்).
(8) ஸைமன் பாடினோ (பொலிவியா).
(9) லார்ட் இவிபா (இங்கிலாந்து).
(10) மே. த. ஆகாகான் (இந்தியா).
(11) ஹைதராபாத் நிஜாம் ஷை
(12) ஜி. டி. வெண்டல் (ப்ரான்ஸ்).
(13) ஜான் டி. ராக்பெல்லர் இளையவர் (அமெரிக்கா).
(14) ஷையார் மூத்தவர் ஷை
(15) லாயிலூயி டிரேபஸ் (ப்ரான்ஸ்).
(16) ஆண்டிரூ மல்லன் (அமெரிக்கா).
(17) ப்ரிட்ஸ் தைஸன் (ஜெர்மனி).

அமெரிக்கா ஐந்து குபேரர்களையும், இந்தியாவும் ப்ரான்ஸும் மும்மூன்று குபேரர்களையும், ஜெர்மனியும் இங்கிலாந்தும் இரண்டு இரண்டு குபேரர்களையும், பொலிவியா ஒருவரையும், க்ரீஸ் ஒருவரையும் பெற்றிருக்கிறது. இந்த வகையிலாவது இந்தியா அமெரிக்காவுக்கு அடுத்தபடி நிற்பது இந்தியர்களுக்கு நாக்கில் கொஞ்சம் ருசி தட்டுமென நினைக்கிறோம்.

# சமூக சீர்திருத்தமும், தொழில் தேர்ச்சியும்

[ஈ. வே. சோமசுந்தரம், கோவை]

(சென்ற இதழ் 220-ம் பக்கத் தொடர்ச்சி)

(உலக மாறுதல்களை அனுசரித்து நடந்து முன்னேற்றமடைதலும், எதிர் காலத்தில் நலம் விளையும் என்ற நம்பிக்கை கொண்டு அறிவு ஆராய்ச்சியுடன் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் உழைத்தலும், தன்னம்பிக்கையுடன் பிரதி மனிதனும் சமூக சூழல்களை எதிர்த்துப் பொதுநல நோக்கத்துடன் வாழ்முறையை அமைத்துக்கொள்ளுதலும் வேண்டும். தொழிலில் வெற்றியுறும் ஜீவிய முறையை ஒரு இலட்சியமாக சமூகத்தின் பெரும்பாலார் கொண்டு நடத்தலும் வேண்டும்.)

## 2. ஒவ்வொரு மனிதனுடைய குணமும், ஒழுக்கமும்

இந்த நவீன சமூகக் கொள்கைகளையும், வாழ்க்கையின் சித்தாந்தத்தையும் அனுஷ்டிக்கும்போது ஒவ்வொரு மனிதனுடைய குண சீர்திருத்தமும், நடைமுறை ஒழுங்கும் கவனிக்கப்படல் வேண்டும். குண நலன்களின் அடிப்படையான இயற்கையறிவும், இயற்கைத் தூண்டுதலும் மனிதருடன் கூடப் பிறப்பனவாயினும், மனிதர் ஒழுக்கம் பெரும்பாலும் சமூகப் பழக்கவழக்கக் கட்டுப்பாடுகளாலேயே தீர்மானிக்கப்பட்டு அமைகிறது. இந்த சந்தர்ப்பத்தில் மனிதர் நடத்தையில் சீர்திருத்தம் எவ்வளவு அவசியம் என்பது இந்தக் கால் நூற்றாண்டில் நம் தேச மக்கள் அடைந்துள்ள சமூக மாறுதல்களை ஆராய்ந்து பார்த்தால் நன்கு விளங்கும்.

புதியதொரு நடைமுறையைப் பாகுபடுத்திக்கொள்ளு முன்னர் தேசத்தின் நிலைமைக்கேற்ற தேச முன்னேற்றத் திட்டத்தில், முக்கியமாக பிறர் சகாயம் எதிர் பாராத தன்னம்பிக்கை, தன் மதிப்பு, ஊக்கம், காயசித்தி பெறுவதில் விடாமுயற்சி, கூரிய ஆலோசனை, சிக்கனம் முதலான தொழில் வெற்றிக்கு ஆதாரமான பல அரிய குண நன்மைகள் அமைந்திருத்த லவசியம். தற்காலத்தில் தொழில் வெற்றிக்கு அவசியமான குணம் யாதெனில் பலர் கலந்து கூட்டுறவுடன் தொழில் நடத்தலேயாம். கைத்தொழில்களில் ஒவ்வொரு மனிதனும் தனியாய் முயற்சி செய்தலையும், தனியாக ஒரே முறையை ஒரே மாதிரி ஆரம்ப முதல் முடிவு வரை செய்து வருதலையும் இந்த முறையானது மாற்றி ஒரு தொழிலிலுள்ள பல பாகங்களைப் பல பேருக்குப் பிரித்துக் கொடுத்து (Division of Labour) ஒரு வஸ்துவை செய்து முடிப்பதற்கு அவசியமான பல பின்ன பாகங்களை பலர் செய்யும்படி ஏற்படுத்துகிறது. இந்தத் தொழில் முறை மாற்றத்தால் கூட்டுறவும், கலந்து தொழில் செய்யும் வழக்கமும் இன்றியமையாததாகிறது. ஒரு தொழிலின் பரிபூரணமும், செவ்விய முடிவும் ஒருவனுக்கு அன்றி ஒரு கூட்டத்தாருக்கே புகழை அளிக்கிறது.



இந்த இலட்சியத்தை ஜனங்களிடையே பரப்பு[illegible] மிகச் சீக்கிரத்தில் தேசத்தவர் அனைவர்களுடைய புதிய ஒழுக்கத்தின் [illegible] தரும். இந்நோக்கம் சமூக உணர்ச்சிகளிலே பொதுவானதென்று சொல்லக்கூடிய நிலைமை அடையுமானால் அதுவே தற்காலத் தொழில் தேர்ச்சியையும், சமூக நலத்திற்கேற்ற ஒழுக்கத்தையும் பல துறையிலும் பிரதி மனிதனுக்கும் தரும். குழந்தைகள் தொட்டிலும், பாலர் விளையாட்டு இடங்களும், பள்ளிக்கூடங்களும், கலாசாலைகளும், வயல்களும், தோட்டங்களும், காடுகளும், தொழிற்சாலைகளும், வீடுகளும், ஜனங்களின் பொதுநிலைக் கழகங்களும் இத் தொழிலின் ஐக்கிய உணர்ச்சியின் பயனாக பின் வரும் சந்ததியாருக்கு நற்குணங்கள் நன்கு படிவதற்கு உதவியாய் இருக்கும்.

### கல்வித் துணை நிர்வாகம்

குண சீர்திருத்தத்திற்கு முக்கியமான வழிகளில் கல்வி முறை அமைப்பு மிக உயரிய சாதனமாகும். மனித வர்க்கம் தாங்கள் ஒரு கூட்டத்தவர் என்ற உணர்ச்சி பெற்ற காலம் முதல் இவ் விஷயத்தை யறிந்துள்ளனர். ஒரு தேசத்தவரை ஜயித்தவரோ, ஜன சமூகத்தில் முன்னேறி நிற்கும் கூட்டத்தாரோ, ஜாதியாரோ கல்வித் துறையின் நிர்வாகத்தைத் தங்கள் கைக்குள் வைத்துக்கொள்வதை உலக சரித்திரத்தில் பல்வேறு உதாரணங்களால் எடுத்துக் காட்டலாம். இதற்கு நம் இந்தியாவில் சமூக வாழ்வில் மேனிலையிலுள்ள பிராமணர்களே பல்லாண்டுகளாகக் கல்வி முறைகளை வரையறுத்து வருவதை திருட்டாந்தமாகக் கூறலாம். அவர்களுடைய நீடிய ஆதிக்கமும், வெகு நாளைய செல்வாக்கும் இந்த இரகஸ்யத்திலேதான் அடங்கியிருக்கிறது. மற்றும் ஆங்கிலேயர் இத்தேசத்தை சிறிது சிறிதாக, எவ்வித உரிமையும் நியாயமும் இல்லாமலே கைப்பற்றின நாள் முதல் கல்வி முறையையும், வித்தியா இலாகாவின் நிர்வாகத்தையும் தங்கள் கைவசமாக்கிக்கொண்டார்கள். அவர்கள் ஆதிக்கமும், பலமும் இன்னும் உரமாயிருப்பது அந்நிர்வாகம் அவர்கள் கையிலிருப்பதனாலேதான். மற்றும் தற்போது ராஜாங்கத்திற்கும், ஜனங்களுக்கும் இத்தேசத்தில் நடைபெறும் போராட்டத்தில் முக்கியமான சச்சரவு தேசியக்கல்வி நிர்வாகத்தைப் பற்றியேயாகும். தொழில் தோச்சிக்கும், வெற்றிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் நம் இந்தியர் கல்வி முறைத்திட்ட நிர்வாகத்தை நமது கைவசமாக்கிக்கொள்ளல் இன்றியமையாத அவசர அவசியமாகும். சுயராஜ்யத்திற்கும் அது அடிப்படை.

புதிய வியாபார முறைகளும், பல தேசத்தினரிடையே போட்டிகளும் மிகுந்துள்ள இக் காலத்திலே அரசியல் விஷயங்களும், பொருளாதார விஷயங்களும் பிரிக்கப்பட முடியாதவை யாகும். பொருளாதார சம்பந்தம் நிறைந்த இந்தியா, இங்கிலாந்து விஷயத்தில் மேற்கண்ட பிரச்சினை வரையறுக்கப்படாமல் வழவழ கொழகொழ என வைக்கப்பட்டிருப்பது முற்றிலும் உண்மையாகும். தேசிய ராஜாங்க அமைப்பிற்கு பலமளிக்கவேண்டியுள்ள சில அரிய குணங்கள் தொழில் தேர்ச்சிக்கும் ஆதாரமானவையே யாகும். ஆனால் இந்தியர்களுக்கு எதிர் நிற்கும் முக்கியமான விஷயம் எதுவெனில், நம்மிடையே உள்ள ஆழ்ந்த பரிதாபகரமான ஏழ்மையை நீக்குதலேயாகும். சுயராஜ்யத்தின்

ஸ்தாபனமும் இதற்கு முக்கிய துணையெனவே வேண்டப்படுகிறது. சுயராஜ்யத்தினுடைய அவசியத்தைக் குறைத்துக் கூறாமல், தொழில் தேர்ச்சிக்கு அவசியமான குண சீர்திருத்தம் மிக முக்கியமாய் வேண்டற்பாலதென்பதை அறிவுறுத்தல் வேண்டும். சுயராஜ்ய ஸ்தாபிதத்திற்குப் பின்பும் இந்திய மக்கள் வியாபாரத்தில் வெற்றி தரும் சமூக குண சீர்திருத்தம் செய்து கொள்ளுதல் வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்துகொள்ளாராயின் தேசத்தின் முக்கிய கஷ்ட நிவாரணம் ஆகாமல்தான் இருக்கும்.

## 3. பொது ஜன நல்லொழுக்கம்

தொழில் தேர்ச்சிக்கான குண வளர்ச்சியோடு பொது ஜனங்களிடையே உத்தம குணங்களும் பிடிபட வேண்டியது அவசியமாகும். இந்திய மதக் கொள்கைகள் உன்னத தெய்வீக இலட்சியங்களையும், உயரிய பிரத்தியேக ஒழுக்க விதிகளையும் ஜனங்களிடையே நிலைநாட்ட முயற்சித்தன. ஆனால் அவைகள் மனிதனுக்கும், கடவுளுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி பெருமிதமாகவும், வற்புறுத்தியும் கூறியுள்ளதைப் போல மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தின் அவசியத்தையும், அதன் முறை விதிகளையும், பெருமையையும் சிலாகித்தும் கண்டிப்பாயும் வரையறுக்கவில்லை. அங்ஙனம் கூறாமையால், பொது ஜன ஐக்கிய வாழ்வுக்கேற்ற சீரிய ஒழுக்கங்கள், பிரதி மனிதனுடைய பிரத்தியேக அந்தரங்க நடவடிக்கையடைந்துள்ள உயர்ந்த நிலையை எய்தவில்லை. மேலும் இந்தியாவில் சமூக வாழ்வு ஒழுங்கான நிலை அடைவதற்கு முன்பே ஒழுக்க நெறிகள் வரையறுக்கப்பட்டுத் திட்டப்படுத்தப்பட்டன. அதனால் ஜனங்கள் வாழ்க்கை முறையும், இலட்சியமும் பிற்பட்டனவாகிவிட்டன. சமூக வாழ்வில் சிக்கல்களும், பல்வேறு பின்னல்களும் நிறைந்துள்ள தற்காலத்திய ஜன சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் அப் பழைய ஒழுக்க விதிகள் பெரும்பாலும் அநுசிதமாகிவிட்டன.

பல்வேறு வகைப்பட்ட மதத்தினரும், வர்க்கத்தினரும், கொள்கையுடையவர்களும், பல பாஷை பேசும் பல கூட்டத்தாரும், பல ஜாதியாரும் இருப்பதே தேசிய முன்னேற்றத்திற்கு ஒரு பெரிய தடையாகும். பழைய வழக்கங்களும், மற்றும் முன்பு இருந்து வந்த மத சித்தாந்தங்களில் புகுந்துகொண்ட, செருகப்பட்ட பல தவறான கொள்கைகளும், பல வகையான வேற்றுமைகளும், பிரிவினைகளும் இருப்பதாலும் அந்நிய தேசத்தவர் பலரின் படையெடுப்பினாலும், அவர்கள் ஆளுகைக்கு உட்பட்டிருந்ததாலும், இருப்பதாலும், அந்நிய நாட்டவருடைய நாகரீகத்தின் நோக்கங்களும், இலட்சியங்களும் தாக்குவதாலும், சிதறுண்ட பழைய ஒழுக்க முறைகளின் உயரிய நிலைமை தடுமாறி அவை வீட்சியடைந்துவிட்டன. அந்தச் சீர்கேடடைந்த பழக்க வழக்கங்களுக்குப் பிரதியாக, புதியதரப்பட்ட ஒரு ஒழுக்க நெறியும் வரையறுக்கப்படவில்லை.

பிற்போக்கான பொது ஜன ஒழுக்க முறைகளினால் நம் தேசத்தில் ஏற்பட்டுள்ள கொடுமைகளும், நஷ்டங்களும், அறிவீனச் செயல்களும் மிகவும் தெளிவாகத் தெரிவன ஆதலால், அவைகளைப் பற்றி



நாம் நீண்ட வாதம் ஈண்டு செய்தல் அநாவசியம். சமூகக் கட்டுப்பாட்டுக்கு அன்றி, பொருளாதாரத்திற்கும், பொருட் சிக்கன வெற்றிக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடியபடி ஒருவரைப் பற்றி ஒருவர் அசூயை சொல்வதும், அவநம்பிக்கைப்பட்டு கோர்ட்டு வியாஜ்யங்களில் மூழ்கி நிற்பதும், பொறாமையும், குறுகிய மனப்பான்மையும் கொண்டு ஒரு மாகாணத்தவர், ஒரு கொள்கைக்காரர், ஒரு கட்சியாளர், ஒரு வர்க்கத்தவர், ஒரு ஜாதியார், ஒரு பாஷையார் என்று பிரிந்து பிரிந்து நிற்றலும், சண்டையிடுதலும் அபிப்பிராய பேதப்பட்டுச் சூழ்ச்சி செய்தலுமாகிய பரிதாபகரமான நிலை நம் தேசம் எங்கும் பரவி நிற்கின்றதைப் பார்க்கின்றோம். தொழில் முறை வெற்றிக்கு தற்காலத்தில் மிகவும் அவசியமானது யாதெனில், கூடிக் கலந்து கூட்டுறவுத் துறையில் தொழில் செய்தலேயாம். பரஸ்பர நம்பிக்கையும், அந்நியோந்நிய கூட்டுறவு முயற்சியும் இன்றேல் தொழிலில் வெற்றி காண்டல் அரிது. அறிவு விளக்கம் பெற்ற பொது ஜன அபிப்பிராயத்தாலும் ஒரு புதிய தேசிய எழுச்சியாலும் ஆதரிக்கப்பட்ட ஒரு நூதன சமூக லட்சியத்தினாலும்தான் கடமைப்பாடும், பொறுப்பும் நிறைந்த பொது நல சேவையில் ஊக்கமும், சீரிய ஒழுக்க வீரியமும் கொண்டதாக நம் நாட்டவர் வாழ்க்கையைச் சீர்திருத்த முடியும்.



........பல்வகைப் பிரளயங்களும் ஒருங்கே நிகழ்ந்தாற்போல,—

# செங்குந்த யாத்திரைவாசி

(சென்ற இதழ் 226-ம் பக்கத் தொடர்ச்சி)

நாரதமுனிவர் சொல்லிய அனைத்தையும் கேட்டுத் தீர்மானங்களைப் படித்துப் பார்த்த வாரணக்கோவிற்கும், மறியண்ணனுக்கும், வீரவாகு தேவராதிய நவவீரர்களுக்கும் அடக்க முடியாத வருத்தமும், அவமானமும் கோபமும் உண்டாயின என்று சொல்லவும் வேண்டுமோ? கண்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன. புருவங்கள் நெற்றிக்குமேல் ஏறின. உதடுகள் துடித்தன, வெயர்வை நீரில் முற்றும் நனைந்த ஆடைகள் அவர்கள் விடும் பெருமூச்சின் வெப்பத்தால் உலர்ந்தன. இக் காட்சியினைக் கண்ட எமதருமராஜன் என்ன நேரிடுமோ எனப் பயந்து 'நாம் ஏன் இந்த வம்பில் தலையிட்டுக் கொண்டோம்' என்று முணுமுணுத்துக் கொண்டே பின்புறம் ஒவ்வொரு அடியாக வைத்து நகர ஆரம்பித்தான். சித்திரகுப்தனும் விரித்து வைத்துக் கொண்டிருந்த சுவடிகளைக் கட்டிச் சுருட்டிக் கொண்டு ஓட ஆரம்பித்தான். தெய்வ மகாசபையிலிருந்து உத்தரவின்றி வெளியே போதல் அபசாரமாகு மாகையால் போக வேண்டாம் என்று தருமராஜன் ஜாடை காட்டினான். சபா மண்டபத்திற்கு வெளியே இருந்த எமகிங்கரர்களும் பிறரும் ஓடி ஒளித்தார்கள். இவர்கள் கதியே இப்படியிருக்க என்னைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! என்னைப்பற்றி அதிகம் சொல்லமாட்டேன். என்னை நான் அடியோடு மறந்தேன். அருகிலிருந்த ஒருவர் என்னை இறுகக் கட்டி அணைத்துக் கொண்டார். என் கண்களில் மின்மினி பறந்தது. உடல் நடுங்கிற்று. நாரதர் மாத்திரம் தைரியமாக அசைவற்று புன்னகை செய்து அமர்ந்திருந்தார்.

அப்போது அங்கே ஏககாலத்தில் நடந்த அமளி துமளிகள் அனைத்தினையும், நடந்தவாறே எடுத்துக்காட்ட முடியாமைக்காக நான் மிகவும் வருந்துகிறேன். ஆயினும் என சக்திக்கேற்றவாறு கூடிய வரையில் சொல்லுகிறேன்.

காலாக்கினி ருத்திரர்களைப் போல் விளங்கிய வாரணக்கோவும், மறியண்ணனும் செய்த ஆர்ப்பாட்டத்தை என்னென்று சொல்லு



வேன். வீரவாகுதேவர் முதலிய வீரர்கள் செய்த அமர்க்களத்தையும், சபதங்களையும் பற்றி என்னென்று கூறுவேன். வாரணக்கோ— இதுவரையில் இருக்குமிடம் தெரியாது அடங்கி யொடுங்கி யிருந்த வாரணக்கோ, கொக்கறுகோ கொக்கறுகோ கொக்கறுகோ என்று அண்டங்கள் எல்லாம் அதிர்ந்து விழும்படி பெருங் கூச்சலிட்டு சிறகுகளை விரித்துப் படபடவென்று அடித்துக்கொண்டு சரேலெனப் பாய்ந்து சபாமண்டபத்தின் மேலேயுள்ள ஒரு தூலத்தின் மீது உட்கார்ந்து மறுபடியும் அதே மாதிரி கீழே பாய்ந்தது. அதே சமயத்தில் மறியண்ணனும் ஆர்ப்பாட்டத்தோடு எழுந்து உடலை உதறி மயிர்களைச் சிலிர்த்து சரேலெனப் பாய்ந்து சபா மண்டபத்தின் வாயிலண்டை குதித்து விண்மீன்கள் பலபலவென்று உதிரும்படி பேரொலி செய்தது. தேவர்கள் நடுநடுங்கிப் பயந்தார்கள். மகரிஷிகள் கண்களை மூடி நிஷ்டையி லுட்கார்ந்தவர்களைப்போ லானார்கள். வாரணக்கோ அடித்துக்கொண்ட சிறகுகளால் உண்டான பெருங் காற்றினால் சூராவளியில் அகப்பட்ட துரும்பைப்போல் பலர் அலைப்புண்டு வருந்தினார்கள். சித்திரகுப்தன், எமதருமராஜன், எமகிங்கரர்கள் முதலிய பலர் மூர்ச்சையானார்கள். மற்றும் சிலர் பயத்தால் ஒருவரை யொருவர் சேர்த்துக் கட்டிக் கொண்டார்கள். சிலர் தங்கள் ஆசனங்களிலிருந்து கீழே விழுந்தார்கள். சுருங்கக் கூறின் வீரர்களும் நாரதரும், நானும் என்னைப் பிடித்துக் கொண்டிருந்தவரும், கவிச் சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தருமே தான் ஸ்வாதீனத்தை இழக்கா திருந்தவர்கள் என்று சொல்லலாம். ஏனையவர்கள் பட்டபாட்டை யான் சொல்ல வல்லவனல்லன். சபையின்கண் நிகழ்ந்த அனைத்தையும் யான் கண்ணுற்றேன் என்றும் சொல்ல மாட்டேன். எல்லாம் ஏககாலத்தில் நடந்தபடியால் அக்கினிப் பிரளயம், வாயுப் பிரளயம், ஜலப் பிரளயம், பிருதுவிப் பிரளயம், பூகம்பம் ஆகியவை அனைத்தும் ஒருங்கே திடீரென உண்டானால் உலகம் என்ன பாடுபடுமோ அப்பாட்டை மேற்கூறிய சிலர் தவிர அச்சபையின்கண் இருந்த ஏனையோர் அனைவரும் அடைந்தார்கள் என்பதும் மிகையாகாது. சபா மண்டபத்திற்கு வெளியேயுள்ள இடங்களும், கைலாசமும் மற்ற உலகங்களும் பெரும்பாடுபட்டிருக்க வேண்டுமென்றே எண்ணுகிறேன்.

'பல்வகைப் பிரளயங்களும் ஒருங்கே நிகழ்ந்தாற்போல்' என மேலேகூறியது என்னுடைய சொந்த கற்பனையென்று கருதக்கூடாது. யான் கண்டவற்றைக் கண்டவாறே கூறினேனே யொழிய வேறில்லை. வாரணக்கோ சிறகை அடித்துக் கொண்டதனா லுண்டான காற்று பிரளயக் காற்றை ஒத்திருந்ததென்றும், இருவருக்கும் உண்டான கோபாக்கினி பிரளயாக்கினியை ஒத்திருந்ததென்றும் கூறுவது பொருத்தமுடையதென்றே கொள்ளவேண்டும். வாரணக்கோவும் மறியண்ணனும் அச்சமயம் உருவம் பருத்து ஓங்கி வளர்ந்தன. வாரணக்கோ அளவிறந்த சிறகுகளை உடல் முழுதும் உடையது போலவும், மறியண்ணன், மயிர்கள் சிலிர்த்ததனால் ஒரு பெரிய முள்ளம் பன்றி போலவும் தோன்றின. இவற்றின் செயல்களைக் கண்ட நவ வீரர்கள் அவமானக் கடலில் ஆழ்ந்தவர்களாய்ச் சிறிது நேரம் தலைகுனிந்து ஆழ்ந்து யோசித்தார்கள். க்ஷணத்திற்குச் க்ஷணம் ஆத்திர

மானது பொங்கித் ததும்பிக் கரைபுரண்டு வழிய ஆரம்பித்தது. உடனே வீரவாகுதேவர் வீராவேசத்தோடு எழுந்து தம் துணைவராகிய எம்பெருமானை வணங்கிப் பேசத் தொடங்கினார். ஆனால் பேச முடியவில்லை. சிறிது நேரம் பொறுத்து 'ஓ' என்ற ஒரே சத்தம் செய்தார். கொஞ்சம் கொஞ்சமாக நிதானித்துத் தெளிவுற்று ஹே! வாரணக் கோவே! ஹே! மறியண்ணலே! இது பரம்பொருள் வீற்றிருக்கும் தெய்வ சபை என்பதை ஒரு சிறிதும் கருதாது இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிற நீங்கள் பூலோகத்தில் பிறந்து சிலகாலம் உழலக் கடவீர் என்று சாபமிட்டுத் தமது தம்பிமார்களைப் பார்த்து நமது குலத்தின் கீர்த்தி எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது, பார்த்தீர்களா! நமது குலப் பெருமையே பெருமை! ஆஹா நன்றாயிருக்கிறது, என்று சொல்லி நகைத்து, இதோ நான் புறப்படுகிறேன் பூலோகத்திற்கு; அவர்களைத் திருத்தாமல் யான் திரும்புவதில்லையென்று சபதம் செய்தார். அப்போது அவரது மீசை துடித்தது, கண்கள் சிவந்து நெருப்புப் பொறிகளைக் கக்கின. உடல் வெயர்த்தது. மலை போன்ற இரு புயங்களும் விம்மின. அச்சமயம் யான் "ஆம், எம்குலத் தலைவனே! 'இன்னம் ஒருகால் எனது இடும்பைக் குன்றிற்குக் கொன்னவில் வேல் சூர்தடிந்த கொற்றவா—முன்னம், பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட, தனி வேலை வாங்கத் தகும்'' என்றாற்போல் தேவரீர் முன்னம் பானுகோபனிடத்துச் செலுத்திய கோபத்தை இன்னுமொருகால் நம் குலத்தவரிடத்துள்ள அறியாமை, கக்ஷிப் பிளவு, பொறாமை, உயிர்ப்பலியிடுதல் முதலிய அநாச்சாரங்களிடத்து செலுத்துதல் தகும்'' என்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன். வீரவாகுதேவர் கூறிய சபதத்தைக் கேட்ட ஏனைய வீரர் எண்மரும் தங்களாசனத்தி லிருந்து சரேலென எழுந்து, 'இதோ நானும் புறப்பட்டேன், நானும் புறப்பட்டேன், திருத்தாது திரும்பேன்' என்று சபதம் செய்து குதித்தார்கள். மேற்கூறியவை யாவும் இரண்டொரு நிமிஷ காலத்திலேயே நடந்தன. அச்சபா மண்டபம் என்ன அலங்கோலமா யிருக்குமென்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். இந்த பேரிரைச்சலிலும் அமளி குமளியிலும் நான் திடீரென்று விழித்துக்கொண்டேன். அறையில் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. மேஜைமீது விரித்து வைத்த திருவாசகம் விரித்தபடியே யிருக்கிறது. கெடிகாரம் டிங், டிங், டிங் என்று மூன்று மணி அடிக்கிறது. என் தந்தையார் என் அருகில் நின்று கொண்டு, "என்னடா குழந்தாய் அலறுகிறாய், ஏதாவது கனவு கண்டாயோ? என்று கேட்கிறார். இதுவரையில் தோன்றியது கனவோ இப்போது தோன்றுவது தான் கனவோ என்று சந்தேகித்தேன். கண்களைத் துடைத்துக் கொண்டு அறைக்கு வெளியே வந்து பார்த்தேன். முன்னையதே கனவென்று உணர்ந்தேன். நடந்தவற்றை ஆதியோடந்தமாக என் தந்தையரிடம் கூறி, அப்பா! இக் கனவை என்னவென்று கருதுகிறீர்கள். உண்மையிலேயே நமது குல முதல்வர்களாகிய நவவீரர்கள் பூலோகத்தில் அவதாரம் செய்து நம் குலத்தவரைச் சீர்திருத்தம் செய்வார்களா? என்று கேட்டேன். என் தந்தையார் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டு 'அடே! இது உனக்கு ஒரு பைத்தியம்போலிருக்கிறது. படிக்கிறவனுக்கு இந்தக் கவலை



யெல்லாம் ஏன். இதைக் கேட்டவர்கள் உன்னைப் பித்தம் பிடித்தவனென்று கேலி செய்வார்கள். உன்னுடைய நினைவே கனவாய்த் தோன்றிற்று'' என்று கூறிச் சென்றார். பிறகு நான் இதை யாரிடத்தும் சொன்னேனில்லை. ஆனால் அக்கனவை மாத்திரம் அப்போதே எழுதிவைத்து விட்டேன்.

சில மாதங்களுக்கு முன் செங்குந்தமித்திரன் பிரதியொன்றைக் கண்டேன். உடனே ஈரோட்டில் நடந்த மகாநாட்டிற்கு நானும் போக உத்தேசித்துச் சிறந்த அறிவாளியாகிய நமது தலைவர் பூசைக்கார முதலியாரையும் அழைத்தேன். அதற்கு அவர் மகாநாடு கூட்டுவோர் யாரென்று நாம் அறியோம், பொறுத்துப் பார்ப்போம் என்று விடை கூறினார். பின்னர் வெளிவந்த ஈரோட்டு மகாநாட்டு மலரை வாசித்துப் பார்த்தேன். என் கனவைப்பற்றிய சந்தேகத்தை ஒருவாறு நிவர்த்தி செய்து கொண்டேன். இன்று காலையில் சென்னை தலைச் சங்கத்திலிருந்து பிரசாரகர் வந்திருப்பதாகவும், இன்று ஒரு பொதுக்கூட்டம் கூட்டுவதாகவும் அறிந்தேன். இதுவரையில் பத்திரப்படுத்தி வைத்திருந்த இப்புத்தகத்திலுள்ள யான் கண்ட கனவை கூட்டத்தில் பகிரங்கமாகப் படித்துக்காட்ட விரும்பினேன். செங்குந்த மகா ஜனங்களே! இது யான் உண்மையாகவே கண்ட கனவு. நீங்கள் இதை எப்படி எடுத்துக் கொண்டாலும் எடுத்துக் கொள்ளுங்கள். இது கனவேயாயினும் தெய்வீகம் பொருந்தியது என்பதில் எனக்கு யாதொரு சந்தேகமுமில்லை. யான் நறுமணமென்னும் இவ்வூரில் பல வருஷங்களாக இருந்தும் உங்களில் அநேகர் என்னை அறிந்திருக்க மாட்டீர்கள். இதோ அடுத்துள்ள தோட்டத்தில்தான் என் ஆசிரமம் அமைந்துள்ளது. அடுத்த புதன்கிழமை இரவு $10\frac{1}{2}$ மணிக்கு இம் மண்ணுலக வாழ்க்கையை நீத்து என்னை யாளுடைய சிவபரம் பொருளோடு இரண்டறக் கலந்து, இரும்புண்ட நீர்போல் திரும்பாத வீடுபெறுவேன் என்று சொல்லி, கோடிலிங்க முதலியார் தமது பேருரையை முடித்தார். நேரமாய் விட்டபடியால் சங்கப் பிரசாரகர் அன்று பேசக்கூடவில்லை, வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. மறுநாள் மாலை 7-மணிக்குக் கூடிய கூட்டத்தில் தலைச்சங்கப் பிரசாரகர் 'ஒற்றுமை' என்பதைப் பற்றி ஒரு அருமையான உபந்யாசம் $9\frac{1}{2}$ மணி வரையில் செய்தார்.

வாசகர்களே! சென்ற சுமார் இரண்டு வருஷங்களாக மித்திரனில் தொடர்ச்சியாய் எழுதிக்கொண்டு வந்த இந்த கனவை, மித்திரனில் வெளியிடவேண்டுமென்ற ஆசையினால், கூட்டத்திற்கு மறுநாள் கோடிலிங்கமுதலியார் ஆச்சிரமத்தை அடைந்து அவர்களைத் தரிசித்து, நல்லுபதேசம் பெற்று, அவர்கள் கண்ட கனவை மித்திரனில் வெளியிடுவதாக வாக்களித்து, அவரது நோட்டுப்புத்தகத்தைப் பார்த்து ஒரு நகல் செய்துகொண்டேன். அதை அப்படியே வெளியிடலானேன். யானுக அதில் ஒன்றும் கூட்டவுமில்லை, குறைக்கவுமில்லை.

கோடிலிங்க முதலியார் சொல்லியபடியே அடுத்த புதன்கிழமை இரவு $10\frac{1}{2}$மணிக்கு சீடர்களும் நண்பர்களும் சூழவிருக்க நிஷ்டை கூடி சிவத்தோடுகலந்து சிவமானார். மறுநாள் காலை யானும் உடனிருந்து சமாதிக்கிரியைகளைப் பூர்த்திசெய்துவிட்டு நறுமணத்தைவிட்டு புறப்பட்டேன்.

---



.........நான் இந்திர லோகத்தில் இருக்கக் கண்டேன்.—

# எனது ஜென்ம விரோதிகள்

['கச்சி யடிகள்']

ஜனமேஜயனுக்குப் பாம்பு வர்க்க மனைத்தும் பகை. எனவே சர்ப்பயாகஞ் செய்து அவைகளை நிர்மூலமாக்க முயன்றான் என்பது பாரதக் கதை. எனக்கோ யாகஞ் செய்யும் ஆற்றல் இல்லை; யாகத்தில் நம்பிக்கையு மில்லை. என் விரோதிகளை எப்படித் தொலைப்பது. இதுவே இராப்பகல் என் மூளையைக் குழப்பி வந்தது.

பகைவர்கள் நாளுக்கு நாள். விநாடிக்கு விநாடி கணக்கின்றிப் பெருகி வந்தனர். அவர்கள் இழைக்கும் துன்பமும் வேதனையும் என்னால் தாங்க முடியவில்லை. எனது பிறப்பிடத்தையும் துறந்து பல்வேறிடங்களுக்கு ஓடினேன். ஆனால், என் விரோதிகளோ பக்கா பேர்வழிகள். நான் அங்கு போவதற்கு முன், அவர்கள் அங்கே குடியேறி என் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றனர். பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணப் பொருளாய் அவர்கள் விளங்குவதைக் காண நான் பேராச்சரிய மடைந்தேன்.

உலகமே எனக்கு வெறுப்பாய்த் தோன்றியது. 'சே! இதென்ன உலகம். பொதுநலத்திற்கு உழைக்கும் தியாகி என்பதையும் மறந்து என் விரோதிகட்கு இடந்தந்து என்னை விரட்டி யடிக்கின்றனரே, நன்றிகெட்ட மாந்தர். இவர்கள் முகத்திலும் இனி விழிக்கக் கூடாது' என்ற வைராக்கியம் தோன்றியது. எனது கால்கள் நடுக்கத்தால் ஆடின. பல்டி யடித்துக் கீழே விழுந்தேன். அவ்வளவுதான். கண்மூடி மௌனியாய்—ஆகாசத்தில்—அன்ன ஆகாரமின்றி—பல பகல் பறந்து செல்லக் கண்டேன். உலக விரக்தியால் ஏற்பட்ட பலனைப் பார்த்தீர்களா?

ஒரு நாள் கால்கள் கீழே படிந்தன. கண்களைத் திறந்து பார்த்தேன். என்ன அதிசயம். நான் இந்திரலோகத்திலிருக்கக்கண்டேன்.



இந்திரன் கொலுவீற்றிருந்தான். சப்தரிஷிகள் அவனருகில் அமர்ந்திருந்தனர். தேவர்கள் பலர் குடை பிடித்தனர். அரம்பையர் நடனமாடினர். இக்காட்சி என் கண்களைக் கொள்ளைகொண்டன. என்னை மறந்து நான் அக்காட்சியில் சொக்கிக் கிடந்தேன். திடீரென ஊசியால் யாரோ முதுகில் குத்தினார்கள். ஆச்சரியத்துடன் சுற்று முற்றும் பார்த்தேன். என் பகைவர்கள் பலர் ஆங்கு ஆடிப்பாடிக் களித்திருந்தனர். விழுந்தடித்துக்கொண்டு என் கால்கள் விரைந்து பாய்ந்தன. அடுத்த விநாடி பிரமலோக வாசியானேன். அங்கே நான் கண்ட காட்சி இப்போதும் என்கண்முன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

நான்கு தலைகள்—எட்டுக் கைகள்—நாக்கிலோர் மங்கை—இக்கோலத்தோடு ஒருவர் வீற்றிருந்தார். அவர் யானையும் பூனையும், குரங்கும் குழந்தையும், பாம்புங் கீரியுமாய்ப் பல உருவங்களை மண்ணால் செய்து ஆகாயத்தில் செலுத்தியவண்ண மிருந்தார். கண்மூடித் திறப்பதற்குள் பல ஆயிரம் உருவங்கள் வெகு தூரம் பறப்பதும் மறைவதுமாயின. என் கண்கள் இமை கொட்டவில்லை.

பிரம்மாவின் அழகைப் பாதாதிகேசம் வரை பார்த்து மகிழ்ந்தேன். ஆனால், என் மகிழ்ச்சி நீடித்து நிற்கவில்லை. அவரது மார்பிலும், தோளிலும், சிரசிலும் என் பகைவர் பலர் கம்பீரத்துடன் வீற்றிருக்கக் கண்டதும் என்னை யறியாமல் கால்கள் எகிறிப் பாய்ந்தன. அடுத்த நிமிடம் வைகுண்ட நாதன் காட்சி கிடைத்தது.

இவ்விடத்திலாயினும் என் பகைவர்கள் வராமலிருக்க அருள் சுரக்கவேண்டுமென லோக ரட்சகராய் சீதேவி பூதேவி சமேதராய் வீற்றிருந்த பகவானைப் பிரார்த்தித்தேன். ஸ்ரீலோலனான அவனுக்கு என் பிரார்த்தனை ஏறவில்லை.

'செல்வத்தாயே! பூமாதேவி! எம்மினத்தவர் எங்கும் பெருகி வளர கடாட்சம் செய்யவேண்டும். நாங்கள் மண்ணுலகி லிருந்து எமதர்ம ராஜனுக்கு எவ்வளவோ உதவி புரிந்து வருகின்றோம். பூமாதேவியின் பாரத்தைக் குறைக்கின்றோம். அவர்களை ரட்சிக்கும் பொறுப்பு, செல்வத்தாயே! உமக்கும் அதனால் குறைகின்றதன்றோ? தேவர்கள் பலருக்கு உதவி யளிக்கும் நாங்கள் மண்ணுலகில் பல்கி வளர திருவருள் பாலிக்க வேண்டுகிறோம்' என்ற பிரார்த்தனையோடு வேதாத்தியயன ஓசை செய்துகொண்டிருப்பவர் யாரெனக் கவனித்தேன். ஆ! என்ன சொல்வேன். இங்குமா என் ஜென்ம விரோதிகள் என்று பற்கள் கடித்துக்கொண்டன. கண்கள் இறுக மூடிக் கொண்டன.

* * *

'ஏன் உங்களுக்கு இந்த வேடம்! பணம் இல்லையா? பாக்கிய மில்லையா? உத்யோர் இல்லையா? ஒன்று மில்லாதவர் போன்று சடை வளர்த்துச் சந்நியாசி யாகின்றீரே! அளவற்ற ஆபரணங்கள் கிடக்கும் போது இந்த எலும்பும் பாம்புந் தரிக்கின்றீரே! உயர்ந்த பீதாம்பரங்களைத் தொடாமல் புலித்தோலும் யானைத்தோலும் உடுக்கின்றீரே! இவ்வேடத்தாலன்றோ அனைவரும் உம்மைப் பித்தனெனப் பிதற்று

இந்திரன் கொலு வீற்றிருந்தான். சப்தரிஷிகள் அவனருகில் அமர்ந்திருந்தனர். தேவர்கள் பலர் குடை பிடித்தனர். அரம்பையர் நடனமாடினர். இக்காட்சி என் கண்களைக் கொள்ளைகொண்டன. என்னை மறந்து நான் அக்காட்சியில் சொக்கிக் கிடந்தேன். திடீரென ஊசியால் யாரோ முதுகில் குத்தினார்கள். ஆச்சரியத்துடன் சுற்று முற்றும் பார்த்தேன். என் பகைவர்கள் பலர் ஆங்கு ஆடிப்பாடிக் களித்திருந்தனர். விழுந்தடித்துக்கொண்டு என் கால்கள் விரைந்து பாய்ந்தன. அடுத்த விநாடி பிரமலோக வாசியானேன். அங்கே நான் கண்ட காட்சி இப்போதும் என்கண்முன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

நான்கு தலைகள்—எட்டுக் கைகள்—நாக்கிலோர் மங்கை—இக் கோலத்தோடு ஒருவர் வீற்றிருந்தார். அவர் யானையும் பூனையும், குரங்கும் குழந்தையும், பாம்புங் கீரியுமாய்ப் பல உருவங்களை மண்ணால் செய்து ஆகாயத்தில் செலுத்தியவண்ண மிருந்தார். கண்மூடித் திறப்பதற்குள் பல ஆயிரம் உருவங்கள் வெகு தூரம் பறப்பதும் மறைவதுமாயின. என் கண்கள் இமை கொட்டவில்லை.

பிரம்மாவின் அழகைப் பாதாதிகேசம் வரை பார்த்து மகிழ்ந்தேன். ஆனால், என் மகிழ்ச்சி நீடித்து நிற்கவில்லை. அவரது மார்பிலும், தோளிலும், சிரசிலும் என் பகைவர் பலர் கம்பீரத்துடன் வீற்றிருக்கக் கண்டதும் என்னை யறியாமல் கால்கள் எகிறிப் பாய்ந்தன. அடுத்த நிமிடம் வைகுண்ட நாதன் காட்சி கிடைத்தது.

இவ்விடத்திலாயினும் என் பகைவர்கள் வராமலிருக்க அருள் சுரக்கவேண்டுமென லோக ரட்சகராய் ஸ்ரீதேவி பூதேவி சமேதராய் வீற்றிருந்த பகவானைப் பிரார்த்தித்தேன். ஸ்ரீலோலனான அவனுக்கு என் பிரார்த்தனை ஏறவில்லை.

'செல்வத்தாயே! பூமாதேவி! எம்மினத்தவர் எங்கும் பெருகி வளர கடாட்சம் செய்யவேண்டும். நாங்கள் மண்ணுலகி லிருந்து எமதர்ம ராஜனுக்கு எவ்வளவோ உதவி புரிந்து வருகின்றோம். பூமாதேவியின் பாரத்தைக் குறைக்கின்றோம். அவர்களை ரட்சிக்கும் பொருப்பு, செல்வத்தாயே! உமக்கும் அதனால் குறைகின்ற தன்றோ? தேவர்கள் பலருக்கு உதவி யளிக்கும் நாங்கள் மண்ணுலகில் பல்கி வளர திருவருள் பாலிக்க வேண்டுகிறோம்' என்ற பிரார்த்தனையோடு வேதாத்தியயன ஓசை செய்துகொண்டிருப்பவர் யாரெனக் கவனித்தேன். ஆ! என்ன சொல்வேன். இங்குமா என் ஜென்ம விரோதிகள் என்று பற்கள் கடித்துக்கொண்டன. கண்கள் இறுக மூடிக் கொண்டன.

* * *

'ஏன் உங்களுக்கு இந்த வேடம்! பணம் இல்லையா? பாக்கியமில்லையா? உற்றார் இல்லையா? ஒன்று மில்லாதவர் போன்று சடை வளர்த்துச் சந்நியாசி யாகின்றீரே! அளவற்ற ஆபரணங்கள் கிடக்கும்போது இந்த எலும்பும் பாம்புந் தரிக்கின்றீரே! உயர்ந்த பீதாம்பரங்களைத் தொடாமல் புலித்தோலும் யானைத்தோலும் உடுக்கின்றீரே! இவ்வேடத்தா லன்றோ அனைவரும் உம்மைப் பித்தனெனப் பிதற்று





அவர்களால் முடியவில்லை என்று நான்சொன்னால் நீங்கள் நம்புவது கஷ்டந்தான்.

அப்படிப்பட்ட பக்கா திருடர்கள் யாரென்று சொல்லிவிடுகிறேன். அப்புறம் உங்களுக்கே அவர்கள் சாமர்த்தியம் விளங்கி விடும்.

* * *

அவர்களுக்குப் பல பெயர்கள் வழங்குகின்றன. தற்கால நாகரிக உலகத்தினர் அவர்களை இன்ஜங்டிங் ஏஜண்ட்ஸ் என்பார்கள். டாக்டர்கள் மலேரியனிஸ்டு என்று சொல்வார்கள். ஆனால் அவர்களது பூர்வீக குடிப்பெயர் கொசு வம்சத்தார் என்பதாம்.

என்ன! என் விரோதிகளின் பெயரைக் கேட்டதும் நீங்கள் முகத்தைச் சுளித்துக் கொள்ளுகிறீர்கள். ஓஹோ! உங்களுக்கும் அவர்கள் பகைவர்களா? சரி, அப்படியானால் எனக்கு நிரம்ப சந்தோஷம்.

* * *

இந்தக் கொசு வம்சத்தாரைப்பற்றி அதிக கஷ்டப்பட்டு அநேக ஆராய்ச்சிகள் செய்திருக்கிறேன். அவ்வளவையும் நீங்கள் கேட்க ஆசைப்பட்டாலும் எல்லாவற்றையும் சொல்லிவிட எனக்கு இஷ்டமில்லை. ஒன்றிரண்டு மட்டும் கூறுகிறேன். சரி சரி, மித்திரன் ஆசிரியர் அதற்கும் இடந்தரமுடியா தென்கிறார். என்னை நீங்கள் மறவா திருந்தால் அடுத்த மாதம் என் ஆராய்ச்சிகளை உங்களுக்குச் சொல்லி விடுகிறேன். வந்தனம்.



திருவாளர். மு. பழநியப்ப முதலியார் அவர்கள், பாண்டமங்கலம்

இவர் சேலம் ஜில்லா வெங்கரை சர்க்கிலின் யூனியன் பஞ்சாயத்து போர்டு தலைவராக 22-8-33-ல் தேர்ந்தெடுக்கப் பட்டார். சமூக முன்னேற்றத்தில் மிக்க ஆர்வம் பொருந்திய இவருக்கு பல வளங்களும் பெருக இறைவனை வேண்டுகிறோம். (ப-ர்.)

# நமது அதிர்வெடி

ஏழைகளுக்கே கர்ப்பத்தடை மிகவும் அவசியமாகும்.

—சர். சிவசாமி அய்யர்.

செல்வந்தர்களுக் கெல்லாம் கர்ப்ப உற்பத்தி அவசியமென பிரசாரம் செய்ய ஏழைகள் புறப்பட் டிருக்கிறார்களாம்.

* * *

நீங்கள் என் விஷயத்தில் காட்டியுள்ள அன்பைக் கவனிக்கும் போது என்ன பதில் கூறுவதென எனக்குத் தோன்றவில்லை.

—செட்டி நாட்டுக் குமாரராஜா.

குமாரராஜா மீது கவுன்சிலர்கள் நம்பிக்கை மோசம் செய்ததாக வழக்குத் தொடுப்பார்களென எதிர் பார்க்கிறோம். அன்புக்குப் பதில் சில வார்த்தைகள் கூறி ஏமாற்றி விடுவதற்கு இது காலமல்ல.

* * *

இன்னும் பல உயர்ந்த பதவிகளை வகிப்பதற்கு கார்பொரேஷன் தலைமைப் பதவி ஓர் பூர்வாங்க பீடிகையாகும்.

—ஏ. ராமசாமி முதலியார்.

கார்ப்பொரேஷன் தலைமைப் பதவியைப் பெற்றதற்குப் பூர்வாங்க பீடிகையாக இருந்தது எது என அப்போது கவுன்சிலர்களெல்லாம் யோசனையில் மூழ்கிப்போனார்களாம்.

* * *

நீங்கள் சந்தோஷமாகச் சாப்பிடுகிறீர்களா?

—விளம்பரத் தலைப்பு.

அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு என்ன செய்வதென்ற கவலையோடுதான் பெரும்பாலோர் சாப்பிடுகிறார்கள். ஏதேனும்...யோசனையுண்டா?

* * *

குழந்தை பிறந்த பின்பல்லவா நாமகரணஞ் செய்யவேண்டும்.

—கேத்தே ரங்கைய நாயுடு.

நாமகரணமட்டு மல்ல; கல்யாண நிச்சயதார்த்தமும் குழந்தை பிறவாத முன்பே அநேக இடங்களால் முடிவு செய்யப்படுகின்றதென்பதை நாயுடுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * *

ஜனங்களை சமாளிப்பது மிருகக் காட்சிச் சாலையை சமாளிப்பது போலல்ல.

—ஏ. ராமசாமி முதலியார்.

இதன் உண்மையை பிரத்தியட்சப் பிரமாணமாய்த் தெரிந்து கொள்ள கொஞ்சம் பெரிய ஆசாமிகள் அடங்கிய மனிதக் காட்சிச் சாலை ஒன்று ஏற்படுத்த சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்படுமென எதிர் பார்க்கிறோம்.



........36 மணிக்கு மணிகாட்டும் சிறந்த 'பீ'டைம் பீஸ்

ஓர் விளம்பரம்

அதற்குமேல் கம்பி காட்டுமோ?

* * *

வேலையற்றிருப்பவர்கள் இதைக்கொண்டு தினந்தோறும் ரூ. 335 சம்பாதிக்கலாம்.

—ஓர் விளம்பரம்

வேறு அத்தாக்ஷி தேடாதீர்கள். அவர்களே அதற்கு அத்தாக்ஷி.

* * *

ஆதி இந்துக்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்ட உடன் கோவிலில் உள்ள தெய்வீக சக்தி மறைந்து போகும்

சாஸ்திரியார்.

அந்த சக்தி ஒரு வேளை நெடுநாளாய் சந்நிதானத்தில் வராதிருந்த ஆதி இந்துக்களது உள்ளத்தில் ஓடி ஒளிந்து கொள்ளுமென சாஸ்திரியார் அஞ்சுகிறார் போலும்.

* * *

உனது மனமானது இளகாத கருங்கற் பாறையாயிருந்தாலும் எனது கண்ணீர் அதைக் கரைத்து விடாதா?

—ஒரு காதற் கடிதம்.

அம்மா, ஜாக்கிரதையாயிருங்கள். முழுதும் கரைந்து விடப் போகிறது.

---

## சிறுகதைப் பரிசுகள்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறுகதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற் கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும் இரசனை நிரம்பியதாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடை, இன்பச் சுவை இவைகளைக் கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப் பெறும்.

# ஆன்றோர் அமுத மொழிகள்

இந்தியா சிறப்புடன் வாழ்ந்து இதர நாடுகளுடன் சம நிலைக்கு வரவேண்டுமாயின் சரண்புகுகின்ற மனப்பான்மை இந்தியரிடமிருந்து விரட்டி யடிக்கப்படுதல் அவசியமாகும். என்ன வரினும் வரட்டும் என்ற மனோ தைரியத்துடன் நின்று கடைசி வரையில் ஒரு கை பார்த்துவிடத் தக்க ஆண்மை எல்லா உள்ளங்களிலும் தோன்ற வேண்டும்.

**டாக்டர் சுதீந்திரபோஸ்.**

பொறுமையே நமது வெற்றியைப் போக்கும் விரோதி.

**சி. வி. ராமன்.**

சோம்பல் மிக மெதுவாகப் பிரயாணஞ் செய்வதால் வறுமை அதைப் பிடித்துவிடுகிறது.

**ராமதீர்த்தர்.**

எந்த மனிதனிடம் சங்கீதத்தில் விருப்பம் காணப்பட வில்லையோ அவன் ஒன்று துறவியா யிருக்கவேண்டும், அல்லது விலங்கினும் தாழ்ந்தவனா யிருத்தல்வேண்டும்.

**கவி தாகூர்.**

எங்கே அழுக்கும் ஆபாசமும் துன்பமும் நிறைந்திருக்கின்றனவோ அங்கே ஸங்கீத அபிமானம் இருக்கமுடியாது. இதற்கு நேர் விரோதமான நிலையிலேதான் சங்கீதம் செழித்தோங்கும்.

**மகாத்மா காந்தி.**

உன் மனைவியுடன் வாதிடுவதற்கு உனக்குத் தைரிய மிருந்தால் பகட்டான ஆபரணங்களையும், சேலைகளையும் நீக்கி விடும்படி சொல். அவளுடைய பகட்டான ஆபரணங்களும் ஆடைகளும் உலகத்தைக் கவர்வதற்கென்றே தரிக்கப்படுதலின் கற்புடைய மங்கையர்க்கு அவை ஏற்றதன்று. பகட்டான ஆடையாபரணமுடைய பெண் பலகாரக் கடையில் அழகாக அடுக்கி வைக்கப்பட்ட பட்சணங்களை நிகர்த்தவள் ஆவாள். வழியில் போவோர் வருவோரது மனத்தைக் கவர்வதற்காகவே அவை அலங்காரமாய் அடுக்கி வைக்கப்படுகின்றன. பெண்கள் பட்சண நிலையில் இருக்க முயல்வது மானக்கேடாகும். தூய இதயம், பரிசுத்த ஆத்மா இவற்றின் பேரழகிற்கு முன்னே புற அழகு எம்மாத்திரம்.

**மகன்லால் காந்தி.**

ஸ்திரீகளின் அறியாமையே இந்தியாவின் வீழ்ச்சிக்குக் காரணம்.

**ராணி லலித குமாரி.**

# ஆடுகளம்

[நா. இராமசாமி, வாரியங்காவல்.]

'இவ்வுலகமே ஓர் ஆடுகளம்; மக்கள் யாவரும் ஆடுநர்' எனக் கூறி மகிழ்ந்தனர் கவிஞர். கவிஞரின் உள்ளங்கள் ஒரே தன்மையன. ஆகவே, மேலை நாட்டுப் புலவர் ஒருவரும், நம் தமிழ் நாட்டுக் கவிஞர் ஒருவரும் இக்கருத்தில் ஒன்றுபட்டது ஓர் வியப்பன்று. கருத்தில் ஒன்றுபடினும் அதனை எடுத்தாண்ட முறையில் இருவரும் வேறு வேறு வழிபற்றிச் சென்றனர். மேல் நாட்டுப் புலவர் இதனை ஓர் இழிமகனின் கூற்றாகக் கொண்டார். தமிழ்ப் பெரும்புலவர் இதற்கு மாறாக உயர்தனி மகளின் கூற்றாகக் கூறி மகிழ்கின்றார்.

ஒருவன் தன் இளமை முழுவதையும் பல தாழ்ந்த, புல்லிய இன்பங்களை நுகருவதில் கழித்தான். இளமை நீங்க, அவன் வாழ்க்கையில் வெறுப்புற்றான். இவ்வுலக மக்களையே அவன் வெறுத்தான். மக்கள் வாழ்க்கையை எழு பருவங்களாக வகுத்து, ஒவ்வொரு பருவத்திலும் மக்களையும், அவர்கள் செய்யும் வினைகளையும் பல எள்ளுதற்கரிய உவமைகளால் எடுத்துக் காட்டி, இறுதியில் 'உலகமே ஓர் ஆடுகளம்; மக்கள் யாவரும் ஆடுநர்' எனக் கூறுவதாக முடித்தார் மேலை நாட்டுக் கவிஞர்பெருமான்.

இவ்வாறு, வாழ்க்கையில் வெறுப்புற்ற ஓர் இழிஞனின் கூற்றாக மேலை நாட்டுக் கவிஞர் கொண்டிருக்க, நம் தமிழ்நாட்டு நல்லிசைப் புலவர் இதற்கு முற்றும் மாறாகக் கூறுகின்றார்.

'பின்பனிப் பருவம்; காலை நேரம்; இள ஞாயிறு கீழ்த் திசையில் தன் செங்கதிர்த் தோற்றத்தை மெல்ல வீசுகின்றான். புள்ளினங்கள் தம் இன்னிசையால் அதை வரவேற்கின்றன. நிலத்தைப் பொற்றகடு போன்று போர்த்திருந்த நெருஞ்சிப் பூக்களும் ஞாயிற்றை எதிர்கொள்கின்றன. புல் நுனியில் தங்கிய பனித் துளிகள் வைர மணிகள் போன்று ஒளியைக் கால்கின்றன. சோலையின் இடையே புகுந்த மெல்லிய குளிர்ந்த காற்று குழலென ஒலிக்கிறது. பழனங்களின் இடையில் வைக்கோல் போர்கள் பொன்மலைகளெனத் திகழ்கின்றன.

ஞாயிற்றின் கதிர்கள் வரவர தாங்க லாற்றாதனவாயின. மெல்ல நகர்ந்து பகலவன் உச்சியை நண்ணினான். வயல் வேலைகள் முடிந்து ஆடவரும், மகளிரும் விளையாட்டயரலாயினர். அவர்கள் எழுப்பிய ஒலி மருதநில மெங்கணும் பரந்தது.

ஊருக்குச் சற்றுத் தொலைவில் ஒரு சிறு தோப்பு. அங்கு ஆடவர் குழுமி இருந்தனர். தம் இளமைக்கேற்ப வலிமை பெற்ற மள்ளர் பலரும் அங்கு கூடி தம் விளையாட்டாகிய விழாவெடுத்தனர். முதியோரும், சிறுரும் சூழ்ந்து நின்று அதனைக் கண்டு களித்தனர்.

அந்தத் தோப்பின் அருகில் ஒரு சிறு சோலை. அங்கு வளையல்கள் ஆர்த்தன; சதங்கைகள் ஒலித்தன; சிலம்புகள் புலம்பின. இனிய குரலோசைகள் எழுந்தன. இவை அச் சோலையை 'மகளிர் துணங்கை யாடும் இடம்' எனக் காட்டாநின்றன. பெருமுது பெண்டிரும், சிறுமியரும் அருகே அமர்ந்து கண்டு களித்தனர்.

இங்ஙனம், எங்கும் மகிழ்ச்சி பொங்க, பெண்ணொருத்தி மட்டும் துயரமெய்தி தனித்திருந்தனள். தன்னுள்ளத்தைக் களவிற் கவர்ந்த தன் காதலன் வரைந்துகோட முன் வராமையும், நொதுமலர் பலர் மணம் பேச வந்தமையும் அவள் உள்ளத்தை வருத்தியது.

இனி வாளா இருப்பின் தன் காதலனை அன்றி மற்றொருவனை மணக்கவும், அதனால் தன் கற்புக்கு ஊறு நேரவுங்கூடுமென அஞ்சினள். எனவே, தன் ஆருயிர் பாங்கியிடமும் கூறாது தன் தலைவனைத் தேடிப் புறப்பட்டனள்.

எங்கு சென்று தேடுவது? மள்ளர் குழீஇய விழவினுள் தலைவன் ஒருக்கால் இருக்கலாமென எண்ணி தலைவி அங்குச் சென்றாள். தன் 'உள்ளம் கவர் கள்வன்' அங்கு இல்லை.

"ஒரு வேளை அவன் மகளிர் ஆடும் துணங்கை காணச் சென்றனனோ? அது இயலாது. தலைவனோ பிற மகளிரைக் கண்ணெடுத்தும் காணான். எனினும் சென்று காண்பல்', எனக் கூறி, தலைவி சோலையை அணுகினள். அங்கும் தலைவன் இல்லை.

என் செய்வாள். மனமுடைந்து வீடு திரும்பினாள். தலைவியைக் காணாது இடும்பை எய்திய தோழி 'எங்கு சென்றனையோ?' என வினவினள். தலைவியின் துயரமோ பெரிது. தலைவனைக் காணாமையால் அவளுக்கு உலகமே பொய்யாகத் தோற்றியது. ஆகவே அவள் கூறுவாள்:—

மள்ளர் குழீஇய விழவி னானும்,
மகளிர் தழீஇய துணங்கை யானும்,
யாண்டும் காணேன் மாண்தக் கோனை
யானும் ஓர்ஆடுகள மகளே. என்கைக்
கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலும் ஓர்ஆடுகள மகனே.'

(ஆதிமந்தியார், குறுந். கஉ)

'தான் ஓர் ஆடுகள மகளெனவும், தன் தலைவன் ஒரு ஆடுகள மகனெனவும் கூறிய தலைவியின் கூற்று மேலை நாட்டுப் புலவர் கூற்றுக்கு எத்துணை மாறுபட்டது.

வேறு வேறு நாடுகளில் வேறு வேறு காலங்களில் திகழ்ந்த கவிஞர் இருவர் ஒரு உயரிய உவமையை இருவகைக் கருத்தில் எடுத்து ஆண்ட தன்மையை வியவார் யாரே?

---

# விகடத் துணுக்குகள்

எஜமான்: கரியா! நீ எப்படி ஏழையானாய்?
கரியன்: தங்கள் போன்ற பிரபுக்களின் தயவினால்தான்.

ச. நா. குமரகுரு

* * *

சங்கீத ஆசிரியர்: நீ இதற்கு முன் ச-ரி-க-ம என்று கேட்டிருக்கிறாயா?
கற்கும் மாணவன்: சரிகமா கேட்டதில்லை. வாஸ்கோடிகாமா கேட்டிருக்கிறேன்.

அ. துப்புசாமி

* * *

உபாத்தியாயர்: பையா! பழநிக்கு எத்தனை காவடிகள் போகின்றன?
மாணவன்: நம்மைப்போல் எத்தனையோ அன்னக் காவடிகள் போகின்றன, ஸார்.

A. K. துப்புசாமி முதலியார்

* * *

இடையன்: என் எருமையும், ஆடும் நீ பார்த்தாயா?
வழிப்போக்கன்: உன் எருமைக்கு ஆடத் தெரியுமா? அப்படியானால் ஓரியண்டல் ஸர்கஸ்காரர் நல்ல விலைக்கு வாங்கிக்கொள்வார்கள்; அங்கே ஓட்டிக்கொண்டுபோ.

க. சுப்பிரமணிய முதலியார்

* * *

செட்டியார்: என் சாமி! தொந்தி எதனால் ஏற்படுகிறது?
வைத்தியர்: வட்டிக்கு வட்டி, வட்டிக்கு வட்டி வாங்கும் சந்தோஷத்தினால்தான்.

S. தங்கசாமி

* * *

உபாத்தியாயர்: ராமா! டில்லி எங்கே இருக்கிறது?
ராமன்: உம்......உம்......
உபாத்தி: என்னடா இது; சீக்கிரம் சொல்லித் தொலையேண்டா.
ராமன்: இல்லை, ஸார்! அது நெஞ்சிலே இருக்குது ஸார்.

M. நாகேஸ்வரன்

தாயார்: சண்முகம்! எங்கே போனாய்?
சண்முகம்: சுந்தரத்துடன் போனேன்.
தாயார்: சுந்தரம்! எங்கே போனாய்?
சுந்தரம்: அண்ணா, சண்முகத்துடன் போனேன்.
தாயார்: (கோபத்துடன்) நீங்கள் இருவரும் எங்கே போனீர்கள்.
இருவரும்: நாங்கள் இருவரும் ஒன்றாகவே போனோம்.

* T. வேலுப்பிள்ளை

* ஒரு ரூபாய் பரிசு பெற்ற விகடம் எழுதியவர், விலாசம்:— 274, கடல் தெரு, கொழும்பு.




[என்றைக்காவது ஊரைச்சுற்ற ஆரம்பித்தால் விதவிதமான ஆசாமிகள் கண்ணில் படுகிறார்கள். சிலர் பெரிய பாரத்தைத் தூக்கிக் கொண்டு நகருபவர்களைப்போல் காணப்படுகிறார்கள். ஆனால் முதுகிலும் மூட்டையைக் காணோம், தலையிலும் சுமையைக் காணோம். உற்று நோக்கினால்தான் மனத்திலே பெரிய பாரம் இறுத்திக் கொண்டிருப்பது தெரிகிறது. நமது மனக்கண்ணைச் சற்றுத் திறந்தால் மூட்டை இன்னதென்றும் தெரிகிறது. எல்லாம் பெரிய பெரிய கடிதங்கள்; நீள நீளமானவை. பெரிய ஆசாமிகளுக்கு எழுதப்பட்டவை. எல்லாம் 'ஸ்டாம்பு' இன்றி அங்கேயே குவிந்து கிடக்கின்றன. அவற்றிற்கேற்ற ஸ்டாம்பும் தபாலாபீஸில் கிடையாது.

இத்தகைய பேர்வழிகளில் ஏதோ சிலருடைய கடிதங்கள் மட்டும் எப்படியோ உரியவருக்கு எட்டிவிடுகின்றன. மற்றவை சுருண்டும் மடிந்தும் இருதயத்தை நசுக்கிக்கொண் டிருக்கின்றன. இப்படித் தாங்கி யிருப்பவர்களைக் கண்டால் நமக்கும் மனம் சளைக்கிறது. அவர்கள் பாரத்தைக் குறைப்பது நமக்கும் கடமையாகி விடுகிறது. சரி, ஒவ்வொன்றாக எடுத்துப் பிரிக்கிறேன்; பாருங்கள்.] (ப-ர்.)

[ஜே. த.]

எங்க ஜாமி ஆண்டவென் மவாத்துமாவுக்கு
கொட்டிச்சேரி மதுரெமுத்து கும்புடு போட்டு எழுதியது

எஞ் சாமி,

எங்க மூதாதெ நந்தனாருக்குச் செதம்பரத்து நடராஜாவெத் தெரிசிக்க எவ்வள அபா இருந்துதோ அதுக்கு மேலெ தங்களெ தெரிசிக்கணும்னு எனக்கு அபா கெடந்தது. தங்களுக்கு வயிசு அறுவத்து நாலு ஆச்சாமே? எனக்கு அதுக்கு மேலெகூட நாலு வயிசாச்சி. இருந்தாலு ஒரு தடவெகூட தங்கள் திருவடியெ தெரிசிக்கலெ. எப்படியாவது சாவரத்துக்குள்ளெ கண்டுட்டு தங்க வாயாலெ ஒரு பேச்சி கேட்டுடணும்னு அடிச்சிங் கெடந்தது. என் அதிர்ஷ்டம், நடராஜாவுக்கு தயவு பொறந்தாப்போலெ தங்களுக்குப் பொறந்தது.



இரவதாங் தேதி இந்தப் பட்டணத்துக்கு வார்றீங்கண்ணு கேட்டு உச்சி குளுந்துது. அண்ணிக்கி இருட்டோடெயே எழுந்து டேசனுக்கு நடந்தே. டேசன் கிட்டெ வந்தா, எள்ளு விழக்கூட எடமில்லெ. வைஸராயாமே. அவர் வந்தப்போகூட இதிலே நூறுலெ ஒரு பங்கு ஜனங்கூட இல்லெலண்ணு எல்லாரும் பேசிக்கிறாங்க. ஆனா அந்தப் பேச்செல்லாஞ் சரியா எங் காதுலெ உழலெ. ஜெ-ஜெ-ண்ணுக்கிற இந்த ஜெனத்துலெ ஜாமியெ எப்படி பாக்கப் போறேண்ணு கவலையாப் போச்சி. ஆனா நல்ல வேளையா ஒரு மாராஜெ என்னெப் பாத்துட்டு 'ஐயோ பாவ! பழுத்த பழ! எவ்ள ஆசையோ தெரியலெ. இப்படி வாய்யா' இண்ணு கூப்புட்டு கொஞ்ச எடங் குடுத்தா.

இப்புடியு அப்படியு பாத்துக்கிணே இருந்தே. இருந்தாப்போலெ இருந்து எல்லாருமா "மகாத்துமா காந்திக்கு ஜே" இன்னு ஒரு கூச்சல் போட்டாங்க. நானு 'ஜே'ண்ணு கூவிக்கிணு அவுங்க பாத்த பக்கம் பாத்தே. ஆராரோ பெரிசி பெரிசா இருந்தாங்க. அவுங்களெல்லாஞ் சாமிண்ணு நெனச்சிக்கிணே. அப்பறம் பாத்தா மேலெ ஒரு துண்டுங் கீழெ ஒரு துண்டுமா ஒரு ஆளெக் காட்டி "இவர்தாங் காந்தி" இண்ணாங்க. பார்த்தவுடனே எனக்குத் தூக்கி வாரிப் போட்டுடுத்து. "ஐயோ மவாத்துமா என்னெ இப்படி உடுத்திக்கிணுகிறாரே" இண்ணு கேட்டே. "ஆமா, அவர் ஒரு பரம ஏழை. ஏழெக்கு ஏழையாவர், ஏழைங்களுக்குப் பிச்செ எடுத்துக் குடுக்கத்தா வந்துகிறாரு" இண்ணாங்க. சரிதாண்ணு தலெயெத் தூக்கிப் பாத்தா, அந்த மூஞ்சி எங் கண்ணெல்லா இழுத்துக்கிச்சி. அப்பாடா, ஜாமி, இப்போகூட புத்தி போட்டுக்கிறே. அத்தெ மறக்கவே முடியிலெ. அத்தெ பாத்த ஒடனே அந்த நந்தனாரட்டமே ஆனந்த தாண்டவ ஆடிட்டே.

அப்பற நெக்கிக்கி மொள்ளமா நடந்து ஊட்டுக்கு வந்து சேந்தே. வழியெல்லா அந்த மூஞ்சி கண்ணுமுன்னெயே இருந்துது.

ஊட்டுக்கு வந்தா எல்லா ஒரே கூச்சலா கெடந்துது. எங்கெப் பாத்தாலு காந்திண்ணு மவாத்துமாண்ணு பேசிக்கிறாங்க. அப்பறந் தாந் தெரிஞ்சிது, எங்க ஜாதியாருக்கு உதவி செய்யத்தா வந்திங் கண்ணு, அடுத்த நாளு எங்க சேரிக்கு வார்றதாச் சொன்னாங்க. அத்தக் கேக்கவே இன்னுஞ் சந்தோஷமாச்சி. ஜாமியெ இன்னொருதரம் பார்க்கலாண்ணு குதிச்சே, தங்களுக்குக் குடுக்கறத்துக்குப் பணந் தண்டினாங்க. எல்லாருங் கைலே கெடச்சத்தெப் போட்டாங்க, எங் கைலெ ஒண்ணுமில்லேயெண்ணு வருத்தமாப்போச்சி. எப்புடியாவது அதிலெ நம்ப பணமுஞ் சேரணுமுண்ணு இருந்துது. தெனம் எம் மவெ அப்ப வாங்கிக்க காலணா குடுப்பா. சரிதாண்ணு அம்பாடி அத்தெ மின்னெயே வாங்கி வச்சிக்கிணே. ஒடனே ரொம்ப சந்தோஷமாச்சி. ஆனா மாலெலீலெ எல்லாம் போடுவாங்க, அதிலெ [illegible] தங்களுக்கு இஷ்டமில்லெ இண்ணாங்க. அதனாலே எங்கே [illegible] சேர்ந்து ஊணுப் பூடுமோண்ணு குடுக்காதெ வெச்[illegible]. அது நேரா தங்க கைலேயே சேரணும்னு இருந்தது. [illegible] வந்து [illegible] காத்திருந்து அப்பற தங்க

கிட்டெ சேந்துப் போன சமயத்திலெ உண்டியிலே போட்டெ. அது தங்க கைலெ வந்திருக்கூண்ணு நெனக்கிறே.

அப்பற மக்கா நாளே நீங்க இந்தப் பட்டணத்தை உட்டுப் பூட்டிங்க இண்ணுங்க. "வைஸ்ராய் வர்ராருண்ணு இன்னவுடனே பட்டண அழற மாதிரி மழெ புட்சிக்கிணு ஊத்திச்சி; நீங்க வர்றிங்கண்ணு கேட்ட வுடனே அந்த அழெ ஒஞ்சிப்போச்சி. அப்பற நீங்க ஊருக்கு வெளியே அடி எடுத்து வைககிறிங்கண்ணு தெரிஞ்ச ஒடனே திரும்பியு மழெ புட்சுக்கிச்சி" இண்ணு எல்லாரும் பேசிக்கிறுங்க. மெய்தாண்ணு நெனச்சிக்கிணே. நீங்க போறிங்கண்ணு கேட்டஒடனே எனக்கு எவ்வள அழெ வந்தாட்ச்சி தெரியுமா? ஆனு எங் காலனு ஒங்க கிட்டவே இருக்குதுண்ணு ஒரு தைரிய இருக்குது. அது ஒங்க கிட்டவே இருக்கணு, ஒங்க மனசுப்படி நல்ல காரியத்துக்குச் செலவாவணு இண்ணு வேண்டிக்கிணே இருக்கிறே.

அடிமெ,
மதுரோமுத்து

---



பருத்த மனிதன்: என்டா! எங்கள் இருவருக்கும் திருவல்லிக்கேணி போக என்ன கேட்கிறாய்?

ரிக்ஷாவாலா: அது இருக்கட்டும் சாமி! வண்டி தங்களுக்கே சரியாய்ப் போகுமே! இந்த அம்மாளைத் தங்கள் மடியிலே உட்கார வைத்துக் கொள்றீங்களா?

பி. சே. மா.

---

## ஒரு ரூபாய் பரிசு

ஒவ்வொரு மாதத்திலும் வெளியிடப்பெறும் அன்பர்களது விகடத்துணுக்குகளில் சிறந்த ஒன்றுக்கு ஒரு ரூபாய் பரிசு அளிக்கப்படும். ஏற்றுக்கொள்ளப் பெற்ற இதர விகடங்கள் அவரவர் பெயருடன் வெளியிடப்படும். எந்த தமிழ்ப் பத்திரிகையிலேனும் இதற்கு முன்பு வெளியாயுள்ள துணுக்குகளை எழுதியனுப்பா திருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். கவரின் மேல்பக்கத்தில் 'விகடத்துணுக்கு' என்று கவனமாய்க் குறிப்பிடுங்கள்.

---

# தமிழர் மாண்பு

[A. S. முத்தைய முதலியார், B. A., திருவனந்தபுரம்]

(Rights Reserved)

"தமிழர் மாண்பு" என்பது பண்டைக் காலத்துத் தமிழர் பெருமையைப் பற்றியதே யாகும். தமிழர் என்பார் "தமிழகம்" என்னும் ஓர் நாட்டில் தோன்றியவரே யாவர். இந்நாடு வடக்கில் விந்திய மலையும், தெற்கில் 'கெர்க்கியுலன்' தீவும், கிழக்கில் சுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளும், மேற்கில் மதகாஸ்கர் (ஆபிரிக்கா பக்கத்திலுள்ளது) தீவும் ஆகிய இந்நான்கு எல்லைகளுக்குட்பட்டதாகும். அநேக ஆயிரமாண்டுகளுக்கு முன் தமிழகம் ஒரு பெரிய நிலப்பரப்பாக இருந்தது. அக்காலத்தில் தற்பொழுதுள்ள கண்டங்கள் காணப்பட்டில. இந்நிலப்பரப்பைத்தான் அறிவாளர்கள் "இலெமூரியா" என்றும், "குமரி நாடு" என்றும் கூறியுள்ளார்கள். பின் பிரளயம் உண்டாகவே, இத்தமிழகம் சின்னபின்னமாயிற்று. வடக்கே இமயமலை தோன்றியது; தெற்கே யுள்ள நாடுகளைக் கடல் கொண்டது; கிழக்கும் மேற்குமுள்ள நாடுகள் பிரிக்கப்பட்டன. சங்க காலத்தில் இந்நாடு "குமரி, வேங்கடம், குணகுடகடலா, மண்டிணி மருங்கில் தண்டமிழ் வரைப்பு" என்ற இந்நான்கு எல்லைகளுக் குட்பட்டது. "வடவேங்கடம் தென்குமரியாயிடை, தமிழ் கூறு நல்லுலகத்து" என்ற கூற்று இதனை வற்புறுத்தும். வடக்கில் வேங்கடமலையும், தெற்கில் குமரிக்கடலும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் இந்நிலத்திற்கு எல்லைகள் ஆயின. இப்பொழுது காணப்படுகிற சென்னை இராசதானியின் தென்பாகமே தமிழ் நாடாகும். இந்நான்கு எல்லைகளுக்குள்ளும், வெளியிலும் தமிழ் என்னும் ஏற்றம் வாய்ந்த மொழியைத் தாய் மொழியாகவுடைய எம்மரபினரும் எம்மதத்தினரும், எக்கொள்கையினரும் தமிழரேயாவர். இந்நாட்டு மக்கள் பண்டைக் காலத்தில் எத்துணை மேம்பாடுற் றிருந்தார்கள் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பழங்கதைகள் எதற்கு? அவைகளைப் படிப்பதனால் என்ன பயன்? தமிழரின் தற்காலத்திய நிலைமை என்ன? இன்னோர் முன் நன்னிலைமையில் இருந்ததனால் நமக்கு யாது பயன்? அதைப்பற்றி அறிவானேன்? இன்னோரன்ன கேள்விகள் எழலாம். தற்காலத்திய தன்மையை ஒருவன் அறிய வேண்டு

மாயின், முற்காலத்திய தன்மையை அவன் நன்கு தெரிந்திருக்க வேண்டுவ தவசியம். அப்பொழுதுதான் தன் தாழ்ந்த நிலைமையை யுன்னி அந்நிலைமையினின்றும் நீங்க நினைப்பான். ஆகவே பண்டைக் காலத்துத் தமிழரின் பெருமையை ஒரு சிறிது கூறுவது மிகையாகாது.

"தமிழர் மாண்பு" என்னும் இக்கட்டுரை நான்கு பிரிவுக் குட்பட்டதாகும். தமிழ் அரசர், தமிழ்ப் புலவர், தமிழ் மக்கள், தமிழ்ப் பெண்மணிகள் ஆகிய இவர்களின் சிறப்பை எடுத்துக் கூறுவதே இதன் முக்கிய நோக்கம்.

தமிழ் அரசர்கள்: முற்காலத்தில் தமிழகத்தைச் சேர சோழ பாண்டிய அரசர்கள் தமக்குள் பிரித்து ஆண்டு வந்தார்கள். ஆகவே சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்ற முப்பகுதியை யுடைத்தாயிருந்தது நம் தமிழ்நாடு. இவர்களுக் கடங்கி பல சிற்றரசர்களும் செங்கோல் செலுத்தினார்கள். இவ் வேந்தர்களும் குரிசில்களும் செங்கோன்மை, வீரம், கொடை முதலிய குணங்களில் இணையற்று இலங்கினார்கள். இவைகளைத் தவிர வேறு பல நல்லியல்புகளும் உடைத்தாயிருந்தார்கள்.

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு."

* * *

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு."

* * *

"முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்."

* * *

"கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி."

இம்மறை மொழிகட்கு இலக்காய் பழந்தமிழ் அரசர்கள் அமைந்துள்ளார்கள்.

"முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்."

இவ்வுண்மையைக் கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியனிடத்தில் கூறுகின்றாள். கண்ணகி என்னும் கற்புடையாள் கோவலன் மனைவி. ஊழ்வினையினால் பொருளிழந்து தங்கள் ஊராகிய காவிரிப்பூம் பட்டினத்தினின்று பாண்டிமா நகர்க்குப் புறப்



பட்டார்கள். மதுரையை யடைந்ததும், கோவலன் கண்ணகியை வைகையாற்றின் வடமருங்கிலுள்ள ஒரு ஆயர் சேரியில் வைத்து விட்டு, தான் தன் மனைவியின் காற்சிலம்பைப் பெற்று விற்பதற்கு மதுரை நகர் வீதி வழியே சென்றான். கடைத்தெருவில் ஒரு பொன் கொல்லன் அவனைக் கண்டு, தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, அவனை அங்கிருத்திவிட்டு, தான் அதை அரசனிடத்திற் காட்டி வருவதாகச் சொல்லிச் சென்றான். இது சமயம் அரண்மனையில் கோப்பெருந்தேவியின் காற்சிலம் பொன்று களவு போயிற்று. இப்பொற் கொல்லன் சிலம்பைக் கொண்டுபோய் அரசனிடம் கொடுத்து, சிலம்பைத் திருடிய கள்வன் தன் இல்லத்தில் இருப்பதாகத் தெரிவிக்க, வேந்தன் வேறொன்றையும் பாராது, வினைவிளை காலமாதலின், தன் காவலாளரைக் கூவி, கள்வனைக் கொன்று வரும்படிக் கட்டளையிட்டான். அங்ஙனமே அவர்கள் கோவலனைக் கொன்றுவிட்டார்கள். இச்செய்தி கண்ணகிக்கு எட்டியது. ஆற்றொணாத்துயரத்தில் ஆழ்ந்து, வீராவேசத்துடன் அரசனை அடைந்தாள். அரசன் அவள் ஊரை வினவ, அதற்குப் பதிலாக அம்மங்கை,

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார் என் பதியே"

என்றாள். (முன்னொரு காலத்தில் மனுச்சோழன் என்பவன் தன்மகன் தேர் ஊர்ந்து செல்ல அதன் சக்கரத்தில் அகப்பட்டு இறந்த கன்றைக் கண்ட அதன் தாய்ப் பசு அரண்மனையில் தொங்கவிடப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பால் அசைக்க, அவ்வோசையைச் செவியுற்றுச் செய்தி அறிந்து தன் மகனையும் அவ்வாறே தேர் ஊர்ந்து சென்று கொன்றான். அத்தகைய வேந்தன் வீற்றிருந்த புகார்ப் பதியிலுள்ளவள்.) பின் கண்ணகி தன் கணவன் கள்வனல்லன் என்பதை தக்க நியாயத்துடன் தெரிவித்தாள். இதையறிந்த அப் பாண்டிய அரசன், பெரிதும் வருந்தி,

"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்.
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுக என்னாயுள்"

[illegible] கூறினன் (பொற்கொல்லன் பொய்ம் வார்த்தையைக் கேட்ட யானோ அரசன்? கள்வன் யானே. குடிகளை செங்

கோல் தவறாது காத்து வந்த பாண்டி நாட்டின் ஆட்சி என்னால் சீர்குலைந்தது. அதனால் இனி என் ஆயுள் நீங்குக.) உடனே அரியணையில் அவன் ஆவி அகன்றது.

இச் செய்தியை கூலவாணிகன் சாத்தனார் வாயிலாகக் கூறக் கேட்ட செங்குட்டுவன் என்ற சேர வேந்தன்,

"எம்மோ ரன்ன வேந்தற் குற்ற
செம்மையின் இகந்தசொல் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது"

என்றான். (எம் போன்ற வேந்தர்க்குப் பாண்டிய அரசன் நீதி தவறினான் என்ற செய்தி எட்டுவதற்கு முன் அவன் உயிர் சென்ற தன்மை அவனுடைய கொடுங்கோலை செங்கோலாக்கியது.) இச் செய்திகளினின்றும் அக்காலத் தரசர்கள் எத்துணை நீதியாக அரசாட்சி புரிந்தார்கள் என்பது நன்கு விளங்கும். (தொடரும்)

## சகோதரனும் சகோதரியும் திருமண தம்பதிகள்

மிலானில் ஒருவரை யொருவர் அந்யோந்யமாய் நேசித்த இரு காதலர்கள் கல்யாணம் செய்துகொள்ளப் போகுந்தறுவாயில் தாங்கள் சகோதரனும் சகோதரியும் எனத் தெரிந்து திடுக்கிட்டுப் போனார்கள்.

ஜெர்மானியர்களாகிய அவர்களது பெற்றோர் 20 ஆண்டுகளுக்கு முன்பு விவாக விடுதலை செய்து கொண்டபோது சிறுவனைத் தந்தையும், சிறுமியைத் தாயும் எடுத்துக்கொண்டனர். தந்தையும் மகனும் ஜெர்மனிக்குச் சென்று வாழ்ந்து வந்தனர். தாயும் மகளும் மிலானிலேயே வசிக்கலாயினர்.

தந்தையார் இறந்ததும் ஹெல்ம் என்ற ஜெர்மானியர் சிறுவனைத் தத்து புத்திரனாக வளர்த்துவந்தார். ஆனால் தந்தை இறந்துவிட்ட விஷயம் மகனுக்கு அறிவிக்கப்படாமையால் இவரையே சிறுவன் தந்தையாகக் கருதியிருந்தான். ஒரு வருடத்திற்கு முன் சிறுவன் மெலானுக்குச் சென்றபோது தாயார் இறந்தபின் சிற்றப்பனோடு வசித்து வந்த மிஸ் ஆல்பாராக் என்ற சிறுமியைக் காதலித்தான். திருமண தினம் குறிக்கப்பெற்றது. தனது தத்துப் புத்திரனுடைய கல்யாணத்தைப் பார்க்க ஹெல்ம் மிலானுக்குச் சென்றார். அங்கு சென்றதும் திருமணப்பெண் ஆல்பாராக் என்னும் பெயருடையவளெனக் கேட்டு ஆச்சரியமுற்றார். பின் அவளது விருத்தாந்தத்தை விசாரித்தபோது தத்துப் புத்திரனின் சொந்த சகோதரியே எனக்கேட்டு கல்யாணத்தை ரத்து செய்து விட்டாராம்.

## நமது த்பால் பெட்டி

ஒன்றா, இரண்டா? ஒவ்வொரு நாளும் நமது தபால் பெட்டியைத் திறந்தால் கணக்கற்ற கடிதங்கள் குவிந்து கிடக்கின்றன. அவைகளைப் பிரித்துப் பார்த்தவுடன் நமது மூளைக்கு நல்ல விருந்து அகப்படுகின்றது. ஆனால் அந்த விருந்தை நானும் கடிதம் எழுதுபவருமாக இருவர் மட்டும் விலாப்புடைக்க உண்டு மகிழ்வது எனக்குப் பிடிக்கவில்லை. காகமும் உறவு கலந்துண்ணும் போது அரிதாய மனித உடல் தாங்கிய ஒருவன், அதிலும் ஒரு பத்திரிகையின் 'ஆசிரியர் பதவியை வகிக்கும் ஒருவன், அப் பத்திரிகைகள் பலவற்றுள்ளும் வெறும் வியாபார நோக்கத்தோரணையில் இலாப மொன்றையே கருதி நடைபெறும் பல பத்திரிகைகள் போலன்றி உண்மை சீர்திருத்தத்தை வழங்குவதற்கென நடைபெறும் ஒரு சிலவற்றுள் ஒன்றாய் விளங்கும் மித்திரன் ஆசிரியனாய் விளங்கும் ஒருவன், அச்சிலவற்றுள்ளும் உறங்கிக் கிடக்கும் ஒரு சமூகத்தவரையே தட்டி எழுப்பி, 'பிணக்கற்ற— ஒத்த மனமுடைய உயர்தனிக் குடும்பமே போல் விளங்கி, பல்வகைத் துறைகளிலும் சிறப்பெய்தி மேன்மையுறச் செய்தல் வேண்டுமென்னும் பேரவாவுடன் மாதந்தோறும் உங்களனைவரையும் சந்தித்து அளவளாவும் நமது குல இளஞ் செல்வன் செங்குந்த மித்திரனின் ஆசிரியனாய்த் திகழும் ஒருவன் தனித்து விருந்துண்ணுதல் தகாது ஆகாது என பன்முறை என் உள்ளம் எனக்கு அறிவுறுத்தி வந்தது. எனவே, நான் அதற்குக் கீழ்ப்படிந்து வாசகர்களும் சிறிது அநுபவித்துக் கொள்ளுமாறு நமது தபால்பெட்டியைத் திறந்து வைத்து மித்திரனார் மூலம் அனுப்பிவைக்கத் தீர்மானித்துள்ளோம். பிரதி மாதமும் அவர் உங்களிடம் அதைக் கொண்டு வந்து காண்பிப்பார். அதில் உங்கள் மூளைக்கோ, மனதிற்கோ விருந்து இருக்குமாயின் அனுபவியுங்கள். அதே பெட்டியில் உங்கள் விருந்தையும் அனுப்பி வையுங்கள்.

ஏதோ அமுத்தல் விஷயம்; ஒன்றும் இராது என்று நினைத்துவிடப் போகிறீர்கள். கொஞ்சம் விளக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

அநேக அன்பர்கள் நமது சமூக சம்பந்தமாகவும், உலகப் பொது விஷய சம்பந்தமாகவும் பற்பல சந்தேகங்களை எழுப்பிக் கடிதம் எழுதுகிறார்கள். அந்த சந்தேகங்களை நிவர்த்திப்பதற்கு நமது மூளை பலவற்றைப் புரட்டிப் பார்க்கவேண்டியிருக்கிறது. பலரோடு கடிதப் போக்குவரத்து நடத்த வேண்டியதாக இருக்கிறது. நேரில் சென்று அநேகரிடம் வாதிக்க வேண்டியிருக்கிறது. இவ்வளவும் செய்து முடித்த பின் சந்தேகம் எழும்பியவர்கட்கு மட்டும் அந்த சந்தேகம் நிவர்த்திக்கப்படுவது நியாயமாகுமா? சந்தேகங்களோ அநேகமாய் அனைவருக்கும் உதிக்கத்தக்க பொதுவான சந்தேகங்களாகவே உள்ளன. எனவே, வாசகர்கள் எழுப்பிய சந்தேகங்களையும், அவற்றிற்கு ஆசிரியர் விடுத்த பதில்களையும் நமது தபால் பெட்டியில் போட்டு ஒவ்வொரு மாதமும் மித்திரனிடம் கொடுத்தனுப்புகிறோம்.

நீங்களும் உங்கள் சந்தேகங்களை நமது தபால் பெட்டிக்கு அனுப்புங்கள். அதனால் சிறந்த பயன் அனைவரும் அடையலாம்.

இம்மாதம் கிடைத்த சந்தேகங்களையும் ஆசிரியர் பதிலையும் கீழே தருகின்றோம்.

கேள்வி:—(1) நமது சமூகத்தவர் இந்தியாவில் எந்தெந்த மாகாணங்களிலும், சென்னை மாகாணத்தில் எந்தெந்த ஜில்லாக்களிலும், இந்தியாவுக்கு வெளியில் எந்தெந்த நாடுகளிலும் பரவி யிருக்கிறார்கள்.

(2) கஞ்சம், விசாகப்பட்டணம் ஜில்லாக்களில் நம்மவர்கள் வசிக்கிறார்களென்பது உண்மையா? உண்மையாயின் எந்தெந்த நகரங்களில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு நமது சங்கம், பத்திரிகை இவைகளைப் பற்றி ஏதாவது தெரியுமா?

D. K. சாமிநாத முதலியார்.

விடை: இந்தியாவில் சென்னை ராஜதானியில் தான் அதிகமாய் வசிக்கிறார்கள். பம்பாய் மாகாணத்தில் கராசசியில் மட்டும் 20-க்கு மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன. இதுவன்றி பம்பாய், கல்கத்தா, காசி போன்ற முக்கிய நகரங்கள் சிலவற்றில் உத்தியோக சம்பந்தமாகவோ, வேறு ஜீவனோபாய சம்பந்தமாகவோ சென்று வசிக்கும் குடும்பங்கள் ஒன்றிரண்டு உள்ளன. ஆனால், அங்கேயே நிலைத்து வசிப்பவர் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. சென்னை ராஜதானியில் தமிழ் ஜில்லாக்கள் எல்லாவற்றிலும் அதிகமாய்ப் பரவி யிருக்கிறார்கள். தெலுங்கு ஜில்லாக்களில் சித்தூர், நெல்லூர் ஜில்லாக்களில் ஒருவாறு பரவி தமிழ் ஜில்லாவிலுள்ள செங்குந்தர்களோடு தொடர்புடையவர்களா யிருக்கிறார்கள். கஞ்சம் விசாகப்பட்டணம் ஜில்லாக்களில் சில குடும்பங்கள் இருப்பதாகத் தெரிகின்றதாயினும் எந்தெந்த பாகங்களில் வசிக்கிறார்களென்பதும், எவ்வளவு குடும்பங்கள் இருக்கின்றன என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. அவர்களுக்கு நமது சங்கம், பத்திரிகை இவற்றைப் பற்றி ஒன்றும் தெரியாதெனவே நினைக்கவேண்டி யிருக்கிறது. அந்த ஜில்லாக்களுக்கு மித்திரன் அனுப்பப்படுவதில்லை. இதுவன்றி, சுதேச சமஸ்தானங்களிலே திருவாங்கூர், கொச்சி, மைசூர் முதலிய இடங்களில் வசிக்கிறார்கள். வெளிநாடுகளைப் பொருத்த வரையில் சிலோனிலும், ரங்கூனிலும், தென்னாப்பிரிக்காவில் ஜோஹானஸ்பர்க், டிரான்ஸ்வால், நேடால், டர்பான் முதலிய எல்லா முக்கிய நகரங்களிலும், தென் அமெரிக்காவில் பிரிட்டிஷ் கயானா போன்ற நகரங்களிலும், கொச்சின் சைனாவிலும், மலேயா ஸ்டேட்ஸைச் சேர்ந்த முக்கியமான நகரங்களிலும், போர்ட்டிக்ஷன், சைகோன் முதலிய முக்கிய இடங்களிலும், அந்தமான் தீவுகளிலும் பெருவாரியாக இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் அந்த நாடுகளிலேயே நிலைத்து விட்டவர்கள். மற்றவர்கள் இந்தியாவிலுள்ள தங்கள் சொந்த ஊர்களுக்குச் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை வந்து போகின்றனர்.

கேள்வி:—பர்மாவில் நமது குலத்தைச் சார்ந்த பிரபல வியாபாரிகள் இருக்கிறார்கள் என்பது உண்மையா? அவர்கள் இந்தியாவிலிருந்து குடியேறினவர்களா? அப்படியாயின் எந்த ஜில்லாவைச் சேர்ந்தவர்கள்?



விடை: பர்மாவில் வியாபாரத் துறையில் நம்மவர்கள் மிகவும் முன்னேறி யிருக்கிறார்கள். ரங்கூனில் சூரதி எ. பஜார், பி. பஜார், ஸ்காட் மார்க்கட்டு முதலிய முக்கிய வியாபார ஸ்தலங்களில் இவர்கள் மற்றவர்களைப் போல் மிகவும் செல்வாக்கான வியாபாரிகளாக விளங்குகிறார்கள். சூரதி எ. பஜாரில் இரண்டொரு கடைகள் தவிர மற்ற நூற்றுக் கணக்கான அரிசிக் கடைகளனைத்தும் நம்மவர்களால் நடத்தப்படுபவைகளெனத் தெரிகிறது.

வியாபாரத்தை உத்தேசித்து இவர்களனைவரும் இந்தியாவிலிருந்து சென்றவர்களே. பெரும்பாலும் இராமநாதபுரம் ஜில்லாவைச் சார்ந்தவர்கள். திருச்சி, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களைச் சேர்ந்தவர்களும் பலர் இருக்கிறார்கள். இராமநாதபுரத்தில் அபிராமம் என்ற ஊரிலுள்ளவ ரனைவரும் ரங்கூனில் வியாபாரம் செய்பவர்களே. இதனாலேயே அபிராமத்தை குட்டி ரங்கூன் என அழைப்பதுண்டு.

---

## தலைச் சங்கப் பிரசாரம்

இன்னும் சில தினங்களுள் திருவாளர், தி. அ. சண்முக முதலியாரவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவிலும், திருவாளர், ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் தென் ஆற்காடு, வட ஆற்காடு ஜில்லாக்களிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்யப் புறப்படுகிறார்கள். ஆங்காங்குள்ள குலாபிமானிகள் அவர்களை ஆதரித்து உதவி செய்யுமாறு வேண்டுகிறோம்.

அமைச்சர்

---

## தென்னிந்திய மகாஜன புத்தகசாலை

எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்

வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,

பவழக்காரத் தெரு, சென்னை.

# சமர்ப்பயாமி

சுபம், சோப்னம், மங்களம், சுமங்கலீ பவ, சுமங்கலீ பவ. இது புது ஆண்டில் ஆண் பெண் எல்லாருக்கும் மித்திரன் அனுப்பும் வாழ்த்துரை. இதைத் தட்டாமல் ஏற்றுக்கொள்ளுவீர்களென உங்கள் நன்மையைக் கோரும்—அதற்காகவே உழைக்கும் இளைஞன் மித்திரன் பூரணமாய் நம்புகிறான்.

* * *

சென்ற இரண்டு வாரங்களாக மித்திரன் ஆசிரியர் பாடு கொஞ்சம் கெடுபிடி என்றுதான் சொல்லவேண்டும். இந்தப் பாழும் தபாலாபீஸ் இல்லாதிருந்தால் ஆண்டு தோறும் ஒன்றரை ரூபாயை—கொஞ்சமும் குறையாமல்—முழுசாக, நமது மித்திரன் அநேகரிடம் தட்டிப் பிடுங்கிக்கொள்ள வழி யிருக்குமா? பல ஆயிரம் மைல்களுக்கப்புறமும் சென்று. ஊர் ஊராக—வீடு வீடாக நம்மவர்களைத் தேடி அலைய வேண்டிய தொல்லையும் மித்திரனுக்கு ஏற்பட்டிருக்குமா?

ஒருவாறு கௌரவமாக காலத்தைத் தள்ளக் கூடிய பல கனவான்கள் 'உறங்க வில்லை; ஓடுகிறார்கள், அதோபோய்விட்டார்கள். முன்னேற்றப் பந்தயத்தில்! கண்டிப்பாய் வெற்றி நம்மவர்களுடையதே. சங்க நாதம் தொனிக்கிறது. வெற்றி முரசம் முழங்குகிறது' என கனவு கண்டு விழித்துப்பார்த்து அது பொய்க்கன வென்பதும், நமது நிலை இன்னும் பிற்போக்கிலேயே இருக்கிற தென்பதும் உணர்ந்து சோகத்தில் மூழ்கி கஷ்டப்பட வேண்டி நேர்ந்திருக்குமா?

கண்டால் போதும்; வானவரும் தானவரும் நமக்கு இணையில்லையாமாறு மித்திரனது நட்பாளர்கள் செய்து விடுவார்கள், இதனினும் பேறு நமக்கு என்ன வேண்டும்? என்ற இன்பப் பெருக்குடன் வீட்டிலிருந்து புறப்படும் பிரசாரகர்கள் ஏமாற்றமும், துன்பமும், கலவரமும் மனக்கசப்பும் பெற்றுத் திரும்பவேண்டிய அவசியமும் ஏற்படாது. இவை யனைத்திற்கும் மேலாக இந்த இரண்டு வாரங்களாக மித்திரன் ஆசிரியர் ஓய்வின்றி கடிதங்களைப் பிரித்துப் பார்த்து கைகளும் கண்களும் சோர்வடைய வேண்டிய நிலையும் நேர்ந்திராது.

இத்தனை கஷ்டங்களை இந்தத் தபாலாபீஸ் நமக்கு விளைத்திருக்குமானால் நாம் அதனைச் சும்மா விடலாமா? பதிலுக்குப் பதில் சுடச்சுட திருப்பித் தரவேண்டாமா? என்ன செய்யலாம். யோசித்துக் கூறுங்கள்.

சரி, உங்கள் யோசனை நல்ல யோசனைதான். ஆம், அப்படித்தான் செய்யவேண்டும். ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாவைச் சேர்த்துத் தந்தால் தபாலாபீசர் பாடு திக்குமுக்காடிப் போகுமென்பதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். இப்போதுள்ள மூவாயிரம் சந்தாதாரும் தனித்தனி ஒவ்வொரு புதிய சந்தாதாரரையேனும் சேர்த்துத் தந்தால் ஆறாயிரமாகும். இந்த ஆறாயிரம் பேர்களுக்கும் அனுப்பப்படும் பத்திரிகைகளுக்கு மாதம் ஒரு முறை—இரவெல்லாம் கண் விழித்து முத்திரை அடிக்கவேண்டு மல்லவா? இது தக்கதண்டனை



யல்லவென நீங்கள் நினைக்கிறீர்களா? நமக்கெல்லாம் துன்பந் தந்த தபாலாபீசரை மாதந்தோறும் பழிக்குப் பழி ஒரு கை பார்த்துவிட நீங்களனைவரும் உதவி புரியப் பின்னிட மாட்டீர்களென்றே எண்ணுகிறேன்.

* * *

அது கிடக்கட்டும் ஆசிரியர் சோர்வுறும்படி பிரமாதமாய் என்ன கடிதங்கள் வந்திருக்குமென நினைக்கிறீர்கள்.

மித்திரனை வாழ்த்துகின்றன சில; அவனது சோர்வைத் துடைக்கும் வள்ளல்களைப் போற்றுகின்றன சில; அவனைத் தளராது ஆதரிக்கின்ற கருணையாளர்களைப் புகழ்கின்றன சில; அன்போடு அவனை அலங்கரித்து அனுப்பும் ஆசிரியரை மெச்சுகின்றன சில. உதாரணமாக சிலவற்றைக் கீழே குறிக்கிறோம்.

'நமது மித்திரன் சில திங்களாகப் புத்துயிர் பெற்று ஒளிர்வதைக் கண்டு பெரு மகிழ்ச்சி யடைந்தேன். அது, இன்னும் பல சிறப்பியல்கள் பெற்றுத் திகழவேண்டுமென இறைவனை வேண்டுகிறேன்' இது ஒரு கடிதம் (இதைப் பார்த்ததும் அனைவரும் இறைவனை வேண்டுவதோடு மட்டும் நின்றுவிடப் போகிறீர்கள். வேண்டுதலோடு முயற்சியும் செய்யுங்கள்.) இதற்கு முன்பே மித்திரன் புத்துயிர் பெற்றிருக்கிறானோ இல்லையோ? தெரியாது. இக்கடிதம் அவனுக்குப் புத்துயிர் வழங்குகிறதென்பதில் எவரும் சந்தேகப்படுவதற் கில்லை.

'உறங்கிக்கொண் டிருந்த மித்திரன் விழித்துக்கொண்டான், சில மாதங்களாக மிக ஒழுங்காக வந்துகொண் டிருப்பதைப் பார்த்து நாங்கள் சந்தோஷப்படுகிறோம்' இது மற்றொன்று. (நீங்கள் சந்தோஷப்படுவதைக் கேட்டு மித்திரனது உள்ளமும் பொங்குகின்றதாம்.)

'வள்ளல் என்றால் அவருக்குத் தகும். அவசியம் நேரும்பொதெல்லாம் தாமே வலிய வந்து உதவும் பெருந்தகைமை இக்காலத்தில் நமது சமூகத்தில் அவரிடமே காண்கிறோம். அவருக்கு நாங்கள் பெரிதும் கடமைப்பட் டிருக்கிறோம்.' இது இன்னொன்று. (அவருக்குக் கடமைப்பட வேண்டாம், மித்திரனுக்கு உங்கள் கடமையைச் செலுத்துங்கள் என வள்ளலார் தெரிவித்துக் கொள்ளுகிறார்.)

இத்தகைய கடிதங்கள் இன்னும் அநேகமாய் வந்து நிறைந்து கிடக்கின்றன. இவைகளால் மித்திரனாது உள்ளம் குளிர்ந்தது. உடல் பூரித்தது. தன்னையும் மறந்து ஆநந்தத் தாண்டவ மாடினான்.

* *

இவ்வுலக இன்பம் நிலைத்த தன்றென்பது நமக்குத் தெரிந்தது தானே. இத்தனை வாழ்த்துக் கடிதங்களின் மகிழ்ச்சியையும் அடக்கிவிடத்தக்க கடிதங்களும் அவ்வப்போது ஒன்றிரண்டு கிடைத்து வருகின்றன. திருப்பாற்கடல் பகுத்தறிவு சங்கத் தலைவர் திரு. கு. மெர. கங்காதர முதலியார் அவர்களுடைய கடிதம் ஒன்றே இதற்குப் போதிய உதாரணமாகும். அதனை உள்ளவாறே கீழே குறிப்பிடுகிறோம்.

லெட்டர் நெ. 57. 14-11-33.

ஐயா,

தங்கள் ஆபீசிலிருந்து 13-11-33-ல் சந்தா டிமாண்டு வரப்பெற்றேன். அதில் நான் கொடுக்கவேண்டிய சந்தா ரூ. 8—4—0-ம் டிஸம்பர் மாதத்திற்குள் அனுப்பவேண்டுமென தெரிவித்திருக்கிறீர்கள்.

தங்கள் செங்குந்த மித்திரனை நான் எந்தக் காலத்திலும் எதிர்பார்க்கவில்லை. (எதிர் பார்க்காமலே வந்ததை மட்டும் வரப்படுத்தியிருப்பீர்கள்) 31-12-30-ல் எங்கள் கிராமத்திற்கு வந்த மானேஜர் (மானேஜர் என்பது சந்தர்ப்பத்திற்கேற்ற யூகம் போறு) தி. அ. சண்முகம் அவர்களிடம் (பகுத்தறிவாளர் நடை) நேரில் சொல்லி இருக்கிறேன். அவர் பயணச் செலவுக்காக (ஒரு வேளை மாமன் மச்சானுகக்கருதி இருக்கலாம்) சந்தா ரூபாயாக 1-8-0 கொடுத்து (கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் மகானுபாவர்) இனி அனுப்பக்கூடாதெனச் சொல்லி அனுப்பினேன் (காரியாலயத்தாருக்கு இத்தகைய பகுத்தறிவாளரை நீக்க எப்படிமனை வரும்) அது முதல் மித்திரன் வர நான் பார்த்ததுமில்லை. படித்ததுமில்லை. படிப்பவர் பக்க நின்று கேட்டதுமில்லை (ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் திருவருட்பாவை வேறு எங்கே உபயோகித்துப் பார்ப்பது) ஆகையால் சந்தா பாக்கி கொடுக்க பிரியமில்லை (பணமாயிற்றே, சுவாமி! எப்படி பிரியம் வரும்) என்பதை தங்கள் மேன்மை பொருந்திய கனத்திற்கு (கனமல்ல, தங்களைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு இலேசு) மிக்க பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (வேண்டியதில்லை, அதிகார தோரணையில் உத்தரவிட்டிருக்கலாம்.)

இக்கடிதத்திற்குக் காரியாலயத்தார் விடுத்த பதிலையும் நீங்கள் பார்க்க விரும்புவீர்களல்லவா. அதையும் கீழே தருகிறோம்.

சென்னை, 1—1—34.

பகுத்தறிவின் வழி செல்லும் பான்மையுடையீர்!

புது ஆண்டு பிறக்கின்ற மங்கல ஓரையில் தங்கட்கு இவ்வாழ்த்துக் கடிதம் எழுத நேர்ந்தது தங்கள் அதிர்ஷ்டமோ, எமது நற்காலமோ அறியோம். 14-11-33-ந் தேதியுள்ள தங்கள் கடிதம் இவ்வாழ்த்து அனுப்புமாறு எங்களைத் தூண்டுகிறது. அதனை மீறுதற்கு இயலாதவர்களாய் 26-11-33-ல் ஒரு கடிதம் தங்கள் சமூகம் அனுப்பினோம். ஆனால், உண்மைப் பகுத்தறிவு நிரம்பிய தங்களைத் தரிசிக்க அஞ்சி, அக்கடிதம் என்னிடமே வந்து சரணாகதி அடைந்துவிட்டது. தி. அ. சண்முக முதலியார் 31-12-30-ல் தங்களூர் வந்தபோது வழிச் செலவுக்காக ரூ. 1—8—0 தாங்கள் வழங்கியதாகவும், அதற்குப் பிறகு மித்திரனைப் பார்த்ததுமில்லை......கேட்டதுமில்லை என உண்மையை அளந்து கூறியிருப்பதைப் பார்த்து தலைச்சங்க அங்கத்தினரனைவரும்...... ......வியந்து பாராட்டினர்.

எமது எழு வருட அநுபவத்தில் இதுவரை எவரும் வழிச் செலவுக்குத் தந்தவரில்லை. எமது மித்திரன் சந்தா ரூ. 8—4—0 தர தங்கள் பகுத்தறிவுள்ள மனம் இடந்தராமற் போயினும் ரூபா 1—8—0 வழிச் செலவின் பொருட்டு தர இசைந்த பெருந்தகைமைக்கு நாங்கள் யாது கைம்மாறு ஆற்றுவோம்.



தங்கள் பகுத்தறிவின் போக்கினையும் தங்களைத் தலைவராகக் கொண்டு நடைபெறும் பகுத்தறிவுக் கழகத்தின் சிறப்பினையும் தங்கள் கடிதம் நன்கு விளக்குகிறது. தங்கள் கடிதத்தை அனைவரும் படித்தறிய வேண்டியது அவசியமென நாங்கள் கருதுகிறோம். எனவே, நம் இருவர்களது கடிதங்களின் சாரமும் நமது மித்திரன் மூலமாய் ஏறக்குறைய ஆறாயிரம் மைல் தூரம் வரையில் பரவச் செய்யப்படுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அன்றியும், தங்கள் போன்றவர்களிடம் சந்தா பாக்கியை வசூலிக்காமலிருப்பது நியாயமன்றெனக் கருதிய காரியாலயத்தார் வசூலிப்பதற்கான முழு ஏற்பாடும் செய்து வருகின்றனரென்பதையும் சிறிது வருத்தத்துடன் குறிப்பிடுகின்றோம். எல்லாவற்றிற்கும் கடைசியாக, தங்கள் பகுத்தறிவை தங்கள் சங்க அங்கத்தினர்களுக்கும் போதித்து, அவர்களனைவரையும் வருகின்றவர் போகின்றவர்களுக்கெல்லாம் வழிச் செலவிற்கு வழங்கும் வள்ளல்களாக்காதிருக்குமாறு வேண்டுகிறோம்.

வாசகர்களே! இந்தக் கடிதங்களனைத்தையும் பார்த்து, மக்களின் மனப் போக்கையும் தன்மையையும் நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

## நமது மகிழ்ச்சி

குடவாசல் பஞ்சாயத்து போர்டு 6-1-34-ல் போர்டு தலைவர் ஸ்ரீ T. S. கிருஷ்ணசாமி அய்யங்கார் தலைமையில் கூடியபோது போர்டு மெம்பர் ஸ்ரீ செ. சா. க. உருத்திராபதி முதலியாரால் 'கைக்கோளர் வீதி' என்பதை 'செங்குந்த முதலியார் தெரு' என மாற்ற வேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதாகக்கேட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

வடார்க்காடு ஜில்லா திருவத்திபுரம் கிராம பஞ்சாயத்து கோர்ட்டு தலைவர் தேர்தல் 18-12-33-ல் நடைபெற்றதில் திரு. S. ஏகாம்பர முதலியார் அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டது கேட்டு நாம் அளவு கடந்த மகிழ்ச்சியடைகின்றோம். அவர் இன்னும் பல உயரிய கௌரவ பதவிகள் பெற்று சமூகத்திற்கு நல்ல கீர்த்தியைத் தருமாறு அருள்புரிய இறைவனை வேண்டுகிறோம்.

பல ஆண்டுகளாக ஹானரரி மாஜிஸ்ட்ரேட் பதவியை வகித்திருந்த திரு. க. சின்னசாமி முதலியார் அவர்களை மீளவும் அப்பதவிக்கு கவர்ன்மெண்டார் நியமித்துள்ளனர்.

திரு. மா. துரைசாமி முதலியார் அவர்களும், திரு. சி. சுப்பராய முதலியார் அவர்களும் ஹானரரி மாஜிஸ்ட்ரேட் பதவிக்கு கவர்ன்மெண்டாரால் நியமனம் செய்யப்பட்டனர்.

மூன்று காலி ஸ்தானங்களிலும் நம்மவர்களே நியமிக்கப் பெற்றிருப்பது பெரிதும் பாராட்டத் தக்கது. இவர்களுக்கு எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## தென்னிந்திய செங்குந்தர் நான்காவது மகாநாடு

## ஓர் வேண்டுகோள்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினருக்கும், வட ஆற்காடு ஜில்லா வாசிகளுக்கும் எனது தாழ்மையான வேண்டுகோள்.

ஐயா!

நமது மகாநாடு கூடுதற்கு மிகப் பொருத்தமான காலமாகிய தை மாதமும் கழிந்துவிடுகிறது. மித்திரனில் மகாநாட்டைப் பற்றிய விளம்பரம் இதுவரை வெளி வராமையால் ஒருக்கால் வேனிற்கால விடுமுறையை எதிர்பார்க்கிறார்களோ என சந்தேகிக்கவேண்டி யிருக்கிறது. அவ்வாறு நினைத்திருப்பின் அது சற்றும் பொருத்த மாகாதெனத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நம்மவர்களனைவரும் நெசவை மேற்கொண்டவர்களாகையாலும், நம்மவர்கள் நெசவின்றி விடுமுறையாகக் கருதும் காலம் தை மாதம் ஆகையாலும் அச் சமயம் மகாநாடு நடைபெறுவதுதான் மிகவும் பொருத்தமும், நியாயமு மாகும். அக்காலத்தில் நடைபெறுவதால் மகாநாட்டில் ஊக்க மில்லாதவர்களும் ஓய்வைக் கருதி வெளியூர் செல்வதை நிறுத்தி மகாநாட்டு விழாவில் கலந்துகொள்ள வரக் கூடும்.

இதை விடுத்து வேனிற்கால விடுமுறையை எதிர் பார்ப்பது காலந் தவறி மழை பெய்வதையொத்து அதிக பலன் தராமற் போகக் கூடும். ஈரோட்டில் அனைவரும் பிரமிக்கத் தக்க வகையில் மகாநாடு நடைபெற்றதற்கும், மக்கள் பல்லாயிரக் கணக்காகக் கூடியதற்கும் காரணம் அங்கு மகாநாடு தை மாதத்தில் கூடியதனாலேயாகும். மகாநாடு கூடுவது பொது ஜனங்களின் நன்மைக்காகவே அன்றி படித்தவர்களும், பணக்காரர்களுமாகிய ஒருசிலரது நன்மைக்காக அல்ல. அறிவாளிகளும், செல்வந்தர்களும் தங்களைத் தாங்களே திருத்திக்கொள்ளக் கூடியவர்கள். ஆகையால் அவர்களனைவரும் சேர்ந்து பெரும் பொருட் செலவில் மகாநாடு கூட்டுவதெல்லாம் ஏழைப் பொது மக்களைச் சீர் திருத்துவதற்கேயாகும். எனவே, எல்லோரும் மனைவி மக்களுடன் தயங்காமல் வருவதற்குற்ற காலத்தைக் கை நழுவ விடுவது நல்லதல்ல. நாள் நெருங்கிவிட்டதே. இந் நெருக்கமான காலத்தில் எப்படி மகாநாட்டை நடத்த முடியுமென நினைக்க வேண்டியதில்லை. கடந்த மகாநாட்டை சில தினங்களுக்குள் மிகச் சிறப்பாக நடத்தி நமது வள்ளலாரும், தஞ்சை ஜில்லா வாசிகளும் வழி காட்டி யிருக்கிறார்கள். மகாநாட்டை நெருக்கமாக வைத்துக் கொண்டு வசூலுக்குப் புறப்பட்டால் தீவிரமாக வசூலாகுமே யன்றி சில மாதங்களுக்குப் பின் நடத்துவதென்ற முடிவுடன் வசூலுக்குப் புறப்பட்டால் அனைவரும் நாள் கடத்திக்கொண்டுதான் போவார்கள். தலைச் சங்கத்தார் இவைகளை நன்கு கவனித்து மகாநாட்டுப் பொருப்பாளிகளைத் தூண்டி, தை மாத இறுதிக்குள் மகாநாட்டை நடத்த ஏற்பாடு செய்வார்களென நம்புகிறேன். மகாநாடு மிகச் சிறப்பாக நடைபெற வேண்டுமாயின் உணர்ச்சி யில்லாதவர்களும் ஊக்குவாரின்றித் தாமாக வருவதற்கேற்ற காலமாகிய தை மாதத்திலேயே மகாநாட்டைக் கூட்டுவிக்கத் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். அத்துடன், சென்ற மகாநாட்டின் வரவேற்புச் சபையார் வாக்கின்படி இம் மகாநாட்டில் மாதர் - மகாநாடும் நடத்த ஏற்பாடு செய்யப்படுமென்றும் பூரணமாய் நம்புகிறேன்.

ஏ. முனிசாமி, கலவை.

# அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்!

### சந்திரன் பச்சை நிறம்

இதுவரையில் அனைவரும் சந்திரன் வெண்ணிற முடையவனென எண்ணி யிருந்தனர். ஆனால் அது, பச்சை நிறமுடையதென ஒரு வானசாஸ்திரி கூறுகிறார். அன்றியும், நட்சத்திரங்கள் நீலம், செகப்பு, மஞ்சளாகிய பல நிற முடையவைகளாம்.

*　　　*　　　*

### தவளைக்கு மீசை

பான் ஊஞ்சான் என்னும் ஊரில் உள்ள கிணறொன்றில் $3\frac{1}{2}$ முழ நீளமுள்ள மீசையுடன் ஒரு தவளை வசிக்கிறதாம்.

*　　　*　　　*

### மோட்டாரைவிட மலிவான ஆகாய விமானம்

இரண்டு அல்லது 3 பேர் உட்காரக்கூடிய 'ஆடோகீரோ' என்ற புதுமாதிரியான ஆகாய விமானங்கள் கூடிய விரைவில் விற்பனைக்கு வெளிவருமெனத் தெரிகிறது. இவை சாதாரண மோட்டார்கார்களைவிட விலை குறைவாயிருக்கும். சோதனையில் மணிக்கு 140 மைல் வேகத்தில் ஓடியதாம். மற்ற விமானங்களைப்போல் நெடுந்தூரம் தரையில் ஓடிப்பறப்பது மில்லை. 15 கஜதூரம் ஓடியதும் உயரக் கிளம்பிவிடும். அது நேராக மேலே எழும்பி நேராகக் கீழே இறங்குவதால் பிரயாணம் செய்வோர் இறங்கவும் ஏறவும் மிகவும் சௌகரிய முடையதாம். அது தரைக்கு வெகு சமீபத்திலும் பறந்து செல்லக்கூடும். இவ்விமானங்களுக்கு இறகுகள் இல்லை.

*　　　*　　　*

### கடவுள் வணக்கம் செய்யும் மரங்கள்

பெய்க்சாகி என்னுமிடத்தில் ஓர் உயரமான பேரீச்சமரம் இரவு 1 மணிக்கு தரைக்கு வளைய ஆரம்பித்து, காலை முழுதும் தரையில் படிந்த வண்ண மிருக்கிறதாம். பகல் 2 மணிக்கு நிமிரத் தொடங்குகிறதாம்.

*　　　*　　　*

### 12-வயது பெண் நீந்தல் போட்டி

நீந்துதலில் பெண்களுக்குள் வங்காளத்தின் அரசியாகக் கருதப்படும் மிஸ். பனிகோஸ் என்பவள் 12 வயது சிறுமி. அவள் டில்லியில் நடைபெறப்போகும் அடுத்த நீந்தற்போட்டியில் கலந்து கொண்டு அகில இந்திய நீந்தல் தலைவியாக வர முயலப் போகின்றனாம். அத்துடன் அடுத்தபடியாக இங்லீஷ் கால்வாயைக் கடக்கவேண்டுமென்பதே அவளது விருப்பமெனத் தெரிவிக்கிறளாம்.

### பர்மாவில் பெரிய ரயில் பாலம்

பர்மாவில் அமராபுர ஸ்டேஷனி லிருந்து சகாயிங் ஸ்டேஷன் வரை ஐராவதி ஆற்றின் மீது 3,948 அடி நீளமுள்ள புதிய பாலம் ஒன்றை ரயில்வே கம்பெனியார் கட்டி முடித்துள்ளனர். இந்தப் பாலம் தண்ணீர் மட்டத்தி லிருந்து 102 அடி உயரமும், அஸ்திவாரத்தி லிருந்து 200 அடி உயரமும் உள்ளது. இது 1927-ல் கட்டத்தொடங்கி சென்ற ஆண்டில் முடிவுபெற்றது. இந்தப்பாலம் கட்டுவதற்குமுன், ரயிலில் பிரயாணஞ்செய்யும் ஜனங்கள் ஆற்றண்டை இறங்கி ரயில்வே கப்பலில் ஆற்றைக்கடந்து மற்றொரு பக்கத்தில் காத்துக்கொண் டிருக்கும் ரயிலில் ஏறுவது வழக்கம். இதனால் $1\frac{1}{2}$ மணி நேரம் வீணாகப்போகுமாம். இனி வண்டிகள் பாலத்தின் வழியாய் நேரே செல்லும். இப்பாலம் கட்டிமுடிக்க 143 லட்ச ரூபாய் செலவாயிற்றாம். பர்மா கவர்னர் இம்மாதம் 2-ந் தேதி இப்பாலத்தைத் திறந்து வைத்தார்.

*　　*　　*

### பசி தீர மருந்து

ருஷ்யாவில் ஒரு டாக்டர் இன்ஜங்ஷன் மருந்து கண்டுபிடித்திருக்கிறார். அதை ஒரு முறை இன்ஜங்ஷன் செய்து கொண்டால் 5 நாட்களுக்குப் பசி எடுக்காதாம்.

*　　*　　*

### பிளவைக்குப் பாம்பின் விஷம்

பிளவை நோய்க்குப் பாம்பின்விஷம் தகுந்த மருந்தெனக் கண்டு பிடிக்கப்பட் டிருக்கிறது.

*　　*　　*

### சந்திரனைக் காணும் வழி

ஒரு முகம்பார்க்கும் கண்ணாடியை உயரமான இடத்தில் சந்திரன் உருவம் அதில் தெரியும்படி பிடித்துக் கொண்டு அதன்மேல் சிறிய வஸ்துவைப் பெரிதாகக் காட்டும் கண்ணாடியை வைத்துப் பார்த்தால் சந்திரமண்டலத்திலுள்ள மலைகள், குன்றுகள், சமவெளிகள், பள்ளத்தாக்குகள், ஓடைகள் அனைத்தும் நன்றாகத் தெரியுமாம்.

*　　*　　*

### சீனாவின் பெரிய நதி

சீனாவில் ஜார்ஜர் ஆறு மிகப் பெரியதாகும். அது மொத்தத்தில் 3200 மைல் நீளமுள்ளது. அதில் 1600 மைல் வரை நீராவிப் படகுகள் செல்லலாம். 7,59,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள நிலம் இந்நதியின் நீர்ப்பாசன திட்டத்தில் தயாராகின்றது.

*　　*　　*

### வயிற்றில் 3 தலைகள்

அம்பாலா என்னுமிடத்தில் பிறந்த குழந்தை யொன்றுக்கு சிறிது நேரத்தில் வயிறு வீங்கியது. உடனே வயிற்றின் மத்தியிலும், இருபக்கங்களிலும் 3 தலைகள் தோன்றின. வலியால் குழந்தை அழுதபோது இந்த மூன்று தலைகளிலுள்ள வாய்களும் திறந்தன. குழந்தை 12 மணி நேரத்தில் யிர் துறந்தது

## வர்த்தமானம்

### சென்னை அரசாங்க உதவி

தஞ்சை ஜில்லாவில் சமீபத்தில் அடித்த புயலினால் நஷ்டமடைந்தவர்கள் துன்பத்தைப் போக்குவதற்காக சென்னை சர்க்கார் ரூ. 5000 கொடுக்க உத்தரவிட் டிருக்கின்றனர்.

### ஆநந்த விகடன் மானநஷ்ட வழக்கு

போட்டிப் பந்தயங்கள் சம்பந்தமாக ஆட்சேபகரமான கட்டுரைகளைப் பிரசுரித்ததற்காக சுதேசமித்திரன் ஆசிரியர்மீது ஆநந்த விகடன் ஆசிரியரும் சொந்தக்காரருமான ஸ்ரீ எஸ். எஸ். வாசன் ரூபா 35,000-க்கு நஷ்டஈடு வழக்கு தொடர்ந் திருக்கிறாராம்.

### புதையலில் புத்த விக்கிரகங்கள்

நாகப்பட்டணம் நாணயக்கார செட்டித் தெருவில் ஸ்ரீ வரதன் செட்டியாருக்குச் சொந்தமான நிலத்தை வெட்டுகையில் 13 புத்த விக்கிரகங்கள் கிடைத்தன. இன்னும் பலவற்றின் பாகங்கள் மட்டும் தெரிகின்றன. எல்லாம் தாமிரத்தாலும் வெண்கலத்தினாலும் செய்யப்பட்டவை. விக்கிரகங்களுக்குப் பக்கத்தில் எலும்புகளும் இருந்தன. முன்பு, நாகப்பட்டணத்தில் புத்த மதம் தலைசிறந்து விளங்கிய காலத்தில் ஓர் பௌத்த பெரியாரின் எலும்பின்மீது ஓர் புத்த ஆலயம் கட்டப்பட்டிருக்க வேண்டுமென கூறப்படுகிறது. ரெவின்யூ அதிகாரிகளிடம் விக்கிரகங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் மேற்பார்வையிலேயே இன்னும் தோண்டி வருகிறார்கள்.

### கிணற்றில் துப்பாக்கியும், ரிவால்வரும்

இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டையில் திருட்டு நகைகளுக்காக போலீசார் ஒரு கிணற்றைச் சோதனை யிட்டபோது மூன்று ரிவால்வரும் ஒரு துப்பாக்கியும் அதில் கண்டுபிடித்தார்களாம். ஒன்றிலும் அவைகளைச் செய்த கம்பெனியின் பெயரோ நம்பரோ காணப்படாமையால் அவை திருட்டுத்தனமாகச் செய்யப்பட்டவை என அபிப்பிராயப்படுகிறார்கள்.

### கண்டி அரசரின் மருமகள்

கண்டியை கடைசியாக அரசு புரிந்த விக்கிரம ராஜ சிங்கா அவர்களின் மருமகளான ஸ்ரீமதி ராணி பெங்கிட்டாஜ், கிமோனியா ஜ[illegible]ரத்தினம் தமது 80-ம் வயதில் சென்னை சைதாப்பேட்டையில் காலமானார்.

### எலியை ஒழிக்க ரூ. 6,250

திருவாங்கூர் சமஸ்தானத்தின் பள்ளத்தாக்கில் பிளேக் ஏற்படு [illegible] தக்க எலிகளை ஒழிப்பதற்காக திருவாங்கூர் சட்டசபை ரூ. 6,250 ஒதுக்கி யுள்ளது.

### நிக்கல் நாணயம்

நாமக்கல் தாலுக்கா காளப்ப நாய்க்கன் பட்டியில் ஒரு நாவிதன் இரண்டணா நிக்கல் நாணயம் தயாரித்ததாக 4 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

### கார்த்திகைத் திருநாளின் திருமணம்

திருவாங்கூர் மகாராஜாவின் தங்கையாகிய கார்த்திகைத் திருநாளாகிய இளைய ராணியின் திருமண முகூர்த்தம் தை மாதம் 12-ம் நாள் (25-1-34) மிகச் சிறப்பாக நடைபெற்றதெனத் தெரிகிறது. திருவனந்தபுரம் முழுதும் தேவலோகம் போல் அலங்கரிக்கப்பட்டுள்ளது. தைமீ 12 முதல் 18-ம் தேதி வரை திருமண மகோற்சவம் கொண்டாடப்படும். திருவாங்கூர் சமஸ்தான முழுவதும் 12-ந் தேதி முதல் 4 நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டிருக்கிறது.

### சர். சி. பி. ராமசாமி அய்யர் படப் பிரதிஷ்டை

சென்னை, மைலாப்பூர் ரானடே ஹாலில் சர். சி. பி. ராமஸ்வாமி அய்யரின் உருவப்படம் 28-12-33 தேதி காலை மிதவாதிகள் ஐக்கிய சபைத்தலைவர் ஸ்ரீ ஜே. என். பாசு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### பொன் விழா

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் பொன் விழா 24-12-33-ல் பண்டித மணி. மு. கதிரேசன் செட்டியார் தலைமையில் கொண்டாடப்பட்டது. கோவை ஸ்ரீ சி. கே. சுப்பிரமணிய முதலியார் அதனைத் திறந்து வைத்தார்.

### சென்னை சர்க்காரின் புது யோசனை

சென்னை மாகாண வியாபார சங்கம் ஏற்படுத்துவது பற்றியும், ஒரு வியாபார நிபுணரை நியமிப்பது பற்றியும், அரிசி வியாபாரத்தை பரிசீலனை செய்து மேற்பார்வையிட ஒரு புதிய உத்தியோகஸ்தரை நியமிப்பது பற்றியும் சென்னை சர்க்கார் யோசித்து வருகின்றனர்.

### புதிய கார்பொரேஷன் கமிஷனர்

சென்னை கார்பொரேஷன் கமிஷனராக ஸ்ரீ ஜனாப் ஜவாத் உசேன் நியமிக்கப்பட்டுள்ளார்.

### சலவைத் தொழிலாளர் மகாநாடு

தென்னிந்திய சலவைத் தொழிலாளர் மகாநாடு இம்மாதம் 22, 23-ந் தேதிகளில் திருச்சியில் நடைபெற்றது. சென்னை, அரசாங்க அமைச்சர் ஸ்ரீ பி. டி. ராஜன் மகாநாட்டைத் திறந்துவைத்தார்.

### தென்னாட்டில் பூகம்பம்

தென்னாட்டில் இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் சிவகாசி, ஸ்ரீ வில்லிபுத்தூர், ராஜபாளையம், சாத்தூர், விருதுநகர், திருநெல்வேலி, கல்லுப்பட்டி, திருமங்கலம் முதலிய இடங்களில்



12-1-34-ல் அதிகாலை 2-40-க்கு பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாகத் தெரிகிறது. வீடுகள் குலுங்கின. கட்டிலில் படுத்திருந்தோர் தூக்கி எறியப்பட்டனர். விருதுநகர் கோவில் யானை இந்த பூமி அதிர்ச்சியால் பல முறை அலறியதாம். இம்மாதிரியான பூகம்பம் சுமார் 30, 35 வருடங்கட்கு முன் ஒரு முறை ஏற்பட்டதாம்.

### சர். ஹபிபுல்லா திவான் பதவி ஏற்பார்

சர். மகமத் ஹபிபுல்லா சென்னைக்கு வந்திருக்கிறார். பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்தில் திருவாங்கூர் திவான் பதவியை ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாடு செய்துவருகிறார்.

### திருவாங்கூரில் தீண்டாமை ஒழிப்பு

திருவிதாங்கூர் சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஆலயப்பிரவேச விசாரணைக் கமிட்டி தனது அறிக்கையை சர்க்காரிடம் சமர்ப்பித்திருப்பதாகத் தெரிகிறது. அதில் தீண்டாமையை சட்ட பூர்வமாக ஒழிக்க சிபார்சு செய்யப்பட்டிருக்கிறதாம்.

## இந்தியச் செய்திகள்

ஹிலி என்ற ஊரில் வசிக்கும் கவிராஜ் முராரி மோகன கோஸ்வாமி என்பவர் அவ்வூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டு வெளிநாட்டுப் பொருளாக இருக்கிறதென்னும் காரணத்தால் கீழே போட்டுவிடும்படிக் கூறியதற்காக 18 மாதம் கடுங்காவல் தண்டனையும் 100 ரூபா அபராதமும் விதிக்கப் பெற்றனராம். அவர் அப்பீல் செய்திருக்கிறார்.

---

கராச்சிக்கு சமீபத்திலுள்ள கிராமம் ஒன்றில் ஒரு பெண் இரண்டு குரங்குகளைப் பெற்றெடுத்தனளாம்.

---

இமயமலையில் எவரெஸ்டு சிகரத்திற்கு ஏறும் முயற்சி நடைபெற்ற காரணத்தினாலேயே அந்தப் பாகங்களில் மழை பெய்யவில்லையென்றும், மலைத்தெய்வங்கள் கோபங் கொண்டுள்ளன வென்றும், தன் தேசத்துப் பொதுஜனங்கள் அபிப்பிராயப்படுவதால் இனி எவரெஸ்டு மலையின் மீது ஏறக்கூடாதெனத் திபெத்து மன்னர் பிரிட்டிஷாருக்குத் தெரிவித்திருக்கிறார்.

---

இந்திய ஜப்பான் ஒப்பந்தம் இந்தியாவிலேயே கையெழுத்திடப்படாமல் லண்டனில் கையெழுத்திடப்படுவது இந்தியாவின் கௌரவத்திற்கு பங்கம் விளைப்பதாகவும், இந்தியாவை அரசியல் அந்தஸ்தில் மிகத் தாழ்த்துவதாகவும் இருப்பதால் இந்தியா சட்டசபையில் அது பற்றி ஸ்ரீ தாஸ் அவர்களால் ஒரு அவசரப் பிரேரணை கொண்டுவர நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

---

மாகாண அரசியல் ஏற்பட்ட பின் 6 மாதத்திற்குள் சிந்து ஒரிசா இரண்டையும் தனி மாகாணமாகப் பிரிக்கும் திட்டத்தைத் தயாரிக்க அதிகாரிகளுக்குக் கட்டளை பிறந்திருப்பதாகத் தெரிகிறது.

டில்லியிலுள்ள ஜப்பானிய பருத்தித் தொழில் பிரதிநிதிகள் மகாத்மா காந்திக்கு ரூ. 110 அடங்கிய பணமுடிப்பு வழங்கினராம்.

---

கல்கத்தாவில் தோட்டிகள் வேலை நிறுத்தம் செய்து விட்டதால் தெருக்கள் மிக அசங்கியமா யிருக்கிறதென கலாசாலை மாணவர்களே தெருக்களை சுத்தம் செய்தனராம்.

---

பீகார் மாகாண சட்டசபையின் புதிய தலைவரான திரு ராஜந்தரி சின்ஹா என்பவர் ஏழைமாணவர்களின் உதவிக்காக அவரது சம்பளத்தில் ஒருபங்கு அதாவது மாதம் ரூ. 200 உதவிவர இசைந்து, அதனைத் தக்க மாணவர்களுக்கு வழங்குதற்காக ஒரு கமிட்டியையும் நியமித்துள்ளார். உபகாரம் தருவதில் ஜாதி, மத வேற்றுமை கவனிக்கப் படமாட்டாதாம்.

---

ரிசர்வ் பாங்கியின் இரு டிப்டி கவர்னர்களில் ஒருவராக இந்தியா சட்டசபைத் தலைவர் சர். சண்முகம் செட்டியார் நியமிக்கப்படலாம்.

---

வங்காள வாலிபர் சங்கத்தார் மகாத்மாவை வங்காளத்திற்கு வர வேண்டாமெனக் கேட்டுத் துண்டுப் பிரசுரங்களை வங்காளமுழுதும் வழங்கினர். அதில் காந்திஜி சமீபத்தில் உபவாசம் இருந்தபோது ரூ. 16,000 செலவழிக்கப்பட்டது உண்மைதானா என்பது பற்றியும், ஆயிரக்கணக்கானவர்கள் வேலையில்லாது திண்டாடும் இந்நாளில் இச்செலவு செய்ய மகாத்மா அநுமதிக்கலாமா என்றும், வங்கச் சிறையிலுள்ள கைதிகளைப் பற்றியும் மீரத் கைதிகளைப் பற்றியும் மகாத்மாவின் அபிப்பிராயம் யாது என்பது பற்றியும் கேள்விகள் விடுத்திருப்பதோடு அவர் வங்காளத்திற்கு வரும் போது அனைவரும் அவரை பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சர்வதேச சங்கத்தின் கிளை ஸ்தாபனம் ஒன்று காரச்சியில் 4-1-34-ல் ஏற்படுத்தப் பட்டது.

---

கல்கத்தாவில் சித்த ரஞ்சன வைத்திய சாலையில் சர்ஜிகல் வார்டு திறப்பதற்காக வேடி டாக்டர் ஸ்ரீமதி சரோஜன தத்தர் என்பவர் இரண்டு லட்ச ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார். இவ்வம்மையார் தான் வைத்தியக்கல்லூரியில் படிக்கத் தொடங்கியதிலிருந்து இதே நோக்கத்தோடு தான் யாதொரு சௌகரியமும் செய்து கொள்ளாமல் தனது வருமான முழுதையும் சேமித்து வந்தார். இரண்டு லட்ச ரூபாய் சேர்ந்ததும் அதை வைத்தியசாலையாரிடம் ஒப்படைத்தார். 4-1-34-ல் அவர் பெயராலேயே வார்டு திறக்கப்பட்டுள்ளது.

---

ரங்கூனில் டோங்கோவிலுள்ள பெரிய சிகரத்தின் உச்சியில் 60 அடி உயரமுள்ள சிலுவையை ஸ்தாபித்துள்ளனர். இது 20 மைல் சுற்றளவுக்குத் தெரியும்படி ஒருவகை விளக்குகளும் அமைத்துள்ளனராம்.



மகாத்மா டில்லிக்குச் சென்றிருந்தபோது அங்கு கதர் விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மகாத்மா தங்கியிருந்த சில நாட்களில் 29,251 ரூபாய்க்குக் கதர் விற்பனை யாயிற்றாம்.

---

அதிக நேரம் நீந்தி வெற்றி பெற்ற ஸ்ரீ. பி. கே. கோஷ் என்ற வங்க வாலிபருக்கு 29-12-33-ல் 1002 ரூபா 6 அணா அடங்கிய பணமுடிப்பு ஒன்றும் 5 தங்கப் பதக்கங்களும் பரிசாக அளிக்கப்பட்டன.

---

பம்பாயில் சமீபத்தில் ஒரு சர்வகட்சி மகாநாட்டைக்கூட்ட பலர் முயன்று வருகிறார்கள். வெள்ளை அறிக்கையிலுள்ள குறைகளைப்பற்றி ஏகோபித்த அபிப்பிராயத்தை பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குச் சமர்ப்பிக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இம்மகாநாடு கூட்டப்படுகிறதாம்.

---

15-1-34-ம் தேதி பகல் 2-30 மணிக்கு வட இந்தியாவில் பல இடங்களில் பூகம்பம் ஏற்பட்டது. இவ்வதிர்ச்சியால் பல கட்டடங்கள் நாசமுற்றன. பல்லாயிரக் கணக்கான உயிர்ச்சேதமும் ஏற்பட்டிருக்கிறது. பூகம்பத்தால் புதிய டில்லி, கல்கத்தா, பாட்னா, கயா, டார்ஜீலிங், லட்சுமணபுரி, காசி, நாகபுரி, ஜமால்பூர் முதலிய இடங்களில் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது.

## வெளியுலகச் செய்திகள்

அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்ததின் மூலம் கலால் வரியில் மட்டும் வருடத்தில் 470,000,00 டாலர் கிடைக்கக்கூடுமாம்.

---

இம்பீரியல் ஆகாய விமானக் கம்பெனியைச் சேர்ந்த 'அபோலா' என்ற விமானம் பிரான்சில் 900 அடி உயரத்திலுள்ள கம்பியில்லாத தந்திக் கம்பத்தில் மோதி நொறுங்கியது. அதிலிருந்த 10 பேர்கள் உருத்தெரியாதபடி வெந்துவிட்டனர்.

---

ஜப்பான் தனது ஆகாய விமான இராணுவ கப்பற் படைகளை மேலும் அதிகரிப்பதற்காக 201 கோடி 70 லட்சம் 'என்' ஒதுக்கி வைத்துள்ளது.

---

ஆஸ்திரேலியாவில் மார்டின் எட்வர்டு பர்க் என்ற உலோபி உயி இறந்த பின் அவருக்கு 50,000 பவுன் சொத்து இருப்பதாகத் தெரி தது. 700 பேர் அதற்கு உரிமை கொண்டாடினர். ஆனால் 7 பே தான் கோர்ட்டாரால் தகுந்த உரிமையாளர் எனத் தேர்ந்து எடுக்கப் பட்டனர்.

---

ஜப்பானிய கடற்படை நாலு வருஷ திட்டப்படி 684,300,00 என் செலவு செய்து 40 கப்பல்கள் கட்டுவதற்கு ஜப்பான் ஏற்பா செய்திருக்கிறது.

ஸ்பெயின் நாட்டில் புரட்சி நடந்துகொண் டிருக்கிறது. பாங்குகளும், செல்வந்தர் வீடுகளும் சூறையாடப்படுகின்றன. சர்ச்சுகள் கொளுத்தப்படுகின்றன.

---

இங்கிலாந்து வாசியான தோழியர் பாலி எழுதி வைத்த உயிலின் மூலம் ஐரிஷ் தலைவர் டிவேலராவுக்கு 3000 பொன் சொத்து கிடைத்திருக்கிறதாம்.

---

அமெரிக்க குடியரசு சர்க்கார் பல்லாயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்தும் இன்னும் 140 லட்சம் பேர்கள் வேலையில்லாமல் இருக்கின்றனர். இவர்களுடன் இன்னும் பல லட்சம் சேரக்கூடுமெனத் தெரிகிறது. இவர்களின் நிவாரணத்திற்காக சர்க்கார் 50 கோடி டாலர்கள் ஒதுக்கி வைத்துள்ளனராம்.

---

ரஷ்யாவை மற்ற நாடுகளுடன் போட்டியிடச் செய்வதற்கு அடுத்த ஐந்து வருட திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. முதல் ஐந்து வருட திட்டத்தைக் காட்டிலும் இந்த இரண்டாவது ஐந்து வருட திட்டத்தில் பொதுவாகப் பொருள்களின் உற்பத்தி 2½ மடங்கு அதிகமாக இருக்கும்படி, இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 7000 மைல் புதிய ரயில்பாதைகள் அமைக்கவும், விவசாய உற்பத்தி இருமடங்கு அதிகரிக்கவும், மோட்டார் உற்பத்தி 100-க்கு 36 வீதம் அதிகரிக்கவும், மாணவர்கள் எல்லாத் துறையிலும் 100-க்கு 50 வீதம் அதிகப்படவும் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

இத்தாலியில் சென்ற 10 வருடங்களில் 100-க்கு 61 வீதம் ஜனத்தொகை அதிகரித் திருக்கிறது. இதுபோல் வேறு எந்த நாட்டிலும் ஜனத்தொகை அதிகரித்தது கிடையாது. இத்தாலியில் தற்போது 4,20,00,000 பேர்கள் இருக்கிறார்கள்.

---

ஸ்ரீமதி கர்ட்ரூட் ஆல்பி என்பவள் லண்டன் ராயல் சித்திர சங்கத்திற்கு 95,000 பொன் நன்கொடை வழங்கி யுள்ளார்.

---

அமெரிக்காவில் தனிப்பட்டவர்களும் ஸ்தாபனங்களும் 100 டாலருக்கு மேற்பட்ட தங்கம் வைத்துக்கொண் டிருக்கக் கூடாதென்றும், அதிகமாயுள்ள தங்கத்தை உடனே சர்க்காரிடம் சேர்த்துவிட வேண்டுமென்றும் பொக்கிஷ இலாகா காரியதரிசி உத்தரவிட்டுள்ளார்.

---

ஜப்பான் சக்கிரவர்த்திக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது இதுவே பட்டத்திற் குரியது. இதுவரை ஜப்பான் அரசர் பரம்பரை தொடர்ந்து வந்துகொண் டிருக்கிறதாம். இது 125-வது பரம்பரையாகும். ஜப்பான் சட்டப்படி ஆண் குழந்தைகளே பட்டத்திற்குரியவர்களாவர்.

---

இந்து சீனாவிலிருந்து புறப்பட்ட ஒரு பிரெஞ்சு ஆகாய விமானம் கார்பிக்னி என்ற இடத்தில் திடீரென கீழே விழுந்து நொறுங்கியது. அவ்விபத்தால் இந்து-சீனா கவர்னர் ஜெனரல் உள்பட ஒன்பது பேர் தீயால் வெந்து மாண்டனர்.